நபி வழியில்
ஹஜ் - உம்ரா

الحج والعمرة والزيارة على ضوء الكتاب والسنة

(باللغة التاملية)



எம். ஜே. எம். ரிஸ்வான் மதனி

B.A (Hons) (Madinah), M.A (Cey).

محمد رضوان بن محمد جنيد

(خريج كلية الحديث الشريف والدراسات الإسلامية بالمدينة النبوية ،

ماجستير - جامعة فيرادنيا ، سريلانكا)

صفة الحج والعمرة والزيارة
على ضوء الكتاب والسنة

محمد رضوان محمد جنيد

(خريج كلية الحديث الشريف والدراسات الإسلامية بالمدينة النبوية ،

ماجستير - جامعة فيرادنيا ، سريلانكا)

நபி வழியில்

ஹஜ் - உம்ரா

எம்.ஜே.எம். ரிஸ்வான் (மதனி),

B.A (Hons) (Madinah), M.A (Cey).

நூலின் பெயர்	:-	நபி வழியில் ஹஜ் - உம்ரா
நூலாசிரியர்	:-	எம்.ஜே.எம். ரிஸ்வான் (மதனி)
பதிப்புரிமை	:-	ஆசிரியருக்கே
பக்கங்கள்	:-	180 பக்கங்கள்
பிரதிகள்	:-	1500
கனணி வடிவமைப்பு	:-	எம்.டீ.எம். அஸ்லம் (HND IT, B.Sc. Reading)
அச்சிட்டவர்	:-	எம். இஸட். முஹம்மத்
இரண்டாம் பதிப்பு	:-	11 - 11 - 2022
வெளியீடு	:-	ஸஹாபா பப்ளிகேஷன்
விலை	:-	ரூபா 600/-

உள்ளடக்கம்

பக்கங்கள்

அணிந்துரை

الحمد لله رب العالمين والصلاة، والسلام على رسوله المبعوث رحمة للعالمين وعلى آله وصحبه أجمعين وبعد.

ஒரு முஃமினின் எந்த ஒரு வணக்கமும் இறை திருப்தியையும், கூடவே இறை அங்கீகாரத்தையும் இலக்காகக் கொண்டிருத்தல் வேண்டும்.

ஒரு வணக்கம் அல்லாஹ்வால் ஏற்றுக்கொள்ளப்பட முக்கிய இரு நிபந்தனைகள் அதில் உள்ளடங்கி இருப்பது அவசியமாகும்.

1) இறை திருப்தியை நோக்கமாகக் கொண்டு உளத்–தூய்மையோடு செய்தல். (இக்லாஸ்),
2) குறித்த வணக்கத்தை இறைத் தூதரைப் பின் பற்றி மேற்கொள்ளுதல். (இத்திபா)

இவ்விரண்டு நிபந்தனைகளுமோ அல்லது அவ்விரண்டில் ஒன்றோ ஒரு வணக்கத்தில் இல்லாது போகும் போது அது அல்லாஹ்விடம் அங்கீகரிக்கப்படுவதில்லை.

இறைத் தூதர் முஹம்மது (ﷺ) அவர்கள் தன்னை ஹஜ் செய்யக் கண்ட முறைப்படி அதனை நிறைவேற்றுமாறு தனது தோழர்களைப் பணித்திருந்தார்கள் என்பதை புகாரி, முஸ்லிம் உள்ளிட்ட பல ஹதீஸ் கிரந்தங்களில் காண முடிகின்றது.

இரு பெரும் ஆன்மீக வணக்கங்களான ஹஜ்ஜும், உம்ராவும் நிறையப் பொருளாதாரங்கள் செலவு செய்து சிரமத்தோடு மேற்கொள்ளப்படுகின்ற வணக்கங்களாகும்.

பல்வேறுபட்ட கஷ்டங்கள், சிமரங்கள் மத்தியில் நிறையப்படுகின்ற மேற்படி வணக்கங்கள் எவ்வாறு நிறைவேற்றப்படல் வேண்டும் என்ற போதிய அறிவு இன்மையினால் பலர் அதன் நூறுவித பலனை இழக்கும் நிலைக்குச் செல்வது துரதிஷ்டமாகும் .

அந்தக் குறையை நிவர்த்திக்கும் உயர்ந்த நோக்கில் நபிவழியில் ”ஹஜ், உம்ரா வழிகாட்டி” என்ற நூலை நண்பர் அஷ்ஷைக் எம்.ஜே.எம். ரிஸ்வான் மதனி MA. (pera) அவர்கள் குர்ஆன், ஆதாரபூர்வமான ஹதீஸ்கள், இமாம்களின் விளக்கங்களை அடிப்படையாகக் கொண்டு தொகுத்திருப்பது மகிழ்ச்சி-யளிக்கின்றது.

பன்னூல் ஆசிரியரும், ஆழமான இஸ்லாமிய அறிவுப் பின்னணியும், பலதடவைகள் ஹஜ், உம்ரா செய்த அனுபவமும் கொண்ட ஷேக் ரிஸ்வான் மதனியால் இந்நூல் எழுதப்பட்டிருப்பது அதன் சிறப்பம்சமாகும்.

தமிழ் பேசும் சமூகத்திற்கு அவசியமானதும் காலத்திற்கு தேவை-யானதுமான ஒரு முயற்சியாகவே இதனைக் காண்கின்றேன்.

இந்நூல் ஹஜ், உம்ராவிற்காக செல்கின்ற சகோதர, சகோதரிகள் கட்டாயம் படித்துப் பயன் பெற வேண்டிய நூலாகும்.

சகோதரர் ரிஸ்வான் மதனியின் இந்தப் பணியை அல்லாஹ் அங்கீகரித்து அருள் செய்வதோடு, அவருக்கு சிறந்த தேக ஆரோக்கியத்தையும் வழங்குவானாக என அவனைப் பிரார்த்தனை செய்கின்றேன்.

கலாநிதி
எம் . எல். முபாரக் மதனி Ph.D.
பணிப்பாளர்,
தாருல் ஹுதா அரபு இஸ்லாமிய கற்கைகள் மகளிர் கல்லூரி, மருதமுனை.
10.10.2022



முன்னுரை

புகழ் அனைத்தும் அல்லாஹ் ஒருவனுக்கே சொந்தமானது. அவனது அருளும் சாந்தியும் நபிகள் நாயகம் முஹம்மது (ﷺ) அவர்கள் மீதும், அவர்களின் வழிநடந்த நபித்தோழர்கள், இமாம்கள், உலக முஸ்லிம்கள் அனைவர் மீதும் உண்டாகுவதோடு, மண்ணறைகளில் வாழ்ந்து கொண்டிருக் கின்ற சகோதர, சகோதரிகள் அனைவர் மீதும் நிலையாக உண்டாகட்டுமாக!

புனித ஹஜ் கடமையினை நிறைவேற்ற இருக்கும் சகோதரர்களே! அர்ஷின் இரட்சகன், அகிலங்களின் அதிபதி, அல்லாஹ்வின் கட்டளைக்கு அமைவாக இறை நேசர் என்ற சிறப்புப் பெயருக்குச் சொந்தக்காரரான நபி இப்ராஹீம் (عليه السلام) அவர்கள் புனித கஃபாவைக் கட்டி முடித்ததோடு விடுத்த அழைப்பிற்கு பதிலளிக்க அல்லாஹ் அருள் செய்த பயணமாக இப்பயணம் இருக்கின்றது.

எனவே, அவரது அந்த அழைப்பை அல்லாஹ்வின் நாட்டத்தால் ஏற்று, நீங்கள் உங்கள் வியர்வை சிந்தி, சிரமப் பட்டு பல ஆண்டுகள் சேமித்த பல இலட்சம் ரூபாய்களை சில நாட்களில் செலவு செய்வதன் மூலம் உலகிலேயே முதல் இறை இல்லமான புனித கஃபாவிற்கு ஹஜ்ஜுக்காகச் செல்லும் பாக்கியத்தைப் பெற்றுள்ளீர்கள். (அல்ஹம்து லில்லாஹ்).

இந்நிலையில் உங்கள் 'ஹஜ்' வணக்கம் அல்லாஹ்வினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட வணக்கமாக இருக்கவும் அப்புனித இல்லத்தில் நீங்கள் எமக்காக பிரார்த்திக்கவும் முடியுமான அளவு முயற்சிகள் செய்து, புனித அல்குர்ஆன் மற்றும் ஆதாரபூர்வமான ஹதீஸ்கள், ஷரீஆத் துறைசார் இமாம்களின் தெளிவுரைகள் ஆகியவற்றில் இருந்து ஹஜ், உம்றா, ஸியாரத் தொடர்பான அம்சங்களை உள்ளடக்கிய இந் நூலை இரண்டாம் பதிப்பாக வெளிடுகின்றோம்.

வாழ்வில் ஒரே ஒருதடவை மாத்திரம் ஹஜ் செய்த இறுதி இறைத்தூதர் பாசத்திற்குரிய முஹம்மது நபி (ﷺ) அவர்கள் தனது தோழர்களுக்கு 'ஹஜ்' வணக்கம் தொடர்பான அடிப்படை வழிகாட்டல்கள் அனைத்தையும் மிகத் தெளிவாகவும் துல்லியமாகவும் கற்றுத்தந்திருப்பதை அவர்களின் தோழர்கள் மூலம் அறிவிக்கப்படுவதை கண்ணியத்திற்குரிய இமாம்கள் பதிவு செய்துள்ளதைப் படிக்கின்ற போது உண்மையில் ஆச்சரியமாக உள்ளது. அவ்வளவு விரிவும், விசாலமும், நெகிழ்வும் கொண்ட விளக்கமாக அவை திகழ்கின்றன.

ஹஜ், உம்ரா மற்றும் அவற்றுடன் தொடர்பான ஹதீஸ் மற்றும் ஃபிக்ஹுத் துறை சார்ந்த இமாம்களால் தொகுத்தளிக்கப்பட்டுள்ள விளக்கங்களை அடிப்படையாகக் கொண்டு எந்த மத்ஹபும் சாராது நபிவழியில் ஹஜ், உம்றா, ஸியாரா பற்றிய விளக்கங்கள் -இறையருளால்- இந்நூலில் முன் வைக்கப்படுகின்றன.

நாம் எடுத்துக் கூறும் கருத்துக்கள் சில வேளை மத்ஹப் சார்ந்த அல்லது மரபு மற்றும் பாரம்பரிய வழியில் மார்க்கத்தைப் பின்பற்றும் நமது அருமைச் சகோதரர்களுக்கு ஆச்சரியத்தை தந்தாலும் இந்நூலில் உண்மைக்குப் புறம்பானவைகளோ அல்லது இஸ்லாத்திற்கு முரணான செய்திகளோ கிடையாது என்று நாம் சாட்சியம் கூறுகின்றோம்.

இந்நூலில் காணப்படும் செய்திகள் நாமறிந்தவரை அல்குர்ஆனுக்கும், ஆதாரபூர்வமான நபிவழிக்கும் உடன்பட்டவையாகும். அவற்றையே இங்கு நம்மால் தொகுக்கப்பட்டுள்ளதாக நாம் காண்கின்றோம் என்பதை மீண்டும் நினைவுபடுத்துகின்றோம்.

ஆகவே, இதில் உள்ளவற்றை நீங்கள் மிகக் கவனமாகவும், நிதானமாகவும் படியுங்கள். அதில் ஆதாரமற்றவை என உங்களால் சரியான ஆதாரத்துடன் சுட்டிக்காட்டப்படுபவை –இன்ஷா அல்லாஹ்– மூன்றாம் பதிப்பில் திருத்திக் கொள்ளப்படும்.

ஹஜ் முகவர்களால் பிரசுரிக்கப்படும் பல நூல்களில் காணப்படும் ஆதாரமற்ற, மார்க்கத்திற்கு நேர்முரணான மாபெரும் தவறுகளோ, அல்லது வெறுக்கப்பட்ட பித்அத்தான திக்ர், துஆக்களோ அல்லாஹ்வின் உதவியால் இதில் இருக்கவே முடியாது என்பதை எம்மால் உறுதியாகக் கூற முடியும்.

பல சிரமங்களுக்கு மத்தியில் நீங்கள் மேற்கொள்கின்ற உங்களின் “ஹஜ்” அல்லாஹ்வால் அங்கீகரிக்கப்பட்ட, இறைத் தூதர் வழியில் அமைந்த ஹஜ்ஜாக மாற வேண்டும் என்பது நமது ஆழ்மனதில் வேரூன்றிய எண்ணமாகும்.

அல்லாஹ்வின் அருளினால் இந்நூலின் முதலாம் பதிப்பு பல அமைப்பினரதும், ஜமாஅத்தினரதும் மதிப்பையும் துஆவையும் பெற்ற காரணத்தினால் மீண்டும் பலரது பிரார்த்த னையை தேடிக் கொள்ளும் நோக்குடன் அதிகப் படியான செய்திகளோடு இரண்டாவது பதிப்பாக வெளியிடப்படுகின்றது.

இந்நூல் ஆரம்பகால மற்றும் நவீனகால பல அறிஞர் களின் நூல்களின் துணை கொண்டே தொகுக்கப்பட்டுள்ளது. இதில் ஹதீஸ்களின் இறுதியில் தரப்படும் இலக்கம் ஷாமிலா மின் நூலக இலக்கமாகும் என்பதைக் கவனத்திற் கொள்ளவும்.

இதைப் படித்து அமுல் செய்யும் பாக்கியம் பெறும் நீங்கள் ஹஜ்ஜின் இறுதியில் இதன் நன்மைகள் பற்றி உரையாடுவீர்கள். அல்லாஹ்விடம் எமக்காக நிச்சயம் பிரார்த்தனையும் செய்வீர்கள். அதையே நாமும் உங்களிடம் எதிர் பார்க்கின்றோம். அல்லாஹ் நம்மனைவரையும் பொருந்திக் கொள்வானாக!

இறுதியாக...

இந்நூல் வெளிவர பூரண உடல் ஆரோக்கியத்தையும் அருள்பாக்கியத்தையும் மார்க்க விளக்கத்தையும் எனக்கு வழங்கிய அல்லாஹ்வைப் புகழ்கின்றேன். மேலும், எனக்கு அறிவைப் போதித்த எனது ஆசிரியர்கள், விரிவுரையாளர்கள் அனைவருக்குமாக அல்லாஹ்விடம் பிரார்த்தனை செய்வது போன்று கற்றல், கற்பித்தல், தஃவா என அனைத்துக்கும் எனக்கு எல்லா வகையிலும் உதவியாகவும் பக்க பலமாகவும், துணையாகவும் இருக்கின்ற பாசமிகு எனது மனைவி மக்கள், மற்றும் நண்பர்கள், ஊக்கமளித்தோர் அனைவரையும் பிரார்த்தனைகளில் இணைத்துக் கொள்கின்றேன்.

இந்நூலிற்கு அணிந்துரை வழங்கிய கலாநிதி அஷ்ஷைக் எம். எல். முபாரக் மதனி Ph.D. அவர்களுக்கும், இந்நூல் வெளிவர தட்டச்சுப் பணியில் உதவிய நண்பர் எம்.டீ.எம். அஸ்லம் (HND IT, B.Sc. Reading), அதன் பக்கங்களில் படங்கள் இணைத்து அழகிய முறையில் வடிவமைத்து அச்சிட உதவிய வெலிகம, எம்.இசட். முஹம்மது, தமிழ் பிழைகள் திருத்த உதவிய ஏ.எல்.ஏ. ஸலாம் ஆசிரியர், நண்பர்களான மடவளை ரஸீன் அக்பர் மதனி மற்றும் மீள்வாசிப்பில் உதவிய அப்துர் ரஹீம் அக்பர் நளீமி, ஓட்டமாவடி, அந்நூர் அகடமி க.பொ.த. உயர்தரப் பிரிவு மாணவன் என்.எம். நிஃப்லான் ஆகியோர் முக்கிய பங்காளிகளாவர். அல்லாஹ் அவர்களுக்கும் ஈருலகிலும் அருள் புரிவானாக எனப் பிரார்த்திக்கின்றேன்.



இவண்:-
எம். ஜே. எம். ரிஸ்வான் மதனி M.A. (Cey)
E-mail: rizwanmadani71@yahoo.com



01 புனித கஃபாவின் புனிதத்துவமும் சிறப்பும்

புனித “ஹஜ்” கடமையினை மேற்கொள்ளும் செல்வந்தப் பெருமக்கள் புனித மக்கா மண்ணின் புனிதத்துவம், அதன் வரலாற்றுப் பின்னணி பற்றி அறிவதால் தாம் கஷ்டப்பட்டு திரட்டிய செல்வம் இவ்வளவு புனிதமிக்க தளங்களில் அகில இரட்சகனாகிய அல்லாஹ்வை வணங்கி வழிபடவும் அவன் செய்த நன்றிகளை நினைவு கூர்ந்து தியானிக்கவும், அவன் திருப்தியை நாடியும் செலவு செய்யப்படுவதையிட்டு கவலை கொள்ளாது அகமகிழ்வடைய வேண்டும் என்ற நோக்கில் கஃபாவின் புனிதம் பற்றிக் இங்கு சுருக்கமாக விவரிக்கப் படுகின்றது.

இது ஹாஜிகள் தமது பொருளாதாரம் எவ்வளவு தூரம் தூய வழியில் திரட்டியதாக இருக்க வேண்டும் என்று தம்மைப் பற்றி சுய பரிசோதனை செய்ய வழிவகுக்கும் என்பதில் நமக்கு உறுதியான நம்பிக்கையுண்டு. எனவேதான் இங்கு மக்காவின் புனிதத்துவம் பற்றி சுருக்கமாக எழுதப்படுகின்றது.

அல்லாஹ்வால் புனிதமாக்கப்படுதல்:

உலகில் மனிதர்களால் தோற்றுவிக்கப்பட்ட சமயங்கள், அவற்றைப் பின்பற்றும் மனித சிந்தனைகளில் இருந்து வெளிப்படுகின்ற கற்பனைக் கதைகளால் அவற்றைப்

பாதுகாக்க முயற்சிக்கப்படுவது போன்று, உலகில் அது வழக் கொழிந்து செல்லாதிருக்க அவை சார்ந்த அரசுகளாலும் மதப் போதகர்களாலும் தொல்லியல், புராதனம் என்ற பெயர்களால் அவை புனிதப் பிரதேசங்களாகப் பிரகடனம் செய்யப்படுகின்றன.

அவ்வாறு அறிமுகம் செய்யப்படும் பிரதேசங்களில் மனித சமூகத்தின் சீரழிவின் பிரதான செயற்பாடுகள் என வர்ணிக்கப் படும் மது, பாலியல் துஷ்பிரயோகங்கள், விபச்சாரம், கற்பழிப்பு, கொலை, கொள்ளை போன்ற சமூகச் சீரழிவுகளைத் தடுக்க எவ்வித வரையறைகளும் விதிக்கப்படுவதில்லை. மாற்றமாக அவைகள் அங்கு தாராளமாக அரங்கேற்றப்படுகின்றன.

இஸ்லாத்தில் புனிதப் பிரதேச பிரகடனமும், அவற்றின் நெறிமுறை இயல்புகளும், அங்கு கடைப்பிடிக்க வேண்டிய உயரிய வழிமுறைகளும், மேற்படி மத சித்தாந்த வரையறை களில் இருந்து முற்றிலும் வேறுபட்டதாகும்.

புனித மக்காவின் புனிதத்துவம் என்பது அகிலங்களின் இரட்சகனாகிய அல்லாஹ்வினால் வானங்கள், பூமி படைக்கப் பட்ட போதே பல மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னால் பிரகடனம் செய்யப்பட்டதாகும் என்பது இஸ்லாமிய நம்பிக்கையாகும்.

உலகில் எந்த ஒரு சட்டமானாலும் அது எந்த இடத்தில் இருந்து பிறப்பிக்கப்படுகின்றது என்பதை கவனத்தில் கொண்டுதான் அதன் பெறுமானமும், மதிப்பும் அந்தஸ்தும் மக்கள் மனங்களில் வித்தியாசப்படுகின்றன, கண்ணியம் பெறுகின்றன.

அந்த அடிப்படையில் மக்காவின் புனிதத்துவத்தை நோக்குவோமாயின், மகத்துவமும் கண்ணியமும் நிறைந்த உயர்ந்த அர்ஷின் இரட்சகனாகிய அல்லாஹ்வினால் அது பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

இது மாத்திரம் அதன் புனிதத்துவத்தை பறைசாட்டப் போதுமான சான்றாகும். இதனை பின்வரும் நபிமொழி உறுதி செய்கின்றது.

عَنْ أَبِي شُرَيْحٍ أَنَّهُ قَالَ لِعَمْرِو بْنِ سَعِيدٍ وَهُوَ يَبْعَثُ الْبُعُوثَ إِلَى مَكَّةَ ائْذَنْ لِي أَيُّهَا الْأَمِيرُ أُحَدِّثْكَ قَوْلًا قَامَ بِهِ النَّبِيُّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ الْغَدَ مِنْ يَوْمِ الْفَتْحِ سَمِعَتْهُ أُذُنَايَ وَوَعَاهُ قَلْبِي وَأَبْصَرَتْهُ عَيْنَايَ حِينَ تَكَلَّمَ بِهِ حَمِدَ اللهَ وَأَثْنَى عَلَيْهِ ثُمَّ قَالَ إِنَّ مَكَّةَ حَرَّمَهَا اللهُ وَلَمْ يُحَرِّمْهَا النَّاسُ (متفق عليه)

உமையா ஆட்சியில் மதீனாவின் கவர்னராக இருந்த அம்ர் பின் ஸயீத் (அப்துல்லாஹ் பின் சுபைர் (ﷺ) அவர்களுடன் போர் செய்வதற்காக) மக்காவிற்கு படைகளை அனுப்ப முடிவு செய்த போது நபித்தோழர் அபூஷுரைஹ் (ﷺ) அவர்கள், அமீர் அவர்களே! மக்கா வெற்றி கிடைத்த மறு தினம் நபிகள் நாயகம் (ﷺ) அவர்கள் கூறிய செய்தியினை நான் அறிவிப்பதற்கு கொஞ்சம் எனக்கு உத்தரவு தாருங்கள் என வேண்டிக் கொண்ட பின்னர், எனது இருசெவிகளும் அதனை செவிமடுத்தன, எனது இதயம் அதனை பதிந்து கொண்டது, எனது இரு கண்களும் அவர்கள் பேசிய போது பார்த்தன எனக் கூறிவிட்டு நபி (ﷺ) அவர்கள் அல்லாஹ்வைப் புகழ்ந்த பின்;

“நிச்சயமாக மக்காவை அல்லாஹ்வே புனிதப்படுத்தினான். மனிதர்கள் அதனைப் புனிதப்படுத்தவில்லை. எனக் கூறினார்கள். (என மக்காவுடன் தொடர்புடைய நீண்ட ஹதீஸை அறிவித்தார்கள். (நூல் புகாரி, முஸ்லிம்)

ஹதீஸ் அறிவிக்கப்பட்டதன் பின்னணி :

முஆவியா (ﷺ) அவர்களின் மரணத்தின் பின் அவர்களது மகன் (யஸீத் என்பவர் ஆட்சியில் அமர்ந்தார். அவருக்கு மக்கள் “பைஅத்” செய்தனர். ஆனால் ஹுஸைன்

(ﷺ) அவர்களும் அப்துல்லா பின் சுபைர் (ﷺ) அவர்களும் அவருக்கு “பைஅத்” தர மறுத்து விட்டனர். அது மட்டுமின்றி, அப்துல்லாஹ் பின் சுபைர் (ﷺ) பிரிந்து மக்காவில் தனியாட்சி செய்து கொண்டிருந்தார்கள். ஹுஸைன் (ﷺ) அவர்கள் கூஃபா சென்றார்கள். அப்துல்லாஹ் பின் சுபைர் (ﷺ) அவர்கள் பைஅத் தர மறுத்தால் அவர்களுக்கு எதிராக போராடுவதற்காக அவர்களின் உடன்பிறந்த சகோதரர் அம்றுபின் சுபைர் என்பவரின் தலைமையின் கீழ் மதீனாவின் கவர்னராக இருந்த “அம்ர் பின் ஸயீத்” என்பவர் மக்காவிற்கு பெரும் படையை அனுப்பினார்.

‘ஆயிதுல் பைத்’ (عائذ لبيت) (கஃபாவில் பாதுகாப்பு வேண்டி தஞ்சம் புகுந்தவர்) என்ற பெயருக்குச் சொந்தக் காரரான அப்துல்லாஹ் இப்னு சுபைர் (ﷺ) அவர்கள் மக்காவில் தஞ்சம் புகுந்திருந்தார்கள். அவர்களுடன் போர் செய்வது கவர்னர் அம்ருடைய படையின் நோக்கமாக இருந்தது. அதனால் நபித்தோழர் அபூஷுரைஹ் (ﷺ) அவர்கள் இந்த நபி மொழியை அம்ர் அவர்களிடம் (உரிய நேரத்தில்) எடுத்துக் கூறினார்கள். (நூல்: ஃபத்ஹுல்பாரி)

இந்த நபி மொழியில் மக்காவின் புனிதம் பற்றி எடுத்துக் கூறப்பட்டிருப்பதையும் இப்புனித வீட்டில் நல்லறம் செய் வதற்குப் பதிலாகக் கொலை, கொள்ளை போன்ற தீய செயல்களில் ஈடுபடுவோர், அல்லாஹ்வினால் அதற்கு வழங்கப்பட்டுள்ள புனிதத் தன்மைக்கு மாசு கற்பித்தவராக கணிக்கப்படுவர் என்பதில் ஐயமில்லை என்பதையும் அறியலாம். (அல்லாஹ் மிக அறிந்தவன்)

ஐயம்:

நபி இப்ராஹீம் (عليه السلام) அவர்கள் மக்காவைப் புனிதப் படுத்தியதாக புகாரி, முஸ்லிமில் இடம் பெறும் பின்வரும் செய்தி மேற்படி ஹதீஸுக்கு முரண் இல்லையா?

إِنَّ إِبْرَاهِيمَ حَرَّمَ مَكَّةَ وَدَعَا لأَهْلِهَا وَإِنِّى حَرَّمْتُ الْمَدِينَةَ كَمَا حَرَّمَ إِبْرَاهِيمُ مَكَّةَ وَإِنِّى دَعَوْتُ فِى صَاعِهَا وَمُدِّهَا بِمِثْلَىْ مَا دَعَا بِهِ إِبْرَاهِيمُ لأَهْلِ مَكَّةَ .

(أخرجه مسلم : ٣٣٧٩)

பொருள்:

"யா அல்லாஹ் நிச்சயமாக (துந்தை) இப்ராஹீம் (عليه السلام) அவர்கள் மக்காவைப் புனிதப் பிரகடனம் செய்து அதற்காக பிரார்த்தனையும் செய்தார்கள். இப்ராஹீம் (عليه السلام) அவர்கள் மக்காவைப் புனிதப்படுத்தி அதற்காக பிரார்த்தனை செய்தது போன்று நானும் மதீனாவைப் புனிதப்படுத்தி அதன் "முத்து, மற்றும் "ஸாஃ" என்ற அளவு நிறுவையிலும் (பரகத் வேண்டி) இப்ராஹீம் நபி (صلى الله عليه وسلم) அவர்கள் பிரார்த்தனை செய்ததை விட இரு மடங்குகள் வேண்டிப் பிரார்த்தனை செய்துள்ளேன் என நபிகள் நாயகம் (عليه السلام) அவர்கள் கூறினார்கள்.

(நூல்: முஸ்லிம்)

புகாரி போன்ற ஹதீஸ் நூல்களில் தபூக் சென்று திரும்பிய இறைத்தூதர் அவர்களுக்கு உஹத் மலை தென்பட்டது. அப்போது இந்த மலை நம்மை நேசிக்கின்றது. நாமும் அதனை நேசிக்கின்றோம் எனக் கூறி விட்டு மேற்படி பிரகடனத்தைக் கூறியதாக இடம் பெற்றுள்ளது.

இது முரண்பாடு போலுள்ளதே! மக்காவை அல்லாஹ் புனிதமாக்கியதாகக் கூறப்படுகின்றது. இங்கு இப்ராஹீம் நபி அவர்கள் பிரகடனம் செய்ததாக வந்துள்ளது. எனவே, இது முரண்பாடாச்சே! இந்த முரண்பாட்டை எவ்வாறு நீக்கலாம் என்ற கேள்வி உங்களிடம் எழலாம்.

சந்தேக நிவர்த்தி:

இந்த நபி மொழிக்கும் மேலே உள்ள நபி மொழிக்கும் இடையில் எவ்வித முரண்பாடும் இல்லை. மேலே உள்ள நபி மொழி பிரகடனத்தின் ஆரம்பத்தையும் அதன் பிறப்பிடத்தையும் குறிப்பிடுகின்றது.

இந்த நபி மொழி இப்ராஹீம் நபி (عليه السلام) அவர்களால் உலகில் அது மீண்டும் புனிதப் பிரகடனம் செய்யப்பட வேண்டிய நேரத்தில் செய்யப்பட்டதை உணர்த்துகிறது என்று விளங்கலாம்.

அல்லது வானங்களும் பூமியும் படைக்கப்பட்ட தினம் முதல் அல்லாஹ்வால் மக்கா நகரம் புனித பிரதேசமாக பிரகடனப்படுத்தப்பட்டதை இப்ராஹீம் நபி (عليه السلام) அவர்கள் கஃபாவின் புனருத்தாபனப் பணிகள் முடிந்ததும் அல்லாஹ் வின் கட்டளைப்படி மீண்டும் புதுப்பித்தார்கள் என்றும் மதீனாவின் புனிதப் பிரதேசப் பிரகடனம் இறுதித் தூதர் முஹம்மத் நபி (ﷺ) அவர்கள் மூலம் பிரகடனப்படுத்தப்பட்டது என்றும் விளங்கலாம். (அல்லாஹ்வே மிகவும் அறிந்தவன்)

குறிப்பு:

"முத்து" என்பது நடுத்தர மனிதர் ஒருவர் தனது இரு சிறங்கையினாலும் நான்கு தடவைகள் அள்ளி எடுக்கும் அளவாகும். நவீன கால அளவின்படி, 510 கிராம்களாகும். ஒரு "ஸாஃ" என்பது நான்கு முத்துகளாகும். நவீன கணிப்பு முறையில் ஒரு சாவு என்பது மூன்று கி. கிராம் என்று பலரும் இரண்டு கி. கிராமும் 750 கிராம் என சிலரும், இரண்டு கிலோவும் 450 அல்லது 500 கிரேமும் என மற்றும் சிலரும் குறிப்பிடுகின்றனர்.

வானம், பூமி படைக்கப்பட்ட நாள் முதல் புனிதமாக்கப்பட்ட பிரதேசம்:

வானமும் பூமியும் படைக்கப்பட்ட நாள் முதல் புனித மக்கா நகரின் புனிதத்துவமும் பிரகடனப்படுத்தப் பட்டுள்ளது.

عَنِ ابْنِ عَبَّاسٍ رَضِيَ اللهُ عَنْهُمَا قَالَ قَالَ رَسُولُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ يَوْمَ فَتْحِ مَكَّةَ : "لَا هِجْرَةَ وَلَكِنْ جِهَادٌ وَنِيَّةٌ وَإِذَا اسْتُنْفِرْتُمْ فَانْفِرُوا وَقَالَ يَوْمَ

فَتْحِ مَكَّةَ إِنَّ هَذَا الْبَلَدَ حَرَّمَهُ اللهُ يَوْمَ خَلَقَ السَّمَوَاتِ وَالْأَرْضَ فَهُوَ حَرَامٌ بِحُرْمَةِ اللهِ إِلَى يَوْمِ الْقِيَامَةِ ..." (متفق عليه)

மக்கா வெற்றி கிடைத்த மறு தினமே இறைத்தூதர் அவர்கள் தனது உரையில் மார்க்கத்தின்படி வாழ "ஹிஜ்ரத்" நாடு துறத்தல் என்பது இனி இல்லை. அறவழிப் போரும் அதற்கான "நிய்யத்" (எண்ணமு)மே நிலையானது. போருக்கான அழைப்பு விடுக்கப்பட்டால் நீங்கள் புறப்படுங்கள். எனக் கூறி விட்டு அதே தினத்தில் "நிச்சயமாக இந்தப் பிரதேசத்தின் வானங்களையும் பூமியையும் படைத்த தினத்திலேயே அல்லாஹ் புனிதமாக்கிவிட்டான். அல்லாஹ் வுடைய அந்தப் புனிதப்படுத்தலின் அடிப்படையில் மறுமை நாள் வரையும் அது புனிதமானதாகும் என அறிவிப்புச் செய்ததாக இப்னு அப்பாஸ் (﵁) அவர்கள் அறிவிக்கிறார்கள்). (நூல்: புகாரி , முஸ்லிம்)

உலகின் முதல் ஆலயம் :

புனித கஃபா மனிதர்கள் அல்லாஹ்வைத் தூய்மைப் படுத்தி, இணைவைக்காது வணங்கிட பூமியில் அமைக்கப்பட்ட அல்லாஹ்வின் முதலாவது இல்லமாகும்.

إِنَّ أَوَّلَ بَيْتٍ وُضِعَ لِلنَّاسِ لَلَّذِي بِبَكَّةَ مُبَارَكًا وَهُدًى لِّلْعَالَمِينَ ﴿٩٦﴾ (آل عمران:٩٦)

"மனிதர்களுக்காக முதலாவது நிறுவப்பட்ட (முதன்மை ஆலயம்) பக்கா (மக்கா)வில் உள்ள வீடாகும். (அது) அருள் பாக்கியம் செய்யப்பட்டதாகவும், அகிலத்தாருக்கான நேர் வழிகாட்டியாகவும் இருக்கின்றது." (ஆலுஇம்ரான் : 96)

புனித மக்கா உலகின் முதலாவது ஆலயம் மாத்திர மின்றி, உலக மக்களின் வழிகாட்டியும் என்ற சிறப்புப் பெயர் கொண்ட ஒரு இடத்தை தரிசிக்கக் கிடைப்பது பெரும் பாக்கியமாகும். அதுவும் அருள்பாலிக்கப்பட்டதாக இருப்பது அந்த இடத்தின் மற்றொரு சிறப்பம்சமாகும்.

இந்த இடம் பாரம்பரிய, புராதன சரித்திரம் வாய்ந்தது என்பதை உணர்த்தவே அங்கு இப்ராஹீம் (عليه السلام) அவர்களின் பாதம் பட்ட இடம் (மகாமு இப்ராஹீம்) இருப்பதாக அல்குர்ஆன் தொடர்ந்தும் குறிப்பிட்டு ஹஜ் கடமையில் உள்ளார்ந்த அடிப்படையில் ஈடுபட ஆர்வமூட்டி அது பற்றி உணர்த்து-கின்றது.

فِيهِ آيَاتٌ بَيِّنَاتٌ مَّقَامُ إِبْرَاهِيمَ ۖ وَمَن دَخَلَهُ كَانَ آمِنًا ۗ وَلِلَّهِ عَلَى النَّاسِ حِجُّ الْبَيْتِ مَنِ اسْتَطَاعَ إِلَيْهِ سَبِيلًا ۚ وَمَن كَفَرَ فَإِنَّ اللَّهَ غَنِيٌّ عَنِ الْعَالَمِينَ ﴿٩٧﴾ (آل عمران: ٩٧)

“அதில் தெளிவான அத்தாட்சிகள் இருக்கின்றன. மகாமு இப்ராஹீம் என்பது (அதில் ஒன்றாகும்). அங்கு பிரவேசித்தவர் பாதுகாப்புப் பெற்றவராகிவிடுகின்றார். அல்லாஹ்வுக்காக அந்த வீட்டைச் சென்றடைய ஆற்றல் பெற்ற மனிதர்கள் அதில் ஹஜ் செய்வது அவர்கள் மீதுள்ள கடமையாகும். யார் அதை நிராகரிக்கின்றானோ நிச்சயமாக அல்லாஹ் அகிலத்தாரை விட்டும் தேவை அற்றவனாகும்.”

(ஆலுஇம்ரான்: 97)

மேற்படி வசனம் ஹஜ்ஜின் கடமையை அதன் முதல் பகுதியிலும், அதைப் புறக்கணிப்பதால் ஹஜ் கடமையான முஸ்லிம்கள் நஷ்டவாளர்கள் என்று அதன் இறுதியிலும் கூறி எச்சரிக்கை விடுக்கின்றது.

புனித மஸ்ஜிதுல் ஹராம் உலகில் முதலாவது இறை இல்லம் என்பதை பின்வரும் நபிமொழியிலும் காணலாம்.

عَنْ أَبِي ذَرٍّ رَضِيَ اللهُ عَنْهُ قَالَ قُلْتُ يَا رَسُولَ اللهِ أَيُّ مَسْجِدٍ وُضِعَ أَوَّلَ ؟ قَالَ: الْمَسْجِدُ الْحَرَامُ ، قُلْتُ ثُمَّ أَيٌّ ؟ قَالَ : ثُمَّ الْمَسْجِدُ الْأَقْصَى ، قُلْتُ كَمْ كَانَ بَيْنَهُمَا ؟ قَالَ : أَرْبَعُونَ ، ثُمَّ قَالَ : "حَيْثُمَا أَدْرَكَتْكَ الصَّلَاةُ فَصَلِّ وَالْأَرْضُ لَكَ مَسْجِدٌ" . (أخرجه البخاري : ٣٤٢٥)

அபூதர் அல்கிஃபாரி (رضي الله عنه) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: அல்லாஹ்வின் தூதரே! பூமியில் முதன் முதலாக நிறுவப்பட்ட ஆலயம் எது என நான் கேட்டேன். அதற்கு “அல்மஸ்ஜிதுல் ஹராம்” என பதிலித்தார்கள். பின்பு எது எனக் கேட்டேன். (பாலஸ்தீன) “அல்மஸ்ஜிதுல் அக்ஸா” எனக் கூறினார்கள். அவை இரண்டிற்கும் இடைப்பட்ட (கால) அளவு எவ்வளவு என்று கேட்டேன். நாற்பது என்றார்கள். பின்னர், “தொழுகை உன்னை எங்கிருந்து அடைந்து கொண்டாலும் நீ கட்டாயமாகத் தொழுது கொள். பூமி உனக்கு பள்ளியாகும் எனக் கூறினார்கள்.

(நூல் : புகாரி).

சந்தேக நிவர்த்தி:

நபி சுலைமான் (عليه السلام) அவர்களே பைத்துல் முகத்தஸ் பள்ளிவாசலை முதல் முதலில் கட்டியதாக நம்மில் சிலர் விளங்கி வைத்துள்ளோம். உண்மையில் அதனை ஆரம்ப அடித்தலமிட்டுக் கட்டியவர் நபி யஃகூப் (عليه السلام) அவர்களாகும்.

இப்ராஹீம் நபி (عليه السلام) அவர்கள் கஃபாவை எவ்வாறு புணர் நிர்மாணம் செய்தார்களோ அவ்வாறு சுலைமான் நபி (عليه السلام) அவர்களும் அதனை ஜின்களைக் கொண்டு புணர் நிர்மாணம் செய்தார்கள் என்பதே யதார்த்தமாகும்.

இவர்கள் இருவருக்கும் இடைப்பட்ட கால அளவு கிட்டத்தட்ட ஆயிரம் ஆண்டுகள் என இஸ்லாமிய வரலாற்று ஆசிரியர்கள் மூலம் முன்வைக்கப்படுவதாக இமாம் இப்னுல் கய்யிம் (ரஹ்) தனது “ஸாதுல் மஆத்” எனும் நூலில் குறிப்பிடுள்ளார்கள்.

மறுமை நாள் வரை தொழுகைக்கான திசையாகும்:

கஃபாவிற்கு முன்னால் அல்லது நேர் எதிரில் இருப்போர் தொழுகையை நிறைவு செய்கின்ற போது

நேரடியாக நோக்கப்பட வேண்டிய திசையாகவும் அதை விட்டும் தொலைவில் இருப்போர் அதன் திசையை நோக்க வேண்டிய ஒரு மசூதியாகவும் அது விளங்குகின்றது.

عَنِ الْبَرَاءِ بْنِ عَازِبٍ رَضِيَ اللهُ عَنْهُ أَنَّ النَّبِيَّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ كَانَ أَوَّلَ مَا قَدِمَ الْمَدِينَةَ نَزَلَ عَلَى أَجْدَادِهِ أَوْ قَالَ أَخْوَالِهِ مِنْ الْأَنْصَارِ ، وَأَنَّهُ صَلَّى قِبَلَ بَيْتِ الْمَقْدِسِ سِتَّةَ عَشَرَ شَهْرًا أَوْ سَبْعَةَ عَشَرَ شَهْرًا ، وَكَانَ يُعْجِبُهُ أَنْ تَكُونَ قِبْلَتُهُ قِبَلَ الْبَيْتِ ، وَأَنَّهُ صَلَّى أَوَّلَ صَلَاةٍ صَلَّاهَا صَلَاةَ الْعَصْرِ ، وَصَلَّى مَعَهُ قَوْمٌ ، فَخَرَجَ رَجُلٌ مِمَّنْ صَلَّى مَعَهُ ، فَمَرَّ عَلَى أَهْلِ مَسْجِدٍ وَهُمْ رَاكِعُونَ ، فَقَالَ: أَشْهَدُ باللهِ لَقَدْ صَلَّيْتُ مَعَ رَسُولِ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ قِبَلَ مَكَّةَ ، فَدَارُوا كَمَا هُمْ قِبَلَ الْبَيْتِ ، وَكَانَتْ الْيَهُودُ قَدْ أَعْجَبَهُمْ إِذْ كَانَ يُصَلِّي قِبَلَ بَيْتِ الْمَقْدِسِ وَأَهْلُ الْكِتَابِ ، فَلَمَّا وَلَّى وَجْهَهُ قِبَلَ الْبَيْتِ أَنْكَرُوا ذَلِكَ .

(أخرجه البخاري برقم: ٤٠ الشاملة)

நபி (ﷺ) அவர்கள் மதீனாவிற்கு வந்த ஆரம்ப காலத்தில் அன்ஸாரிகளான அவர்களின் முப்பாட்டனார்களிடம் அல்லது அவர்களின் (தாய்வழி) மாமாமார்களிடம் தங்கினார்கள். அவர்கள் பதினாறு அல்லது பதினேழு மாதங்கள் பைதுல் மக்திஸ் பக்கமாக தொழுது வந்தார்கள். புனித வீட்டின் (கஃபாவின்) பக்கமாக அவர்களது கிப்லா அமைந்திருப்பது அவர்களுக்கு ஒரு மனப்பிடிப்பாக இருந்தது. (அது பிற் காலத்தில் நிறைவேறியது). (கிப்லா மாற்றப்பட்ட பின்னர்) அவர்கள் ஆரம்பமாக அஸர் தொழுகையை தொழுதிருந்தார் கள். அவர்களுடன் அவர்களின் தோழர்களில் ஒரு சாராரும் தொழுதனர். ஒரு மஸ்ஜிதில் மக்கள் ருகூவில் இருந்து கொண்டிருந்த போது அவர்களில் ஒருவர் أَشْهَدُ بِاللهِ அல்லாஹ் வை சாட்சியாளனாக்கிக் கூறுகின்றேன். “நான் நபி (ﷺ) அவர்களுடன் மக்காவை நோக்கி தொழுதேன்” என முழங்கினார். அவர்கள் இருந்த நிலையில் அந்த வீட்டை

(கஃபாவை) நோக்கி அப்படியே சுழன்று திரும்பினர். இந்த நிகழ்வு முன்னர் நபி (ﷺ) அவர்களும் வேதம் கொடுக்கப் பட்டோரும் பைத்துல் மக்திஸ் நோக்கித் தொழுது வந்தது யூதர்களுக்கு பெரும் வியப்பைக் கொடுத்தது. அவர்கள் கஃபாவை நோக்கியதும் அதனை அவர்கள் வெறுத்தனர்.
(நூல்: புகாரி)

இதன் மூலம் உலக முஸ்லிம்கள் தமது தொழுகையின் போது இறுதி நாள்வரை நோக்க வேண்டிய புனித இல்லமாக புனித கஃபா இறை இல்லம் விளங்குவதை அறியலாம்.

மல சலம் கழிக்கின்ற போது கிப்லாத் திசையை நோக்குவதைத் தவிர்த்தல்:

عَنْ أَبِي أَيُّوبَ الْأَنْصَارِيِّ رَضِيَ اللهُ عَنْهُ قَالَ قَالَ رَسُولِ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ: "إِذَا أَتَى أَحَدُكُمْ الْغَائِطَ فَلَا يَسْتَقْبِلِ الْقِبْلَةَ وَلَا يُوَلِّهَا ظَهْرَهُ شَرِّقُوا أَوْ غَرِّبُوا" . (أخرجه البخاري برقم : ١٤١ الشاملة)

“மல, சலம் கழிப்பதற்காக உங்களில் யாராவது வந்தால் அவர் கஃபாவின் திசையை முன் நோக்கவோ அல்லது அவரது முதுகை அதற்கு பின் நோக்கிக் காட்டியோ இருக்க வேண்டாம். கிழக்கு மேற்காக அமர்ந்து கொள்ளுங்கள்” என அல்லாஹ்வின் தூதர் நபி (ﷺ) அவர்கள் கூறியுள்ளதாக அபூஅய்யூபுல் அன்ஸாரி (رضي الله عنه) அவர்கள் அறிவிக்கிறார்கள்.
(நூல்: புகாரி, முஸ்லிம்)

குறிப்பு: இது மேற்குத் திசையாக கிப்லாவை முன் நோக்கும் நம் போன்றவர்களுக்குக் கூறப்பட்டது கிடையாது. மாறாக மதீனா மக்கள்தான் கிழக்கு மேற்காக அமர வேண்டும். அதனால் இது மதீனா வாசிகளுக்கு சொல்லப்பட்டதாகும். நாம் கிழக்கு மேற்காக அமர்வதனால் மேற்படி அறிவுரையைப் பின்பற்ற வேண்டியதில்லை. பின்வரும் ஹதீஸையும் இணைத்து விளங்கவும்.

عَنْ سَلْمَانَ، قَالَ: قِيلَ لَهُ: قَدْ عَلَّمَكُمْ نَبِيُّكُمْ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ كُلَّ شَيْءٍ حَتَّى الْخِرَاءَةَ قَالَ: فَقَالَ: أَجَلْ «لَقَدْ نَهَانَا أَنْ نَسْتَقْبِلَ الْقِبْلَةَ لِغَائِطٍ، أَوْ بَوْلٍ،
(أخرجه مسلم ٢٦٢)

நபித்தோழர் ஸல்மான் (﵁) அவர்களிடம் ஒரு மனிதர் உங்கள் நபி (ﷺ) அவர்கள் அற்பமான (மல சல) ஒழுங்கைக் கூட கற்றுத் தந்துள்ளார்களே! என (ஆச்சரியமாக) வினவிய போது ஆம் உண்மைதான். மல சலம் கழிக்கின்ற போது கிப்லாத்திசையை முன்னோக்குவதை எமது நபியவர்கள் தடை செய்துள்ளார்கள்; என பதிலளித்தார்கள்.
(நூல்: முஸ்லிம்)

பாலைவனம் போன்ற திறந்த வெளிகளில் கஃபாவின் திசையை நோக்கியவாறு ஒருவர் மல சலம் கழிப்பது தடை செய்யப்பட்டிருப்பதையே இது குறிக்கும் என்பதை கவனத்தில் கொள்ளவும். அதன் திசை நோக்கி மல சலம் கூட கழிப்பது தடை என்பதைக் கவனித்தால் அதன் புனிதத்துவம் எவ்வளவு பெறுமானம் உடையது என்பதை அறிந்து கொள்ள முடியும்.

அது மாத்திரமின்றி, அங்குள்ள மரங்கள், செடி-கொடிகள், புற்பூண்டுகளைக் கூட வீணாக வெட்டுவதும், அங்கு வாழும் பறவைகள், மிருக இனங்களுக்கு இடையூறு விளைவிப்பதும் ஹராமாகும்.

மக்காவினுள் போர் செய்வது மறுமைநாள் வரை தடை:

عَنِ ابْنِ عَبَّاسٍ رَضِيَ اللهُ عَنْهُمَا قَالَ قَالَ رَسُولُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ يَوْمَ فَتْحِ مَكَّةَ... : "إِنَّ هَذَا الْبَلَدَ حَرَّمَهُ اللهُ يَوْمَ خَلَقَ السَّمَوَاتِ وَالْأَرْضَ ، فَهُوَ حَرَامٌ بِحُرْمَةِ اللهِ إِلَى يَوْمِ الْقِيَامَةِ ، وَإِنَّهُ لَمْ يَحِلَّ الْقِتَالُ فِيهِ لِأَحَدٍ قَبْلِي ، وَلَمْ يَحِلَّ لِي إِلَّا سَاعَةً مِنْ نَهَارٍ ، فَهُوَ حَرَامٌ بِحُرْمَةِ اللهِ إِلَى يَوْمِ الْقِيَامَةِ
(أخرجه البخاري : ٣٣٨٩)

இந்தப் பிரதேசமானது வானங்கள், மற்றும் பூமி படைக்கப்பட்ட நாளில் அல்லாஹ் புனிதத்துவப்படுத்தியதாகும். அது அல்லாஹ் புனிதமாக்கியதன் அடிப்படையில் மறுமை வரை புனிதமானதாகும். அங்கு எனக்கு முன்னர் யாருக்கும் போர் செய்ய அனுமதிக்கப்படவில்லை. எனக்கும் கூட (குறிப்பிட்ட) சில மணி நேரங்களே சலுகையளிக்கப்பட்டது. எனவே அல்லாஹ்வின் புனிதத்துவத்தின் அடிப்படையில் மறுமை வரையும் அது புனிதமானதாகும் என நபிகள் நாயகம் (ﷺ) அவர்கள் மக்கா வெற்றி பெற்ற அதிகாலை கூறினார்கள்.
(நூல்: புகாரி)

ஒரு பிரதேசம் புனிதமானது என்பதை விளக்கிட அதற்குரிய பாதுகாப்பும் முக்கிய பங்கு வகிக்கின்றது. இன்றும் மக்கா உலகிலேயே பாதுகாப்பு நிறைந்த பிரதேசமாக இருப்பது இதன் மற்றொரு சிறப்பம்சமாகும்.

தஜ்ஜால் பிரவேசிக்க முடியாத வானவர்கள் பாதுகாப்பு வலயம்

عَنْ أَنَسِ بْنِ مَالِكٍ رَضِيَ اللهُ عَنْهُ عَنِ النَّبِيِّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ : "لَيْسَ مِنْ بَلَدٍ إِلَّا سَيَطَؤُهُ الدَّجَّالُ إِلَّا مَكَّةَ وَالْمَدِينَةَ ، لَيْسَ لَهُ مِنْ نِقَابِهَا نَقْبٌ إِلَّا عَلَيْهِ الْمَلَائِكَةُ صَافِّينَ يَحْرُسُونَهَا ، ثُمَّ تَرْجُفُ الْمَدِينَةُ بِأَهْلِهَا ثَلَاثَ رَجَفَاتٍ ، فَيُخْرِجُ اللهُ كُلَّ كَافِرٍ وَمُنَافِقٍ" .

(أخرجه البخاري -١٧٨٤،١٤٧٤، ومسلم -٥٢٣٦)

தஜ்ஜால் உலகில் எல்லா பிரதேசங்களுக்குள்ளும் உட்பிரவேசிப்பான். ஆனால் மக்கா, மதீனா ஆகிய இரு புனித நகரங்களுக்குள்ளும் அவனால் செல்ல முடியாதவாறு அதன் சந்து பொந்துகள் எல்லாம் வானவர்கள் அணியணியாக அப்பிரதேசங்களைப் பாதுகாத்த வண்ணம் நிற்பார்கள். பின்னர் மதீனாவில் மூன்று முறை நிலநடுக்கம் ஏற்படும். அதனால்

(அங்குள்ள) ஒவ்வொரு காஃபிரையும், நயவஞ்சகனையும் அல்லாஹ் வெளியேற்றுவான் என நபிகள் நாயகம் (ﷺ) அவர்கள் கூறினார்கள். (நூல்: புகாரி, முஸ்லிம்)

நன்மை நாடி பயணம் மேற்கொள்ள அனுமதிக்கப்பட்ட உலகின் முக்கிய மூன்று புனித மஸ்ஜிதுகளில் ஒன்று

நன்மை நாடி பணத்தை செலவு செய்து, மூட்டை முடிச்சு களோடு பயணம் மேற்கொள்ள உலகில் அனுமதிக்கப்பட்ட பிரதேசமாக இந்த மக்கா பிரதேசமும் விளங்குகின்றது.

قَالَ رَسُولُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ : "لَا تَشُدُّوا الرِّحَالَ إِلَّا إِلَى ثَلَاثَةِ مَسَاجِدَ ، مَسْجِدِي هَذَا ، وَالْمَسْجِدِ الْحَرَامِ ، وَالْمَسْجِدِ الْأَقْصَى" .

(أخرجه البخاري)

கட்டுச்சாதனங்களைக் கட்டிக் கொண்டு மூன்று பள்ளிகள் தவிர்ந்த ஏனைய பள்ளிகளுக்கு (நன்மை நாடி) பயணம் மேற்கொள்வது கூடாது எனக் கூறிய இறைத்தூதர் முஹம்மத் நபி (ﷺ) அவர்கள், எனது இந்தப் பள்ளி, (மஸ்ஜித் நபவி) அல்மஸ்ஜிதுல் ஹராம் (மக்காப் பள்ளி) அல்மஸ்ஜிதுல் அக்ஸா (பலஸ்தீன் பள்ளி) என்பனவே பயணம் செய்ய அனுமதிக்கப் பட்டதாகும் எனத் தெளிவுபடுத்திக் கூறினார்கள். (புகாரி)

இப்படிப்பட்ட சிறப்புக்களை உள்ளடக்கிய பள்ளி அமைந்துள்ள இடமாகிய புனித மக்கா பிரதேசத்திலும் அதனைச் சுற்றி உள்ள புனித இடங்களிலும்தான் ஹஜ், மற்றும் உம்ராவின் கடமைகள் நிறைவு செய்யப்படுகின்றன என்பதை நாம் உணர வேண்டும்.

இப்ராஹீம் (عليه السلام) அவர்களும் புனித மக்கா நகரும்

உலகில் புனித கஃபாவை முதலாவது கட்டியது யார் என்ற வரலாற்றுத் தொடர்பான கேள்விக்கு வானவர்கள், பின்னர் ஆதம் நபி (عليه السلام) அவர்கள் என்றும் இஸ்லாமிய வரலாற்றில் பதிலளிக்கப்படுகின்றது.

இருப்பினும், அதன் வரலாறு இப்ராஹீம் நபி (عليه السلام) அவர்களோடும் அவர்களின் இரண்டாம் மனைவி ஹாஜி(ஜ)ர் அவர்களின் மகன் இஸ்மாயீல் (عليه السلام) அவர்களோடும் தொடர்பு படுத்தியே அதிகம் பேசப்படுவது. பிரபல்யம் அடைந்துள்ளது.

புனித ஹஜ் கடமைக்கும் இப்ராஹீம் (عليه السلام) அவர்களுக்கும் அவர்களின் குடும்பத்தவர்களான ஹாஜிர், மற்றும் அவர்களின் புதல்வர் இஸ்மாயீல் (عليه السلام) ஆகியோருக்கும் இடையில் இறுக்கமான தொடர்பு காணப்படுவதை வருடந் தோறும் நிறைவேற்றப்படும் ஹஜ் கால கடமைகள் உணர்த்தி நிற்கின்றன.

ஸம்ஸம் நீர், ஹஜ், உம்ராவின் போது ஸஃபா மர்வா ஆகியவற்றுக்கு இடையில் ஓடப்படும் ஸஃய், ஜம்ராத்தில் கல்லெறிதல், உழ்ஹிய்யாக் கடமை போன்ற இன்னோரன்ன பல கிரிகைகள் இந்தக் குடும்பத்தினை நினைவுபடுத்திய வண்ணம் இருக்கின்றன.

خليل الرحمن அல்லது خليل الله அல்லாஹ்வின் நேசர் என்ற சிறப்புப் பெயர் பெற்ற நபி இப்ராஹீம் (عليه السلام) அவர்கள் தனது குழந்தை இஸ்மாயீலையும் அவரது இரண்டாம் மனைவி ஹாஜிர் (رضي الله عنها) அவர்களையும் அல்லாஹ்வின் கட்டளைக்கு முழுமையாக அடிபணிந்து மனித சஞ்சாரமற்ற புனித மக்கா பள்ளத்தாக்கில் விட்டுப் பிரிகிறார்கள். அதன் பின்னால் தொடர்ந்து அவர்கள் வாழ்வில் நடந்தேறிய நிகழ்வுகள்தாம் இவ்வளவு பாரிய ஆச்சரியமிக்க சரித்திரங்களைப் படைத்துள்ளன எனக் கூற முடியும் .

இப்ராஹீம் (عليه السلام) அவர்கள் தனது குடும்பத்தை விட்டுப் பிரியும் வேளையும் சரி, அல்லது பிரிவின் பின் தனது அன்பு மகன் இஸ்மாயீலை சந்திப்பதற்காக வந்த போதும் சரி புனித மக்காவிற்காக பல ஆசீர்வாதப் பிரார்த்தனைகளைச் செய்துள்ளார்கள்.

மக்காவின் கனி வர்க்கங்கள் மற்றும் உணவு வகைகள் போன்றவற்றின் இறை அபிவிருத்திக்காக அவர்கள் பிரார்த்தனை செய்திருப்பதன் மூலம் மனித வாழ்வின் முதுகெலும்பாகக் காணப்படும் பொருளாதார உற்பத்தியின் அவசியம் பற்றி அவர்களின் வரலாறு பின்வருமாறு உணர்த்துகின்றது.

رَبَّنَآ إِنِّيٓ أَسۡكَنتُ مِن ذُرِّيَّتِي بِوَادٍ غَيۡرِ ذِي زَرۡعٍ عِندَ بَيۡتِكَ ٱلۡمُحَرَّمِ رَبَّنَا لِيُقِيمُواْ ٱلصَّلَوٰةَ فَٱجۡعَلۡ أَفۡـِٔدَةٗ مِّنَ ٱلنَّاسِ تَهۡوِيٓ إِلَيۡهِمۡ وَٱرۡزُقۡهُم مِّنَ ٱلثَّمَرَٰتِ لَعَلَّهُمۡ يَشۡكُرُونَ ﴿٣٧﴾ [إبراهيم : ٣٧]

“எங்கள் இரட்சகனே! சங்கை மிக்க உனது வீடு அமைந்துள்ள, புற்பூண்டுகள் இல்லாத ஒரு பள்ளத்தாக்கில் நிச்சயமாக நான் எனது சந்ததியினரை குடியமர்த்திவிட்டேன். எங்கள் இரட்சகனே! அவர்கள் தொழுகையை நிலைநிறுத்த (பாக்கியமளிப்பாயாக), மனிதர்களில் சிலரது உள்ளங்களை அவர்கள் பக்கம் சாயக் கூடியதாக ஆக்குவாயாக! அவர்கள் நன்றியுடையோராக இருக்கும் பொருட்டு அவர்களுக்கு பழ வர்க்கங்களை நீ உணவு ஆகாரமாக அளிப்பாயாக!” (இப்ராஹீம்: 37-41) வரையான வசனங்கள் இப்ராஹீம் (عليه السلام) அவர்கள் மேற் கொண்ட பிரார்த்தனைகள் பற்றித் தெளிவாகக் குறிப்பிடுகின்றன.

மேற்படி பிரார்த்தனைகளின் பிரதிபலனாக காலம் காலமாக புனித மக்காவில் எப்படியான மாற்றங்கள் ஏற்பட்டன என்பதை நபிமொழிகளும் இஸ்லாமிய வரலாறுகளும் தெளிவாக விளக்குகின்றன.

இப்ராஹீம் (عليه السلام) அவர்கள் தனது மகனுடன் இணைந்து புனித கஃபாவைப் புணர் நிர்மாணம் செய்தமை, ஹஜ்ஜுக்காக அழைப்பு விடுத்தமை போன்ற அம்சங்கள் அதன் ஒரு பகுதியாகும்.

அவர்கள் புனித கஃபாவை தனது மகன் இஸ்மாயீலுடன் கட்டி முடித்ததும் அல்லாஹ் அவர்களுக்கு பின்வருமாறு கட்டளையிட்டான்.

وَإِذْ بَوَّأْنَا لِإِبْرَٰهِيمَ مَكَانَ ٱلْبَيْتِ أَن لَّا تُشْرِكْ بِى شَيْـًٔا وَطَهِّرْ بَيْتِىَ لِلطَّآئِفِينَ وَٱلْقَآئِمِينَ وَٱلرُّكَّعِ
ٱلسُّجُودِ ﴿٢٦﴾ وَأَذِّن فِى ٱلنَّاسِ بِٱلْحَجِّ يَأْتُوكَ رِجَالًا وَعَلَىٰ كُلِّ ضَامِرٍ يَأْتِينَ مِن كُلِّ فَجٍّ عَمِيقٍ ﴿٢٧﴾

(الحج: ٢٦، ٢٧)

அந்த இறை இல்லத்தின் இடத்தை இப்ராஹீமுக்கு நாம் மிகத் துல்லியமாகக் காண்பித்தோம். அத்துடன் எனக்கு எதையும் இணையாக்கக் கூடாது என்றும், தவாஃப் செய்வோர், நின்று வணங்குவோர், றுகூஃ, சுஜூதில் ஈடுபடுவோர் அனைவருக்குமாக எனது வீட்டை (இணைவைப்பு, பாவங்கள் ஆகிய வற்றில் இருந்து) பரிசுத்தப்படுத்துவீராக என்றும் (கட்டளையிட்டோம்). மேலும் ஹஜ்ஜுக்காக மக்களுக்கு அழைப்பு விடுப்பீராக அவர்கள் நடையாகவும் மெலிந்த ஒட்டகைகளின் மீது ஏறிப் பயணம் செய்தும் உலகின் திக்குச் திசைகளில் இருந்தெல்லாம் வருவார்கள் (என்றோம்.)”

(அல்ஹஜ்: 26, 27)

இங்கு எனது இல்லத்தில் தவாஃப் செய்வோர், நின்று வணங்குவோர், ருகூஃ, மற்றும் சுஜூத் செய்வோர் என அல்லாஹ்வுடன் இணைத்து “எனது இல்லம்” எனக் கூறப் பட்டுள்ளதன் மூலம் அல்லாஹ்வின் இல்லம் என்ற சிறப்பைப் பெற்ற புனிதமிக்கதோர் இடத்தில் ஹஜ் மற்றும் உம்ராக் கடமைகள் நிறைவேற்றப்படுவது கண்டு நமது இறையச்சம் மேலும் அதிகரிக்க வேண்டும்.

மட்டுமன்றி, அல்லாஹ் பரிசுத்தமானவன், அவனது இல்லமும் பரிசுத்தமானது, அவனை வணங்கி வழிபடும் நாம் அவனுக்கு இணை வைக்காத இறை நேசர்களை அழைத்து

பிரார்த்திக்காத, அல்லாஹ்வை மட்டும் அழைக்கும் பரிசுத் தமான மக்களாகவும் இருக்க வேண்டும் என்பது நேரடியாகவும் மறைமுகமாகவும் இங்கு உணர்த்தப்படுகின்றது.

இறை நேசரான இப்றாஹீம் (عليه السلام) அவர்களே அல்லாஹ்விடம் நேரடியாகப் பிரார்த்தனை செய்துள்ள நிலையில் நாமும் அவ்வாறு செய்வதே மார்க்கமாகும்.

அல்லாஹ்வை வணங்கும் இடம் எவ்வாறு பரிசுத்தமாக இருக்க வேண்டுமோ, அதே போன்று அல்லாஹ்வைத் தூய்மையாக வணங்குதல், அவனே வணங்கி வழிபடத் தகுதியானவன் போன்ற வழிபாட்டுக் கோட்பாடுகள் மூலம் அவனைத் தூய்மைப்படுத்தி, கலப்பற்ற முறையில் வணங்கு வதும் மனிதர்கள் மீது விதியாக்கப்பட்ட கடமையாகும்.

அந்தத் தூய கோட்பாட்டு முறையானது பிறரைக் கடவுள் நிலையில் வைத்தோ அல்லது அவர்களை இடைத் தரகர்களாக ஆக்கியோ அதன் தூய்மை சிதைக்கப்பட்டு மனிதர்கள் செய்கின்ற வணக்கமும் பாழாகிவிடும் என்பதனாலேயே கஃபாவினுள் காணப்பட்ட நூஹ் நபி கால நல்லடியார்களின் சிலைகளும், வேறு விக்கிரகங்களும் மக்கா வெற்றியின் போது நபி (ﷺ) அவர்களினால் அகற்றப்பட்டன.

இறுதியில் இணை வைப்பாளர்கள் கலக்காத தூய வழிபாட்டுத் தளமாகவும் புனித கஃபா மாற்றப்பட்ட பின்னரே நபி (ﷺ) அவர்கள் அங்கு ஹஜ் கடமையினை நிறைவு செய்துள் ளார்கள். இவை அனைத்தும் வணக்கத்தில் தூய்மையின் அவசியத்தை உணர்த்தி நிற்கின்றன.



02

கஃபா உலகின் மத்தியில் அமைந்துள்ள இடமாகும்

புனித கஃபா உலகின் மையப் பகுதியில் அமைந்திருப்பது பற்றி ஆரம்பகால மேற்கத்தைய ஆய்வுகள் குறிப்பிடா விட்டாலும் முஸ்லிம் அறிஞர்கள் பலர் அது பற்றிக் குறிப்பிடாமல் விட்டு விடவில்லை.

ஒருவர் வான், தரை மற்றும் வாகனம் அல்லது நடை மார்க்கமாக எந்த வழியாக மக்கா நகர் நோக்கி வந்தாலும் அவர் மிக எளிய முறையில் வந்து சேர்வதற்குரியதாக அதன் படைப்பாளனாகிய அல்லாஹ் அதற்கான வழிகளை ஆக்கி வைத்திருக்கின்றான்.

நவீன ஆய்வுகளின் பிரகாரம் உலகில் உள்ள முதல் கண்டங்களான ஆசியா, ஆபிரிக்கா, ஐரோப்பா ஆகிய மூன்று கண்டங்களிலும் உள்ள ஒன்பது பிரதான நகரங்களும் ஒன்பது தீவுகளும் விஞ்ஞானிகளால் தேர்வு செய்யப்பட்டு அவற்றில் இருந்து மக்காவிற்கான தூரம் அளவிடப்பட்டது. அப்போது அதன் தூரம் 8039 கி.மீ. என ஆய்வாளர்கள் கண்டறிந்தனர்.

பின்னர் கண்டறியப்பட்ட கண்டமான அவுஸ்திரேலியாவின் கிழக்காக அமைந்துள்ள நியூசிலாந்தின் வெலிங்டன் நகரத்தில் இருந்து மக்காவுக்கான தூரம் 13040 கி.மீ. களாகவும் தென் அமெரிக்காவின் கோடியில் இருக்கின்ற

நகரமான கொரன் ஹோரன் நகரத்திற்கும் மக்காவிற்கும் இடைப்பட்ட தூரம் 13120 கி.மீ. களாகவும் கண்டறியப்பட்டது.

அவ்வாறே, வட அமெரிக்காவின் கோடியில் இருக்கும் வட அலஸ்காவிற்கும் மக்காவிற்கும் இடைப்பட்ட தூரம் 13600. கி.மீ. களாகவும் கண்டறியப்பட்டன.

இவ்வாறு பார்க்கின்ற போது உலக மக்கள் எந்தக் கண்டத்தில் வாழ்ந்தாலும் அவர்கள் மக்காவை வந்து சேர ஒன்று 8039 கி.மீ. கள் தூரமோ, அல்லது 13600 கி.மீ. கள் தூரமோ மொத்தமாகப் பயணம் செய்ய வேண்டும்.

அதே வேளை, இந்த கண்டங்களின் ஒரு கோடியில் ஹஜ்ஜுக்கான பயணம் இருக்குமானால் அதைவிடப் பன்மடங்கு தொலை தூரம் மக்கள் பயணம் செய்ய நேரிடும். அதனால் மக்கள் கடுமையான அவதிக்குள்ளாவர் என்பதில் சந்தேகம் இல்லை.

இது மக்கா உலகின் மத்தியில் இருப்பதையும் அது உலக மக்கள் அனைவரும் பெரிய அளவான சிரமங்கள் இன்றி அங்கு வந்து சேர்வதற்கான கடல், தரை, வான் வழிகளையும் அல்லாஹ் இலகுபடுத்தியிருப்பதையும் உணர்த்துகின்றன.

ஆகவே, மக்கா உலக வரைபடத்தில் வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு என எந்த திசையின் கோடியிலும் இல்லை. மாறாக, அது உலகத்தின் மையப் புள்ளியாகவே விளங்கு கின்றது என்பதையும் எம்மால் உறுதி செய்ய முடியும். இதன் காரணமாகவே உண்மையில் உலக நேர அளவை மக்காவில் இருந்தே வரையறை செய்ய வேண்டும். கிரீன் வீச் பற்றி அலட்டிக் கொள்ளத் தேவை இல்லை போன்ற கருத்துக்கள் உலகில் தற்போது வலுப்பெற்று வருகின்றன.

பூமிப் பந்தானது முட்டை, உருண்டை வடிவிலானது என விஞ்ஞானிகள் முடிவிற்கு வந்த பின்னர் இந்த பூமியின் ஒரு பகுதியை ஒரு நாளின் தொடக்கமாகக் கொள்ள முடிவு செய்தனர்.

அதன் முடிவாக 1882ம் ஆண்டு லண்டனில் உள்ள கிரீன்வீச் நகரம் பிரித்தானிய ஆளுகையில் இருந்த போது கிரீன் வீச் நகரை அடிப்படையாகக் கொண்டு நாளின் ஆரம்பம் நிர்ணயம் செய்யப்பட்ட சர்வதேச தேதிக் (கிரீன்விச்) கோட்டைத் தொடக்கும் நகரமாக அந்த நகரைப் பிரகடனப்படுத்தினர். அதனால் அதற்கு கிரீன்வீச் நேரம் என்ற பெயரும் வந்தது.

இருந்தாலும் புனித மக்காவை மையப்படுத்தியதாக உலக நேர சூசியை மாற்றி அமைக்க வேண்டும் என ஆய்வாளர் அர்னோல்ட் கேஸர்லின்ங் போன்றவர்கள் குறிப்பிடுவதையும் இங்கு கவனத்தில் கொள்ள வேண்டும்.

الموسوعة الميسرة فى الإعجاز العلمى   شحاته صقر

உலக வரைபடத்தில் உலகின் மையப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள புனித ஆலயமான இந்த இல்லம் நோக்கி உலகின் எந்த திசையில் இருந்து மக்கள் வந்தாலும் கிட்டத்தட்ட ஒரே அளவான தூரத்தையே அவர்களின் பயண தூரம் எட்டும் விதமாக அமைந்துள்ளதன் மூலம் அல்லாஹ்வின் அடியார்கள் தமது கடமைகளை உலகில் சிரமம் இன்றி மேற்கொள்ள சம நிலை பேணப்பட்டுள்ளதையும் இங்கு கவனிக்க வேண்டும். இது இந்த புனித இல்லத்தின் மற்றொரு சிறப்பம்சமாகும்.

அப்படியானால் நாம் எப்படியான பிரதேசத்தில் ஹஜ், மற்றும் உம்ரா போன்ற புனித கடமைகளை நிறைவேற்றச் செல்கின்றோம் என்பதை உணரக் கடமைப்பட்டுள்ளோம்.

“எனது வீடு” என்று அல்லாஹ் சிறப்பித்துக் குறிப் பிடுகின்ற புனிதம் நிறைந்த கஃபாவின் பராமரிப்பை அவனுடைய நேசர் என அறிவிக்கப்பட்ட இறைத்தூதர் இப்ராஹீம் (عليه السلام) அவர்களிடம் ஒப்படைத்து அதனை இணைவைத்தல், மார்க்க விரோத செயற்பாடுகள் போன்ற பாவமான, தீய காரியங்கள் எதுவும் இல்லாத புனித வீடாகவும் பரிசுத்தப்படுத்திய பின்னர், ஹஜ்ஜை நிறைவேற்ற அழைப்பு விடுக்க பணிக்கின்றான் என்றால் நாம் நமது வணக் கங்களிலும் நடைமுறைப் பழக்க வழக்கங்களிலும் எவ்வளவு தூயவர்களாக இருக்க வேண்டும்? அந்தக் கட்டளை, நாம் நமது வாழ்வில் கடுகளவும் அல்லாஹ்வுக்கு இணை வைத்துவிடக் கூடாது என்பதை நமக்கு உணர்த்த வில்லையா?

உலகிலேயே புனிதமிக்க இல்லமான புனித கஃபாவைக் கட்டி முடித்து மக்களை ஹஜ்ஜுக்காக அழைப்பு விடுத்தவர் ஒரு நபியும் இறை நேசரும் ஆவார். அவரிடமே இணைவைப்பு செய்யக் கூடாது என்ற உறுதி மொழி இந்த சந்தர்ப்பத்திலும் பெறப்பட்டுள்ளது என்றால் இணை வைப்பின் விபரீதம் பற்றி உதாசீனப்படுத்தும் பல அழைப்பாளர்கள் தமது அழைப்புப் பணியில் காணப்படும் பாரிய குறைபாட்டை இது சுட்டிக்காட்டவில்லையா?





03 ஹஜ் பயணத்திற்கு முன்

பணம் தூயவழியில் பெறப்பட்டதா? என சுயபரிசோதனை செய்தல்

தூய முறையில் பெறப்பட்ட பணத்திலேயே “ஹஜ்” செய்ய வேண்டும். அல்லாஹ்வின் அருட்பாக்கியம் பெற்ற மக்களைத் தவிர ஏனையோர் இந்த விஷயத்தில் தமது பொருளீட்டல் முறை பற்றி தம்மைப் பரிசோதிக்க வேண்டியவர்களே!

தவறான வழியில் ஈட்டிய பொருளாதாரம் நமது வணக்கத்தை மாத்திரமல்ல, நமது மறுமை வாழ்வையும் நாம் வேண்டும் பிரார்த்தனைகளையும் கூட அழித்துவிடும் என்பது இஸ்லாமிய மார்க்கத்தின் போதனையாகும்.

عَنْ أَبِي هُرَيْرَةَ رَضِيَ اللهُ عَنْهُ قَالَ قَالَ رَسُولُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ : «أَيُّهَا النَّاسُ إِنَّ اللهَ طَيِّبٌ ، لاَ يَقْبَلُ إِلاَّ طَيِّبًا ، وَإِنَّ اللهَ أَمَرَ الْمُؤْمِنِينَ بِمَا أَمَرَ بِهِ الْمُرْسَلِينَ ، فَقَالَ (يَا أَيُّهَا الرُّسُلُ كُلُوا مِنَ الطَّيِّبَاتِ وَاعْمَلُوا صَالِحًا إِنِّي بِمَا تَعْمَلُونَ عَلِيمٌ) وَقَالَ (يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا كُلُوا مِنْ طَيِّبَاتِ مَا رَزَقْنَاكُمْ) ». ثُمَّ ذَكَرَ الرَّجُلَ يُطِيلُ السَّفَرَ أَشْعَثَ أَغْبَرَ يَمُدُّ يَدَيْهِ إِلَى السَّمَاءِ : يَا رَبِّ يَا رَبِّ، وَمَطْعَمُهُ حَرَامٌ ، وَمَشْرَبُهُ حَرَامٌ ، وَمَلْبَسُهُ حَرَامٌ ، وَغُذِىَ بِالْحَرَامِ ، فَأَنَّى يُسْتَجَابُ لِذَلِكَ؟ ». (أخرجه مسلم: ٢٣٩٣)

நிச்சயமாக அல்லாஹ் பரிசுத்தமானவன். பரிசுத்த மானவை களைத் தவிர வேறு எதையும் அவன் ஏற்றுக் கொள்வதில்லை. நிச்சயமாக அல்லாஹ் தனது தூதர்களுக்கு கட்டளை இட்டவை களையே இறை நம்பிக்கையாளர்களுக்கும் கட்டளையிட் டுள்ளான். "தூதர்களே! பரிசுத்தமானவைகளையே உண்ணு-ங்கள், மேலும் நல்லமல் செய்யுங்கள்" என்றும், "நம்பிக்கை கொண்டவர்களே! நாம் உங்களுக்கு வழங்கியதில் பரிசுத்தமானவைகளையே உண்ணுங்கள் என்றும் அவன் கூறுகின்றான்" எனக் கூறிய இறைத் தூதர் அவர்கள் ஒரு மனிதன் பற்றிக் குறிப்பிடும் போது அவன் தலைவிரி கோல மாகவும், தனது பாதங்களில் தூசு படிந்தவனாகவும் நீண்ட பயணம் செய்கின்றான். (கஷ்டத்தின் போது) தனது இரு கரங்களையும் வானின் பக்கமாக உயர்த்தி, (கஷ்டம் நீங்கிட) எனது இரட்சகனே! எனது இரட்சகனே! என அழைத்துப் பிரார்த்தனையும் செய்கின்றான். ஆனால், அவனது உணவு ஹராம், குடித்த பானமும் ஹராம், அவனது ஆடையும் ஹராம், ஹராமாகவே அவனது உடம்பு வளர்க்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் அவனுக்கு பிரார்த்தனை எவ்வாறு அங்கீகரிக் கப்படும் என நபி (ﷺ) அவர்கள் கேட்டார்கள்." (முஸ்லிம்)

பிற மனிதர்களிடம் சுரண்டப்பட்ட பணங்கள் அவர்களிடம் மீட்டப்படல் வேண்டும். அநீதி இழைக்கப்பட்டோரிடம் மன்னிப்புக் கோரப்படல் வேண்டும், இனியும் இவ்வாறான பாவங்கள் பக்கம் மீள்வதில்லை என சம்மந்தப்பட்டவர்கள் உறுதியாக நம்ப வேண்டும். இல்லையேல் குளிக்கப் போய் சேறு பூசிய கதை யாகவே ஹஜ் பயணம் மாறும். (அல்லாஹ்தான் நம் அனைவரையும் பாதுகாக்க வேண்டும்.)

அல்லாஹ்வுக்காக நிறைவேற்றுதல்:

அமல்கள் புரிகின்ற இறை நம்பிக்கையாளர்களிடம் 'இக்லாஸ்' என்ற தூய எண்ணம் மேலோங்கிக் காணப்படுவது

அவசியமாகும். ஒரு வணக்கம் நிறைவேற 'இக்லாஸ்', - மனத்தூய்மை, 'இத்திபாஃ' –இறைத்தூதர் வழிப் பிரகாரம் அமைத்தல் ஆகிய இரண்டு நிபந்தனைகளில் இக்லாஸை வணக்கங்களில் நிலை நிறுத்திக் கொள்ள 'ரியா' (முகஸ்துதி) வுடன் போராடும் விசுவாசி ஒருவர் வணக்கங்களில் பொதுவாக எதிர் கொள்ளும் மிகப் பெரும் சோதனைகளில் ஒன்று எனக் கூற முடியும்.

அவன் தனது சிறிய மற்றும் பெரிய அமல்கள் எது வானாலும் அவற்றை அல்லாஹ்வுக்காக செய்வதாக எண்ணிச் செயலாற்ற வேண்டுமேயன்றி, அவற்றை பிறருக்காக செய்வதாகக் கனவிலும் எண்ணக்கூடாது.

ஹாஜியார், ஹாஜி, ஹாஜிம்மா, ஹாஜியானி, அல்ஹாஜ் போன்ற நாமங்கள் சமுதாயத்தில் பவனி வருவதைப் பார்த்தால் வணக்கங்களின் நன்மைகளை அழிக்கின்ற முதல் நிலையில் புனித 'ஹஜ்' ஆகிவிட்டதோ என எண்ணத்தோன்றும் அளவுக்கு நிலைமை தலைகீழாக மாறி இருக்கின்றது. இது ஹாஜிகளின் முகஸ்துதியின் யதார்த்த நிலையைப் புடம் போட்டுக் காட்டுகின்றது.

ஹாஜிகள் தமது மனக் குரோதங்களைக் களைவதற் காக வீடுவீடாகச் சென்று மன்னிப்புக்கோரும் போதும், பள்ளி களில் ஹஜ்ஜுக்கான முஸாபஹா, முஆனகா செய்கின்ற போதும் தற்பெருமை அற்றவர்களாக இருப்பார்களா? என்பது நியாயமான சந்தேகமே.

எனவே, இவ்வாறான செயற்பாடுகளால் 'ரியா' என்ற முகஸ்துதி உருவெடுக்குமாக இருந்தால் அவற்றைத் தவிர்த்து தொழுகைக்குச் செல்வது போன்று செல்வதே ஏற்றமானதாகும்.

இருப்பினும் தமது தவறுகளுக்காக பொது மக்கள் மன்றில் மன்னிப்புக் கோருகின்ற ஒரு அம்சம் நடந்தேறு கின்றது என்றால் அதனை நாம் விமர்சனம் செய்யவும்

முடியாது. தான் யாருக்காவது தவறிழைத்திருப்பின் நபி மொழியில் வந்திருப்பது போன்று அதனை சம்மந்தப்பட்ட வர்களோடு மாத்திரம் முடித்துக் கொள்ளவும் வேண்டும்.

“ஹஜ்” மற்றும் “உம்ரா” பற்றிக் குறிப்பிடும் அல்குர்ஆன்

وَأَتِمُّوا الْحَجَّ وَالْعُمْرَةَ لِلَّهِ ..... ﴿١٩٦﴾ (البقرة : ١٩٦)

“ஹஜ்ஜையும் உம்ராவையும் அல்லாஹ்வுக்காக முழுமைப்படுத்துங்கள்” (அல் பகரா: 196) என்று குறிப்பிடு கின்றது. ஒருவர் இக்கடமையினை அல்லாஹ்வுக்காகவே நிறைவு செய்ய வேண்டும் என்பதை இது உணர்த்தவில்லையா?”

அமல்களில் இடம்பெறக் கூடாத தற்பெருமை, முகஸ்துதி ஆகிய இரு பண்புகள்:

عَنْ أَبِي هُرَيْرَةَ رَضِيَ اللهُ عَنْهُ ، قَالَ : قَالَ رَسُولُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ : قَالَ اللهُ تَبَارَكَ وَتَعَالَى : "أَنَا أَغْنَى الشُّرَكَاءِ عَنِ الشِّرْكِ ، مَنْ عَمِلَ عَمَلًا أَشْرَكَ فِيهِ مَعِي غَيْرِي، تَرَكْتُهُ وَشِرْكَهُ" . (أخرجه مسلم)

அல்லாஹ் கூறுவதாக இறைத் தூதர் முஹம்மது நபி (ﷺ) அவர்கள் கூறினார்கள். நான் இணை வைப்போரின் இணை வைப்பை விட்டும் எவ்வித தேவையுமற்றவன். யார் ஒருவர் ஒரு செயலைச் செய்து, அதில் என்னோடு பிறரையும் கூட்டாக்குகின்றாரோ அவரை அவரது இணைவைப்போடு விட்டுவிடுவேன். (நூல்: முஸ்லிம்)

புகாரி, முஸ்லிமில் இடம் பெறும் மற்றொரு அறிவிப்பில் ஜுன்துப் இப்னு அப்தில்லாஹ் (رضي الله عنه) அறிவிக்கின்றார்கள். “நான் நபி (ﷺ) அவர்களுக்கு அருகில் சென்றேன். அப்போது அவர்கள்,

مَن سَمَّعَ سَمَّعَ اللهُ بِهِ، ومَن يُرائِي يُرائِي اللهُ بِهِ

விளம்பரத்திற்காக நற்செயல் புரிபவர் (உடைய நோக்கம்) பற்றி அல்லாஹ் (மறுமை நாளில்) விளம்பரப்படுத்துவான். யார் ஒருவர் முகஸ்து திக்காக நற்செயல் புரிகின்றாரோ அல்லாஹ் (மறுமை நாளில்) அவரையும் அம்பலப்படுத்துவான்“ என்று கூறியதைக் கேட்டேன் எனக் கூறுகின்றார்கள்.

(புகாரி, முஸ்லிம்)



நபிகள் நாயகம் (ﷺ) அவர்கள் வாகனத்தின் மீது அமர்ந்ததும்,

اَللّٰهُ أَكْبَرُ　 - (அல்லாஹு அக்பர்)

அல்லாஹ் மிகப் பெரியவன் என மூன்று தடவைகள் கூறுவார்கள். பின்னர்,

سُبْحٰنَ الَّذِىْ سَخَّرَ لَنَا هٰذَا وَمَا كُنَّا لَهٗ مُقْرِنِيْنَ　(الزخرف : ١٣)

“சுப்ஹானல்லதீ ஸஹ்ஹர லனா ஹாதா, வமா குன்னா லஹு முக்ரினீன். வஇன்னா இலா ரப்பினா லமுன்கலிபூன்” (அஸ்ஸுக்ருஃப்: 13) என்ற இறைமறை வசனத்தில் இடம் பெறும் பிரார்த்தனையைக் கூறுவார்கள்.

பொருள்:

இதை சொந்தமாக்கி கொள்ள வசதியற்றவர்களாக இருந்த எமக்கு இதனை வசப்படுத்தித் தந்த (அல்லாஹ்) தூயவன். நாம் எமது இரட்சகனிடம் மீளக் கூடியவர்களே!

ஊரின் எல்லையைக் கடந்ததும்,

اَللّٰهُمَّ إِنَّا نَسْأَلُكَ فِيْ سَفَرِنَا هٰذَا الْبِرَّ وَالتَّقْوٰى وَمِنَ الْعَمَلِ مَا تَرْضٰى اَللّٰهُمَّ
هَوِّنْ عَلَيْنَا سَفَرَنَا هٰذَا وَاطْوِ عَنَّا بُعْدَهُ اَللّٰهُمَّ أَنْتَ الصَّاحِبُ فِي السَّفَرِ

وَالْخَلِيْفَةُ فِي الْأَهْلِ اَللّٰهُمَّ إِنِّيْ أَعُوْذُ بِكَ مِنْ وَعْثَاءِ السَّفَرِ وَكَآبَةِ الْمَنْظَرِ وَسُوْءِ الْمُنْقَلَبِ فِي الْمَالِ وَالْأَهْلِ.

என்று பிரார்த்திப்பார்கள். (நூல்: முஸ்லிம்).

பொருள்:

"யா அல்லாஹ் எமது இந்தப் பயணத்தில் நன்மை செய்வதையும் (உன்) அச்சத்தையும் நீ பொருந்தும் அமல்கள், புரிவதையும் உன்னிடம் வேண்டுகின்றோம்."

"யா அல்லாஹ்! எமது இந்தப் பயணத்தை இலகு வாக்கித் தருவாயாக! எமக்கு இதன் தூரத்தை சுருக்கித் தருவாயாக!"

"யா அல்லாஹ்! நீயே பயணத்தில் எமது பாதுகாப்புத் தோழன், நீயே குடும்பத்தில் பிரதிநிதி."

"யா அல்லாஹ்! பயணக் களைப்பு, கெட்ட பார்வை, பொருளாதாரத்திலும் குடும்பத்திலும் ஏற்படும் தீய முடிவுகளில் இருந்தும் உன்னிடம் பாதுகாப்புத் தேடுகின்றேன்." (முஸ்லிம்)

தக்பீ(B)ர், தஸ்பீ(B)ஹ் கூறுதல்

பள்ளத்தாக்கை நோக்கி கீழிறங்கும் போதும், அதில் இருந்து மேல் நோக்கி ஏறும் போதும், اَللّٰهُ أَكْبَرُ اَللّٰهُ أَكْبَرُ لَا إِلٰهَ إِلَّا اللّٰهُ **"அல்லாஹு அக்பர், அல்லாஹு அக்பர், லாஇலாஹ இல்லாஹு"** என்ற உயரிய வாசகங்களைத் தாழ்ந்த குரலில் கூறுதல் . (நூல்: புகாரி)

சமதரையில் செல்கின்ற போதும், அதில் இருந்து கீழ் நோக்கி பயணிக்கும் போதும் سُبْحَانَ اللّٰهِ "சுப்ஹானல்லாஹ்" என்று கூறுதல். (நூல்: புகாரி)



நபி வழிமுறை பற்றி தெளிவாக அறிந்து செயற்படுதல்

இதில்தான் ஒரு ஹாஜியின் ஹஜ்ஜின் முழுமையான திருப்தியும் மன நிம்மதியும் தங்கியுள்ளது. இதில் அதிகமானோர் குறைவு செய்வதையே அவதானிக்க முடிகின்றது.

ஒரு சிலரைத் தவிர பலர் தாம் கொண்ட கொள்கை அல்லது மத்ஹபு அடிப்படையில் மக்களை ஹஜ் செய்ய பயிற்றுவிக்கிறார்களே அன்றி மாநபியின் வழியில் செய் வதற்கு அவர்கள் பயிற்றுவிப்பது குறைவாகும்.

நபி (ﷺ) அவர்கள் செய்தது ஒரேயொரு ஹஜ்ஜுதான். அதுவே அவர்களின் முதலாவதும் இறுதியானதுமான ஹஜ்ஜாகும். ஆனால், அதில் நூற்றுக்கணக்கான வழிமுறைகள் பதிவு செய்யப்பட்டிருப்பதைப் பார்க்கின்ற போது நமது ஹாஜி களை வழி நடத்தும் முகவர்கள் பற்றி கவலைப்பட வேண்டிய வர்களாய் இருக்கின்றோம்.

இறுதி ஹஜ்ஜின் போது மக்களிடம்,

لِتَأْخُذُوا مَنَاسِكَكُمْ فَإِنِّي لَا أَدْرِي لَعَلِّي لَا أَحُجُّ بَعْدَ حَجَّتِي هَٰذِهِ

(أخرجه مسلم)

“நீங்கள் உங்கள் ஹஜ்ஜுக்கான வணக்க முறைகளை (என்னில் இருந்து) எடுத்துக் கொள்ளுங்கள் என நபி (ﷺ) அவர்கள் கூறினார்கள்.” (முஸ்லிம்)

மேற்படி ஹதீஸ் இறைத் தூதரின் வழியில் ஹஜ் செய்ய வேண்டும் எனக் கட்டளையாகக் கூறுவதை இங்கு அவதானிக்கலாம்.

நபியைப் போன்று "ஹஜ்" செய்ய வேண்டியதன் அவசியத்தை நபித்தோழர்களின் வாழ்வில் நடந்த பின்வரும் நிகழ்ச்சி உறுதி செய்கின்றது.

...أَخْبِرْنِي عَنْ حَجَّةِ رَسُولِ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ ، فَقَالَ بِيَدِهِ فَعَقَدَ تِسْعًا، فَقَالَ : إِنَّ رَسُولَ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ مَكَثَ تِسْعَ سِنِينَ لَمْ يَحُجَّ ، ثُمَّ أَذَّنَ فِي النَّاسِ فِي الْعَاشِرَةِ أَنَّ رَسُولَ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ حَاجٌّ ، فَقَدِمَ الْمَدِينَةَ بَشَرٌ كَثِيرٌ كُلُّهُمْ يَلْتَمِسُ أَنْ يَأْتَمَّ بِرَسُولِ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ وَيَعْمَلَ مِثْلَ عَمَلِهِ . (أخرجه مسلم)

முஹம்மத் பின் அலி பின் ஹஸன் (ﷺ) அவர்கள் ஜாபிர் (ﷺ) அவர்களிடம் நபிகள் நாயகம் (ﷺ) அவர்களின் ஹஜ்ஜைப் பற்றி எனக்கு அறிவியுங்கள் எனக் கேட்டார். அதற்கு அவர்கள், (ஹிஜ்ரத்தின் பின் நபி (ﷺ) அவர்கள் ஒன்பது ஆண்டுகள் ஹஜ் செய்திருக்கவில்லை என்பதை உணர்த்துவதற்காக) ஒன்பது முறை தனது கை விரல்களை மடக்கிக் காட்டி, ஒன்பது ஆண்டுகள் நபி (ﷺ) அவர்கள் "ஹஜ்" செய்யாது இருந்தார்கள். (ஹிஜ்ரி) பத்தாவது வருடம்தான் "ஹஜ்" செய்யப்போவதாக மக்களுக்கு அறிவிப்பு செய்தார்கள். நபி (ﷺ) அவர்களைப் பின்பற்றிடவும் அவர்கள் அமல் செய்வது போன்று அமல் செய்யவும் (மதீனாவை நோக்கி) பெரும் திரளான மக்கள் வந்து சேர்ந்தனர். (நூல்: முஸ்லிம்)

இவ்வாறு குறிப்பிடும் ஜாபிர் (ﷺ) அவர்களின் மேற்படி செய்தியை அவதானித்தால் அல்லாஹ்வின் தூதர் (ﷺ) எவ்வாறு ஹஜ் செய்தார்களோ அதே போன்று ஹஜ் செய்வதாலேயே அதன் பரிபூரண நன்மையைப் பெற்றுக் கொள்ளலாம் என்பதை

மத்ஹபுகள் பற்றி அறிவூட்டப்படாத இறைத்தூதரின் வழியை மாத்திரம் அறிவூட்டப்பட்ட நபி (ﷺ) அவர்களின் காலத்தில் வாழ்ந்த மக்கள் விளங்கிய காரணத்தினால்தான் பெரும் திரளான மக்கள் "ஹஜ்" செய்வதற்காக மதீனாவில் நபி (ﷺ) அவர்களுடன் ஒன்று சேர்ந்திருக்கின்றனர் என்பதை விளங்கலாம்.

இதை விடுத்து, "நமது மத்ஹபே நமக்குப் புகலிடம்" என்ற நிலையில் "மத்ஹப்" சார்ந்த மௌலவிகள் தமது ஹாஜிகளுக்கு குழப்பமான கருத்துக்களை போதிப்பதால் நபி வழிக்கு முரணான பல வழிமுறைகள், இறைத்தூதர் (ﷺ) செய்யாத பல பித்அத், அநாச்சாரங்கள் நன்மை செய்தல் என்ற பெயரில் அந்தப் புனித பூமியில் அரங்கேற்றப்படுவதை பார்க்கிறோம்.

யார் ஒருவர் மதீனாவில் புதிய நூதனங்களை உரு வாக்குகிறாரோ அல்லது நூதனத்தை உருவாக்குபவருக்கு அடைக்களம் அளிக்கின்றாரோ அவர் மீது அல்லாஹ்வின் சாபமும், வானவர்களின் சாபமும், அனைத்து மனிதர்களின் சாபமும் உண்டாகும். இவ்வுலகில் அவனிடமிருந்து (அதற்கு) ஈடானவைகளோ (மறுமையில்) எவ்வித பரிந்துரைகளோ ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. என இறைத்தூதர் கூறினார்கள்.

(புகாரி, முஸ்லிம்)

எனவேதான், அந்த நிலை மாறி இறைத்தூதர் வழியில் கடமைகளை நிறைவு செய்வதற்காக ஹஜ்ஜில் நபியின் வழிமுறை பற்றியும் நாம் அறிந்திருப்பது அவசியமாகும்.

எந்தவொரு செயலைச் செய்கின்ற போதும் இறைத் தூதரின் வழியே நமது வழி என நடப்பதும் இறைத்தூதர் மீதுள்ள பாசத்திற்கான அடையாளமாகும்.



06

ஹஜ் செய்வதன் அவசியம்

ஹஜ் இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமைகளில் ஒன்றாகும். மக்காவில் இருக்கும் புனித கஃபா ஆலயத்தையும் அங்குள்ள புனித இஸ்லாமிய அடையாளச் சின்னங்களை பிரதானப்படுத்தியும் மேற்கொள்ளப்படும் இவ்வணக்கத்தை, அவ்வில்லம் சென்று நிறைவேற்ற சக்தியும் பண வசதியும் உடல் நலமும் பெற்ற, பருவ வயதை அடைந்த ஒவ்வொரு முஸ்லிமும் வாழ்நாளில் அவசியம் ஒரு தடவை மிகவிரைவாக நிறைவேற்றுவது கடமையாகும்.

فِيهِ ءَايَٰتٌۢ بَيِّنَٰتٌ مَّقَامُ إِبْرَٰهِيمَ ۖ وَمَن دَخَلَهُۥ كَانَ ءَامِنًا ۗ وَلِلَّهِ عَلَى ٱلنَّاسِ حِجُّ ٱلْبَيْتِ مَنِ ٱسْتَطَاعَ
إِلَيْهِ سَبِيلًا ۚ وَمَن كَفَرَ فَإِنَّ ٱللَّهَ غَنِىٌّ عَنِ ٱلْعَٰلَمِينَ ﴿٩٧﴾ (آل عمران : ٩٧)

“அங்கு தெளிவான அத்தாட்சிகள் உண்டு. மகாமு இப்றாஹீம் (அதில் ஒன்றாகும்). அதனுள் பிரவேசித்தவர் அச்சமற்றவராகி விடுகின்றார். மனிதர்களில் அல்லாஹ்வின் (இல்லத்திற்கு சென்று வர) வசதியுடையோர் அவ்வில்லத்தை ஹஜ் செய்வது அவர்கள் மீது விதிக்கப்பட்ட கடமையாகும்.”

(ஆலுஇம்ரான்: 97)

عَنِ ابْنِ عُمَرَ رَضِيَ اللهُ عَنْهُمَا قَالَ قَالَ رَسُولُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ :
"بُنِيَ الْإِسْلَامُ عَلَى خَمْسٍ ، شَهَادَةِ أَنْ لَا إِلَهَ إِلَّا اللهُ وَأَنَّ مُحَمَّدًا رَسُولُ اللهِ ،
وَإِقَامِ الصَّلَاةِ ، وَإِيتَاءِ الزَّكَاةِ ، وَالْحَجِّ ، وَصَوْمِ رَمَضَانَ . (متفق عليه)

“இஸ்லாம் ஐந்து அடித்தளங்கள் மீது அமைக்கப் பட்டுள்ளது. (அவை) உண்மையாக வணங்கப்படுவதற்கு தகுதியான நாயன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் இல்லை. முஹம்மத் (ﷺ) அவர்கள் அல்லாஹ்வின் அடியாரும், தூதருமாவார்கள், தொழுகையை நிலைநாட்டுதல், ஸகாத் கொடுத்தல், ஹஜ் செய்தல், ரமளானில் நோன்பு நோற்றல் ஆகியனவாகும்.” (நூல்: புகாரி, முஸ்லிம்)

عَنْ أَبِى هُرَيْرَةَ رَضِيَ اللهُ عَنْهُ قَالَ : خَطَبَنَا رَسُولُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ فَقَالَ : «أَيُّهَا النَّاسُ قَدْ فَرَضَ اللهُ عَلَيْكُمُ الْحَجَّ فَحُجُّوا». فَقَالَ رَجُلٌ أَكُلَّ عَامٍ يَا رَسُولَ اللهِ؟ فَسَكَتَ حَتَّى قَالَهَا ثَلاَثًا ، فَقَالَ رَسُولُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ : «لَوْ قُلْتُ نَعَمْ لَوَجَبَتْ وَلَمَا اسْتَطَعْتُمْ ، - ثُمَّ قَالَ - ذَرُونِى مَا تَرَكْتُكُمْ، فَإِنَّمَا هَلَكَ مَنْ كَانَ قَبْلَكُمْ بِكَثْرَةِ سُؤَالِهِمْ وَاخْتِلاَفِهِمْ عَلَى أَنْبِيَائِهِمْ ، فَإِذَا أَمَرْتُكُمْ بِشَيْءٍ فَأْتُوا مِنْهُ مَا اسْتَطَعْتُمْ ، وَإِذَا نَهَيْتُكُمْ عَنْ شَيْءٍ فَدَعُوهُ ».

(أخرجه مسلم)

எமக்கு பிரசங்கம் நிகழ்த்திய நபி (ﷺ) அவர்கள் “மனிதர்களே! நிச்சயமாக அல்லாஹ் உங்கள் மீது ஹஜ்ஜைக் கடமையாக்கியுள்ளான். ஆகவே விரைந்து ஹஜ் செய்யுங்கள்” என கட்டளையிட்டார்கள். ஒரு மனிதர் எழுந்து அல்லாஹ்வின் தூதரே! ஒவ்வொரு ஆண்டுமா? எனக் கேட்டார். அவர்கள் பதில் கூறாது மௌனமானார்கள். அவர் மூன்று தடவைகள் கேட்ட பின்னர் நான் “ஆம்” எனக் கூறினால் அது கடமையாகிவிடும். நீங்கள் நிறைவேற்றிக் கொள்ள சக்தி பெற மாட்டீர்கள். நான் உங்களுக்குக் கட்டளையிடுபவைகளோடு நின்று கொள்ளுங் கள். உங்களுக்கு முன்பு வாழ்ந்தோர் அதிகமாகக் கேள்வி கேட்டதாலும் தமது தூதர்களோடு முரண்பட்டதாலுமே அழிந்து போனார்கள் எனக் கூறியதாக அபூஹுரைரா (رضي الله عنه) அவர்கள் அறிவிக்கிறார்கள். (நூல்: முஸ்லிம்)

மேற்படி கடமையினை ஒருவர் திடகாத்திரமாகவும் உடல் வலிமையோடும் இருக்கின்ற போது செய்யும் போதுதான் அலாதியான திருப்தி அடைவார். காலம் தாழ்த்தி, வயதான பின்னர் செய்கின்ற போது ஏதோ கடமை முடிந்து விட்டதுதானே என பெருமூச்சு விடுவார் அவ்வளவுதான். அதனால் விரைந்து இக்கடமையை நிறைவேற்ற வேண்டும்.

'ஹஜ்' செய்வோர் அல்லாஹ்வின் மன்னிப்பையும், மகத்தான நற்கூலியையும் ஈருலகிலும் பெறுகின்றனர் என்பதை உணர்த்தும் பல நபிமொழிகள் ஹதீஸ் கிரந்தங் களில் இடம் பெற்றுள்ளன. அவற்றில் சில கீழே தரப் படுகின்றன.

عَنْ أَبِي هُرَيْرَةَ رَضِيَ اللهُ عَنْهُ قَالَ قَالَ النَّبِيُّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ : "مَنْ حَجَّ هٰذَا الْبَيْتَ فَلَمْ يَرْفُثْ وَلَمْ يَفْسُقْ رَجَعَ كَيَوْمِ وَلَدَتْهُ أُمُّهُ" (أخرجه البخاري)

"யார் ஒருவர் இந்த வீட்டை ஹஜ் செய்து, (மற்றொரு அறிவிப்பில்: அல்லாஹ்வுக்காக ஹஜ் செய்து) அவர் (ஹஜ்ஜில் தனது மனைவியுடன்) உடலுறவு கொள்ளாது, தீய செயல்களில் (செயலால், வார்த்தையால்) ஈடுபடவில்லையோ அவரை அவரது தாய் அன்றே பெற்றெடுத்தவர் போன்றவராக மீள்கின்றார்" என நபி (ﷺ) அவர்கள் கூறினார்கள். (புகாரி)

عَنْ أَبِي هُرَيْرَةَ رَضِيَ اللهُ عَنْهُ أَنَّ رَسُولَ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ : "اَلْعُمْرَةُ إِلَى الْعُمْرَةِ كَفَّارَةٌ لِمَا بَيْنَهُمَا ، وَالْحَجُّ الْمَبْرُورُ لَيْسَ لَهُ جَزَاءٌ إِلَّا الْجَنَّةُ".

(متفق عليه)

"ஒரு உம்ரா, மறு உம்ரா வரையுள்ள சிறுபாவங்க ளுக்குப் பரிகாரமாகும். அங்கீகரிக்கப்பட்ட ஹஜ்ஜின் கூலி சுவனமாகும்" என நபிகள் நாயகம் (ﷺ) அவர்கள் கூறியதாக அபூஹுரைரா (رضي الله عنه) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

(ஆதாரம்: புகாரி, முஸ்லிம்)

أَنَّ الْإِسْلَامَ يَهْدِمُ مَا كَانَ قَبْلَهُ ، وَأَنَّ الْهِجْرَةَ تَهْدِمُ مَا كَانَ قَبْلَهَا ، وَأَنَّ الْحَجَّ يَهْدِمُ مَا كَانَ قَبْلَهُ . (أخرجه مسلم)

'இஸ்லாம்' அதற்கு முன்னால் உள்ள பாவங்களை அழித்துவிடும். 'ஹிஜ்ரத்' அதற்கு முன்னர் உள்ள பாவங்களை அழித்துவிடும். 'ஹஜ்' அதற்கு முன்னருள்ள பாவங்களை அழித்துவிடும் என நபி (ﷺ) அவர்கள் கூறினார்கள்.
(நூல்: முஸ்லிம்)

عنْ عَائِشَةَ أَنَّ رَسُولَ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ : "مَا مِنْ يَوْمٍ أَكْثَرَ مِنْ أَنْ يُعْتِقَ اللهُ فِيهِ عَبْدًا مِنَ النَّارِ مِنْ يَوْمِ عَرَفَةَ ، وَإِنَّهُ لَيَدْنُو ثُمَّ يُبَاهِيْ بِهِمُ الْمَلَائِكَةَ ، فَيَقُولُ : مَا أَرَادَ هَؤُلَاءِ" (أخرجه مسلم)

"அரஃபா தினத்தில் அல்லாஹ் நரகில் இருந்து அடியார்களை விடுதலை செய்வது போன்று வேறு எந்த தினத்திலும் அதிகமான நரகவாதிகளை விடுதலை செய்வதில்லை. அவன் அவர்களை நெருங்கிவருகின்றான். பின்னர், அவர்கள் பற்றி வானவர்களிடம் பெருமையாகப் பேசி, இவர்கள் என்ன எதிர்ப்பார்க்கின்றனர் என்றும் கேட்கின்றான்" என நபி (ﷺ) அவர்கள் கூறினார்கள். (நூல்: முஸ்லிம்)

'ஹஜ்' என்றால் 'அரஃபா'தான் எனக் கூறிய இறைத்தூதர் அவர்களின் கூற்றின் மூலம், அரஃபாவில் தரிப்பதுடன் அரஃபா தினத்தில் அல்லாஹ் நரகவாதிகளை விடுதலை செய்வதும் ஒன்றாக இருப்பது உள்ளடங்கியிருக்கலாம்.

ஹஜ், உம்ராவின் சிறப்பை எடுத்துக் கூறும் ஆதார பூர்வமான பல நபி மொழிகள் ஹதீஸ் நூல்களில் பதிவு செய்யப்பட்டுள்ள போதிலும் விரிவை அஞ்சி இந்த ஹதீஸுடன் போதுமாக்கிக் கொள்ளப்படுகின்றது.



07 வருடம் தோறும் ஹஜ் செய்வது கடமையா?

வாழ்நாளில் ஒரு தடவை ஹஜ் செய்வதே கடமை என்பதை முன்னர் கூறினோம். வருடா வருடம் ஹஜ் செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்பதை பின்வரும் நபிமொழி உறுதி செய்கின்றது.

عَنْ أَبِي هُرَيْرَةَ رَضِيَ اللهُ عَنْهُ قَالَ خَطَبَنَا رَسُولُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ ، فَقَالَ : « أَيُّهَا النَّاسُ قَدْ فَرَضَ اللهُ عَلَيْكُمُ الْحَجَّ فَحُجُّوا ». فَقَالَ رَجُلٌ أَكُلَّ عَامٍ يَا رَسُولَ اللهِ؟ فَسَكَتَ حَتَّى قَالَهَا ثَلاَثًا فَقَالَ رَسُولُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ : « لَوْ قُلْتُ نَعَمْ لَوَجَبَتْ وَلَمَا اسْتَطَعْتُمْ" ، ثُمَّ قَالَ : "ذَرُونِي مَا تَرَكْتُكُمْ فَإِنَّمَا هَلَكَ مَنْ كَانَ قَبْلَكُمْ بِكَثْرَةِ سُؤَالِهِمْ وَاخْتِلاَفِهِمْ عَلَى أَنْبِيَائِهِمْ ، فَإِذَا أَمَرْتُكُمْ بِشَيْءٍ فَأْتُوا مِنْهُ مَا اسْتَطَعْتُمْ ، وَإِذَا نَهَيْتُكُمْ عَنْ شَيْءٍ فَدَعُوهُ ».

(أخرجه مسلم)

“எமக்கு பிரசங்கம் நிகழ்த்திய நபி (ﷺ) அவர்கள் “மக்களே! நிச்சயமாக அல்லாஹ் உங்கள் மீது ஹஜ்ஜைக் கடமையாக்கியுள்ளான். ஆகவே விரைந்து ஹஜ் செய்யுங்கள்” என கட்டளையிட்டார்கள். ஒரு மனிதர் எழுந்து அல்லாஹ்வின் தூதரே! ஒவ்வொரு ஆண்டுமா? எனக் கேட்டார். அவர்கள் பதில் கூறாது மௌனமானார்கள். அவர் மூன்று தடவைகள் கேட்ட பின்னர் நான் “ஆம்” எனக் கூறினால் அது கடமையாகிவிடும்.

நீங்கள் நிறைவேற்றிக் கொள்ள சக்தி பெற மாட்டீர்கள். நான் உங்களுக்கு கட்டளையிடுபவைகளோடு நின்று கொள்ளுங்கள். உங்களுக்கு முன்பு வாழ்ந்தோர் அதிகமாகக் கேள்வி கேட்டதாலும் தமது தூதர்களோடு முரண்பட்டதாலுமே அழிந்து போனார்கள்" எனக் கூறியதாக அபூஹுரைரா (رضي الله عنه) அவர்கள் அறிவிக்கிறார்கள். (நூல்: முஸ்லிம்)

இதன் மூலம் 'ஹஜ்' வாழ்நாளில் ஒரு தடவை செய்யப்பட வேண்டிய கடமை என்பதை விளங்கலாம். மேலும், கடமைகள் என்ற பெயரில் இஸ்லாம் மக்கள் மீது சுமைகளைத் திணிக்காது இலகுவைக் கடைப்பிடிப்பதையும் அறிந்து கொள்ள முடியும்.

வசதி படைத்த ஒரு முஸ்லிம் தனது வாழ் நாளில் ஒரேயொரு தடவை மாத்திரம் அவன் மீது கடமையாக்கப்பட்ட இந்தக் கடமையைக் கூட நம்மில் செல்வம் படைத்த பலர் அல்லாஹ் தனக்கு வழங்கிய செல்வங்களையும் மறந்து பலவிதமான சாக்குப் போக்குகளைக் கூறி அலட்சியம் செய்கின்ற நிலைமைகளை அவதானிக்கின்றோம். இது கடமையான ஒரு ஃபர்ழை அவர் உதாசீனம் செய்வதற்கும் போதுமான சான்றாகும்.

"நாளை செய்வோம்", "வரும் வருடம் செய்வோம்" போன்ற உணர்வுகள் ஷைத்தானின் புறத்திலிருந்து வருகின்ற தீய அறிவுரைகளாகும்.

குடும்பத்தில் நிகழும் முக்கிய நிகழ்வுகளுக்காகப் பல மில்லியன் ரூபாய்களைச் செலவு செய்வோர் ஒரு சில இலட்சங்களை அல்லாஹ்வுக்காக இழப்பதற்கு சிந்திப்பதனா-லேயே பலர் ஹஜ்ஜைத் தவற விடுகின்றனர்.



08 உடல் பலவீனமான பெற்றோருக்கான ஹஜ்

மரணித்த அல்லது வாகனத்தில் அமர்ந்து மக்கா சென்று ஹஜ் செய்ய சக்தி அற்ற, இயலாத அல்லது நோயில் வாழ்கின்ற தமது பெற்றோருக்காக அவர்களின் பிள்ளைகள் செய்கின்ற மிகப் பெரிய உன்னத தர்மங்களில் இதுவும் ஒன்றாகும்.

عَنِ ابْنِ عَبَّاسٍ رَضِيَ اللهُ عَنْهُما أَنَّ امْرَأَةً مِنْ خَثْعَمَ سَأَلَتِ النَّبِيَّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ غَدَاةَ جَمْعٍ فَقَالَتْ يَا رَسُولَ اللهِ فَرِيضَةُ اللهِ فِي الْحَجِّ عَلَى عِبَادِهِ أَدْرَكَتْ أَبِي شَيْخًا كَبِيرًا لَا يَسْتَمْسِكُ عَلَى الرَّحْلِ ، أَفَأَحُجُّ عَنْهُ ؟ قَالَ : نَعَمْ ، (متفق عليه)

(البخاري) وفي رواية له :- وَذَلِكَ فِي حَجَّةِ الْوَدَاعِ.

“ஹஸ்அம்” கோத்திரத்தைச் சேர்ந்த ஒரு பெண்மணி அல்லாஹ்வின் தூதரிடம் வந்து “அல்லாஹ்வின் தூதரே! ஹஜ் அல்லாஹ் தனது அடியார்கள் மீது விதித்த அவனது கடமையாக இருக்கின்றது. எனது தந்தை வாகனத்தில் அமர முடியாத அளவு முதியவராக இருக்கின்றார். ஆகையால், அவருக்காக நான் ஹஜ்ஜை நிறைவேற்றலாமா?” எனக் கேட்டார். “ஆம். அவருக்காக நீ ஹஜ் செய்து கொள்” என நபி (ﷺ) அவர்கள் பதில் கூறினார்கள். (நூல்: புகாரி, முஸ்லிம்)

புகாரியின் மற்றொரு அறிவிப்பில், இது “ஹஜ்ஜத்துல் வதா” அதாவது நபி (ﷺ) அவர்களின் இறுதி ஹஜ்ஜின் போது நடை பெற்றதாகும் என இடம் பெற்றுள்ளது.



09
மரணித்த பெற்றோருக்காகவும் ஹஜ் செய்யலாம்

இஸ்லாம் பெற்றோர் உயிருடன் இருக்கின்ற போது அவர்களை மிகவும் மரியாதையோடு நடத்தப் பணித்திருப்பது போன்று, அவர்கள் மரணித்த பின்னாலும் அவர்கள் பெயரில் செய்வதற்கென அழகிய வழிமுறைகளையும் கற்றுத் தந்துள்ளது.

அதில் ஹஜ் மற்றும் அவர்களுக்காகச் செய்ய வேண்டிய பிரார்த்தனை, நிலையான தர்மங்கள் என்பன பிரதான இடத்தை வகிக்கின்றன.

عَنِ ابْنِ عَبَّاسٍ ، رَضِيَ اللهُ عَنْهُمَا أَنَّ امْرَأَةً مِنْ جُهَيْنَةَ جَاءَتْ إِلَى النَّبِيِّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ فَقَالَتْ : إِنَّ أُمِّي نَذَرَتْ أَنْ تَحُجَّ ، فَلَمْ تَحُجَّ حَتَّى مَاتَتْ ، أَفَأَحُجُّ عَنْهَا ؟ قَالَ : "نَعَمْ حُجِّي عَنْهَا ، أَرَأَيْتِ لَوْ كَانَ عَلَى أُمِّكِ دَيْنٌ أَكُنْتِ قَاضِيَةً ، اقْضُوا اللهَ ، فَاللهُ أَحَقُّ بِالْوَفَاءِ . (أخرجه البخاري)

“ஜுஹைனா கோத்திரப் பெண்மணி ஒருவர் நபி (ﷺ) அவர்களிடம் வந்து எனது தாய் ஹஜ் செய்ய நேர்ச்சை செய்திருந்தார், (அதற்கு முன்னர்) அவர் மரணித்துவிட்டார். அவருக்காக நான் ஹஜ் செய்யலாம்தானே? எனக் கேட்டார். உனது தாய் மீது கடன் இருப்பின் நீ அதை நிறைவேற்றுவாய் தானே? என அவரிடம் நபி (ﷺ) அவர்கள் கேட்டார்கள்.

அவர் ஆம் என்றார். அப்படியானால் அல்லாஹ்வுக்குரிய கடனை நீ அவருக்காக நிறைவேற்று, அவன் நிறைவேற்ற மிகவும் தகுதியானவன் எனக் கூறினார்கள்." (புகாரி)

ஹஜ் செய்யாது மரணித்த சகோதரிக்காக ஹஜ் செய்யலாம்:

ஹஜ் செய்ய நேர்ச்சை செய்த நிலையில் மரணிப்-போருக்காக ஹஜ் செய்வது பற்றி பின்வரும் ஹதீஸில் தெளிவு உள்ளது.

عَنِ ابْنِ عَبَّاسٍ رَضِيَ اللهُ عَنْهُمَا قَالَ : أَتَى رَجُلٌ النَّبِيَّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ فَقَالَ لَهُ : إِنَّ أُخْتِي قَدْ نَذَرَتْ أَنْ تَحُجَّ ، وَإِنَّهَا مَاتَتْ ، فَقَالَ النَّبِيُّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ : "لَوْ كَانَ عَلَيْهَا دَيْنٌ أَكُنْتَ قَاضِيَهُ؟ قَالَ : نَعَمْ ، قَالَ : فَاقْضِ اللهَ فَهُوَ أَحَقُّ بِالْقَضَاءِ. (أخرجه البخاري)

"நபி (ﷺ) அவர்களிடம் ஒரு மனிதர் வந்து, எனது சகோதரி ஹஜ் செய்ய நேர்ச்சை செய்திருந்தார், (அதற்கு முன்னால்) அவர் மரணித்துவிட்டார் எனக் கூறினார், அவள் மீது கடன் இருப்பின் நீ அதை நிறைவேற்றுவாய்தானே? என அவரிடம் நபி (ﷺ) அவர்கள் கேட்டார்கள், அவர் ஆம் என்றார். அப்படியானால் அல்லாஹ்வுக்குரிய கடனை நிறைவேற்று, அவன் நிறைவேற்ற மிகவும் தகுதியானவன் எனக் கூறினார்கள்." (நூல்: புகாரி)

குறிப்பு: மரணித்த பெற்றோருக்காக ஹஜ்ஜை நிறை வேற்றுவது போன்று ஹஜ்ஜுடன் இல்லாத தனித்த உம்ராவை மாத்திரம் நிறைவேற்றலாமா? என்ற வாதப் பிரதிவாதங்கள் அறிஞர்கள் மத்தியில் காணப்படுகின்றன.

ஹஜ், உம்ரா ஆகிய இரண்டும் ஒரே கோட்பாட்டை ஒத்திருப்பதால் மரணித்தவருக்காக உம்ராவையும் நிறை வேற்றலாம் எனப் பல அறிஞர்கள் சுட்டிக் காட்டினாலும்

உம்ராவை தனித்து நிறைவு செய்வது பற்றி இன்றும் அறிஞர்கள் கருத்து வேறுபாட்டில் இருப்பதை அறிகின்றோம்.

ஹஜ் இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமைகளில் ஒன்றாகும். ஹஜ்ஜைப் போன்று கடமையாக்கப்படாத உம்ராவுக்கு ஹஜ்ஜுக்காத் தரப்பட்ட அனுமதியை ஒப்பிடலாமா? முடியாதா? என்ற கேள்வியும் வாதங்களும் எழுவது இயல்பானதே!

நபித்தோழர்கள் வரலாற்றில் இவ்வாறான நடைமுறை காணப்பட்டதா? எனத் தேடிப்பார்த்தால் திர்மிதி, சுனன் நஸயி, அபூதாவூத் ஆகிய கிரந்தங்களில் பின் வரும் செய்தி இடம் பெற்றுள்ளது.

عَنْ أَبِي رَزِينٍ الْعُقَيْلِيِّ رَضِيَ اللهُ عَنْهُ ، أَنَّهُ أَتَى النَّبِيَّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ فَقَالَ: يَا رَسُولَ اللهِ إِنَّ أَبِي شَيْخٌ كَبِيرٌ، لَا يَسْتَطِيعُ الْحَجَّ، وَلَا الْعُمْرَةَ، وَلَا الظَّعْنَ قَالَ: «حُجَّ عَنْ أَبِيكَ، وَاعْتَمِرْ» (أخرجه الترمذي وأبو داود والنسائي)

இறைத்தூதர் அவர்களே! எனது தந்தை வாகனத்தில் ஏறிப் பயணிக்கவோ, ஹஜ்-உம்ரா செய்யவோ முடியாமல் இருக்கின்றார் எனக் கூறிய போது நீ அவருக்காக ஹஜ் மற்றும் உம்ரா செய்துகொள் என இறைத்தூதர் அவர்கள் பதிலளித்ததாக இடம் பெறும் செய்தியை ஸஹீஹான செய்தி என்று காணும் அறிஞர்கள் ஹஜ்ஜைப் போன்று உம்ராவையும் நிறைவேற்றலாம் எனக் குறிப்பிடுகின்றனர்.

(திர்மிதி, அபூதாவூத், நஸாஈ)

இது அறிஞர்கள் பலரின் பார்வையாக இருப்பது ஒரு மறைமுகமான இஜ்மாவை ஒத்ததாகவே நோக்க வேண்டி உள்ளது. இந்த ஹதீஸை வைத்து மரணித்த தமது உறவுகளுக்காக உம்ரா செய்வோரை நாம் தடுக்க முடியாது. (அல்லாஹ்வே நன்கு அறிந்தவன்) இருப்பினும் இவர்கள் ஒரு பயணத்தில் பல உம்ராக்கள் செய்வதைத் தவிர்ந்து கொள்ள வேண்டும்.



10

பிறருக்காக ஹஜ், உம்ரா செய்வதற்கான நிபந்தனை

ஒருவர் தனது பெற்றோருக்காக அல்லது உறவினர்களுக்காக ஹஜ் அல்லது உம்ரா செய்வதாயின் முதலாவதாக அவர் தனக்குரிய ஹஜ் மற்றும் உம்ராவை நிறைவேற்றி இருக்க வேண்டும்.

عَنِ ابْنِ عَبَّاسٍ رَضِيَ اللهُ عَنْهُما أَنَّ النَّبِيَّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ سَمِعَ رَجُلًا يَقُولُ لَبَّيْكَ عَنْ شُبْرُمَةَ ، قَالَ مَنْ شُبْرُمَةُ؟ قَالَ أَخٌ لِي أَوْ قَرِيبٌ لِي ، قَالَ : حَجَجْتَ عَنْ نَفْسِكَ؟ قَالَ : لَا ، قَالَ : حُجَّ عَنْ نَفْسِكَ ثُمَّ حُجَّ عَنْ شُبْرُمَةَ .

(أخرجه أبوداود)

“ஒரு மனிதர் ‘லெப்பைக்க – அன் – ஷுப்ருமா’ இது ‘ஷுப்ருமா’ என்பவருக்கான ஹஜ் எனக் கூறிய போது ‘யார் அந்த ஷுப்ருமா என நபி (ﷺ) அவர்கள் வினவினார்கள். அவர், “எனது சகோதரர் அல்லது உறவினர் எனப் பதில் கூறினாார். நீ உனக்காக ஹஜ் செய்து விட்டாயா?’ எனக் கேட்டார்கள். ‘இல்லை’ என்றதும், ‘(முதலில்) உனக்காக ஹஜ் செய், பின்னர் (வரும் காலங்களில்), ஷுப்ருமாவிற்காக ஹஜ் செய்’ எனக் கூறினார்கள். (நூல்: அபூதாவூத்)

இந்த ஹதீஸையே மற்றவருக்காக உம்ரா செய்வோரும் அமுல் நடத்தக் கடமைப்பட்டுள்ளனர்.



11

மஹ்ரமின்றி ஒரு பெண் தனித்தோ அல்லது பல பெண்களோடு சேர்ந்தோ ஹஜ்ஜுக்காகச் செல்ல முடியுமா?

ஹஜ் இஸ்லாத்தின் ஐம்பெரும் பிரதான கடமைகளில் ஒன்றாகும். அதனை ஒரு ஆண் தனிமையாக நிறைவேற்ற அனுமதி இருப்பது போன்று ஒரு பெண் தனியாகச் சென்று நிறைவேற்றலாமா? என்பதில் இரு கருத்துக்கள் காணப் பட்டாலும் அவர் தனிமையாகவோ அல்லது பல பெண்கள் சேர்ந்தோ நிறைவேற்ற மார்க்கத்தில் அனுமதி இல்லை என்பதே குர்ஆன், மற்றும் சுன்னாவில் இருந்து நாம் பெற முடியுமான தெளிவாக இருக்கின்றது.

عَنِ ابْنِ عَبَّاسٍ رَضِيَ اللهُ عَنْهُما عَنْ النَّبِيِّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ : "لَا يَخْلُوَنَّ رَجُلٌ بِامْرَأَةٍ إِلَّا مَعَ ذِي مَحْرَمٍ" ، فَقَامَ رَجُلٌ ، فَقَالَ : يَا رَسُولَ اللهِ ، امْرَأَتِي خَرَجَتْ حَاجَّةً ، وَاكْتُتِبْتُ فِي غَزْوَةِ كَذَا وَكَذَا ، قَالَ : ارْجِعْ فَحُجَّ مَعَ امْرَأَتِكَ . (متفق عليه)

நபி (ஸல்) அவர்கள் ஒரு நாள் தனது உரையில், “அந்நிய ஒரு பெண்ணுடன் எந்த ஒரு ஆணும் தனித்திருக்க வேண்டாம்”, மஹ்ரம் (மணம் முடிக்க மார்க்கத்தில் தடை செய்யப்பட்டவர், அல்லது கணவர்) உடனே அன்றி பயணம் செய்ய வேண்டாம் எனக் கூறியதை செவிமடுத்த ஒரு மனிதர் எழுந்து, “அல்லாஹ்வின் தூதரே! நான் இன்ன, இன்ன போர்களில் கலந்து கொள்ள வேண்டும் எனப் பெயர் பதியப் பட்டிருக்கின்றேன், எனது மனைவியோ ஹஜ் செய்வதற்காகத்

தனியாக புறப்பட்டு சென்று விட்டார் என்றார். அவரிடம், "நீ உடன் திரும்பிப் போய், உனது மனைவியுடன் ஹஜ் செய்" எனப் பணித்தார்கள். (நூல்: புகாரி, முஸ்லிம்)

இந்த ஹதீஸையும் இன்னும் பல ஹதீஸ்களையும் ஆதாரமாகக் கொண்டே ஒரு பெண் தனித்தோ அல்லது பல பெண்களோ (திருமணம் முடிக்க தடை செய்யப்பட்ட) மஹ்ரமான ஆண்கள் துணையின்றி தனிமையில் ஹஜ் பயணமோ அல்லது வேறு பயணங்களோ செல்லக் கூடாது என அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். (மேலதிக சட்டங்களை விரிவாக அறிந்துகொள்ள ஷரீஆவை துறைசார் அறிஞர்களை அணுகவும்.)

அரபு தேசங்கள் ஐரோப்பிய காலனித்துவ ஆக்கிர-மிப்புக்காரர்களால் ஆக்கிரமிக்கப்பட்டு அரபு மாணவ, மாண-வியர் ஐரோப்பிய நாடுகளில் புலமைப் பரிசில்கள் பெற்று அங்கு பெண்ணிலை வாதம் தொடர்பாக அவர்கள் மூலைச் சலவை செய்யப்பட்டு நாடு திரும்பி இஸ்லாமிய சமூகத்தில் ஹிஜாப் மற்றும் பெண்ணுரிமைக் கோஷங்கள் எழுப்பப்படும் வரை முஸ்லிம்கள் பெண் சுதந்திரம் பற்றிப் பேசவில்லை. அந்தத் தேவை அவர்களுக்கு இன்னும் இல்லை எனும் நிலையில் பெண்கள் மிகவும் கண்ணியமாகவே நடத்தப்-படுகின்றனர் என்பதை உணரலாம்.

அரபு நாடுகளில் பெண்ணியம் பேசுவோர் ஐரோப்பிய நாடுகளில் காணப்படுகின்ற "கருப்பை சுதந்திரம்" அதாவது, கண்டவரோடு படுத்துறங்கும் உரிமை, "விபச்சாரம்", "ஆண் - பெண் கலப்பு வாழ்க்கை", "நிர்வாணமாகத் திரிதல்" போன்ற மிருகக் கலாசார முறையைத்தான் அவர்கள் அரபு நாடுகளில் (மறைமுகமாக) எதிர்பார்க்கின்றனர். அதனால்தான் அங்கு பெண்ணுரிமை முடக்கப்பட்டுவிட்டதாகக் கோஷமும் போடுகின்றனர்.



12
மஹ்ரமின்றி தனியாகச் சென்று ஹஜ் செய்வதை அனுமதிப்போரின் வாதம்

"நம்பகமான பெண்கள் பலருடன் சேர்ந்து ஒரு பெண் ஹஜ்ஜை நிறைவேற்றலாம்" என்பது இலங்கை போன்ற நாடுகளில் ஹஜ் முகவர்கள் பல்லாண்டுகளாக முன்வைக்கின்ற வாதமாகும்.

தென்கிழக்காசிய நாடுகளில் ஹஜ் முகவர்கள் பெரும்பாலும் ஷாஃபி மத்ஹபைச் சார்ந்தோராக தம்மை அடையாளப்படுத்திக் கொள்வோராக இருப்பதாலும் தமது குழுவில் ஹாஜி ஒருவரை அதிகரித்துக் கொள்ளும் வாய்ப்பு இருப்பதாலும் தாம் சார்ந்த மத்ஹப் நூலில் எழுதப்பட்டுள்ள இவ்வாறானதொரு கருத்தை அடிப்படையாகக் கொண்டு ஒரு பெண் தனக்கான மஹ்ரம் துணை இன்றி, பல பெண்களோடு ஹஜ் செய்யலாம் என வாதிடுகின்றனர் போலும்!

ஒரு பெண் தனிமையில் ஊரில் உள்ள பள்ளிக்குச் சென்று தொழுகையை நிறைவேற்றுவதில் தாராள அனுமதி இருப்பது போன்று தனித்தவளாக ஹஜ் செய்யச் செல்லலாமா? முடியாதா? என்ற வாதப்பிரதிவாதங்கள் மார்க்க அறிஞர்கள் வட்டத்தில் காணப்படுகின்றன.

"மஹ்ரம்" என்ற ஆண் துணையுடன் ஒரு பெண் ஒரு நாள் பயணம் செய்வது, அல்லது ஹஜ்ஜுக்கான பயணம் செய்வது என்பது நபி (ﷺ) அவர்கள் கட்டாயப்படுத்தியுள்ள கடமைகளில் ஒன்றாகும்.

எனவே, அவள் மஹ்ரம் இன்றி நம்பகமான பல பெண்களோடு இணைந்து ஹஜ்ஜுக்குச் செல்லலாம் என்றால் புனித ஜிஹாதை விட்டு விட்டு நபித்தோழரை தனது மனைவியுடன் ஹஜ்ஜை நிறைவேற்றும்படி நபி (ﷺ) அவர்கள் ஏன் பணித்தார்கள் (?) என நாம் சிந்திக்க வேண்டும்.

நபி (ﷺ) அவர்களின் காலத்தில் வாழ்ந்த ஆண்க–ளையும் பெண்களையும் விடவுமா இந்தக் காலத்து மக்கள் நம்பிக்கையிலும் நாணயத்திலும் உயர்ந்தவர்களாகிப் போனார்கள் (?) என்ற மற்றொரு கேள்வியும் உண்டு.

இரண்டாவது:

ஹஜ் காலங்களில் மஹ்ரம் இன்றி செல்கின்ற பெண் நோய்வாய்ப்பட்டால் சிகிச்சைக்காக வைத்தியசாலைக்கு அவரை அழைத்துச் செல்வது மற்றும் பணிவிடைகள் செய்வது போன்ற இன்னோரன்ன அடிப்படையான தேவைகளுக்கு மஹ்ரமான ஆண் அவருடன் கூடவிருந்து செய்வது போன்று சாத்தியமாகுமா? என்பதை மாத்திரம் சிந்தித்தாலே பெண்கள் மஹ்ரம் இன்றி, தனிமையாகச் செல்வது ஆகுமானதா? என மிக இலகுவாக முடிவு செய்து கொள்ள முடியும்? அதனால் ஒரு பெண் மஹ்ரம் இன்றி ஹஜ் செய்ய முடியாது என்பதையே நாம் சரியான கருத்தாகக் கொள்கின்றோம்.

ஏனெனில், பெண்களின் முழுப் பாதுகாப்பும் ஒழுக்க விழுமியங்களும் மஹ்ரமான ஆணோடு ஹஜ் செய்வதில்தான் உத்தரவாதப்படுத்தப்படும். (அல்லாஹ்வே மிக அறிந்தவன்)



13

அதீ பின் ஹாதிம் (رضي الله عنه) அவர்களின் ஹதீஸை ஆதாரமாகக் காட்டி அனுமதிப்போருக்கான மறுப்பு

குர்ஆன், சுன்னாவை மாத்திரம் பின்பற்றுவோராக தம்மை அடையாளப்படுத்திய சிலரும், ஷேக் யூசுஃப் அல்கர்ளாவி போன்றோரின் கருத்துக்களை முற்போக்கான கருத்துக்களாகச் சரிகாணுவோரும், இதில் ஒருபடி மேலே சென்று ஒரு பெண் தனிமையாகச் சென்று ஹஜ் செய்யலாம் என்பதற்கு அதிய் பின் ஹாதிம் (رضي الله عنه) அவர்களைத் தொடர்பு படுத்தி புகாரியில் இடம் பெறும் பின்வரும் ஹதீஸை ஆதாரமாகக் குறிப்பிடுகின்றனர்.

அந்தச் செய்தியை ஆரம்பம் முதல் இறுதிவரை வாசித்தால் அது இறுதித்தூதர் முஹம்மத் நபி (ﷺ) அவர்கள் அவர்களின் மரணத்தின் பின்னால் நடக்கவிருக்கின்ற ஒரு முன்னறிவிப்பு பற்றி அதிய் பின் ஹாதிம் (رضي الله عنه) அவர்களிடம் பேசிய, அவர்கள் உயிர் வாழும் போது பிற்காலத்தில் அதுவும் அப்படியே நடந்தேறிய ஒரு ஹதீஸாகும் என்பதை முதலில் தெரிந்து கொண்டு அதிய் பின் ஹாதிம் (ﷺ) அறிவிக்கின்ற அந்த ஹதீஸை இப்போது படியுங்கள்.

நபி (ﷺ) அவர்கள் அதிய் (رضي الله عنه) அவர்களிடம் "அதிய்யே நீ அல்ஹீரா என்ற (ஈராக்)கின் ஒரு நகரைப் பார்த்ததுண்டா? எனக் கேட்க, அவர்கள் நான் அதைப்பார்த்தில்லை. அது பற்றி கேள்விப்பட்டுள்ளேன் எனக் கூறினார்கள். அப்போது,

அல்லாஹ்வின் தூதர் அவர்கள், அதியே "நீ நீண்ட காலம் வாழ்ந்தால் தனது ஒட்டகத்தில் பயணம் செய்யும் ஒரு பெண் அந்த அல்ஹீராவில் இருந்து கஃபா வரை (தன்னந்தனியே) வந்து கஃபாவை தவாஃப் செய்வதைக் காண்பாய், அவள் அல்லாஹ்வைத் தவிர வேறு யாரையும் அஞ்சமாட்டாள்" எனக் கூறினார்கள் (புகாரி)

அந்த முன்னறிவிப்பானது தான் உயிர் வாழ்ந்த போதே நடந்தேறியது பற்றி அதிய் (ﷺ) அவர்கள் அறிவிக்கின்ற போது,

قَالَ عَدِيٌّ رَضِيَ اللهُ عَنْهُ فَرَأَيْتُ الظَّعِينَةَ تَرْتَحِلُ مِنَ الْحِيرَةِ حَتَّى تَطُوفَ بِالْكَعْبَةِ لاَ تَخَافُ إِلاَّ اللهَ (أخرجه البخاري : ٣٥٩٥)

"ஒட்டகத்தில் பயணம் செய்யும் ஒரு பெண் அல்லாஹ்வைத் தவிர வேறு ஒருவரையும் பயப்படாமல் "அல்ஹீரா" என்ற அந்த நகரத்தில் இருந்து கஃபாவை நோக்கி ஒட்டகத்தில் தனிமையாக வந்து தவாஃப் செய்வதைக் கண்டேன்" எனக் குறிப்பிடுகின்றார்கள். (புகாரி)

அதிய் பின் ஹாதிம் (ﷺ) அவர்கள் அறிவிக்கும் மேற்படி செய்தியை ஆதாரமாகக் கொண்டே ஒரு பெண் ஹஜ்ஜுக்காக தனிமையில் பயணம் மேற்கொள்வதில் தவறில்லை என்கின்றனர்.

விளக்கம்:

நபி (ﷺ) அவர்கள் காலத்தில் வழிப்பறிக் கொள்ளை பற்றி முறையிட்ட போது, பிற்காலத்தில் அச்சம் இன்றி மக்கள் வாழ்வது, பெண்கள் தனிமையில் பயணம் செய்வது பற்றியே மேற்படி ஹதீஸ் பேசியுள்ளது.

நபி (ﷺ) அவர்களின் காலத்தில் தூரப் பிரதேசங்களில் காணப்பட்ட வழிப்பறிக் கொள்ளை, திருட்டு, கடத்தல் போன்ற

குற்றவியல் சம்பவங்கள் நடைபெறுவதாலும், மக்கள் அச்சமாக வாழ்வது பற்றியும் ஒரு மனிதர் இறைத்தூதர் அவர்களிடம் முறைப்பாடு செய்கின்றார்.

அதற்குப் பதில் கூறும் வகையில் நபி (ﷺ) அவர்கள் அந்த வழிமுறை ஒழிக்கப்பட்டு மக்கள் அச்சமின்றி வாழும் சூழல் உருவாக்கப்படும் என்பது பற்றிக் கூறியுள்ளார்கள் என்பதையே அதி பின் ஹாதிம் (ரழி) அவர்கள் தொடர்பான அந்த ஹதீஸ் குறிப்பிடுகின்றது.

இறுதித் தூதர் முஹம்மத் நபி (ﷺ) அவர்களின் காலத்தில் நடை பெற்ற வழிப்பறிக் கொள்ளை, வறுமை ஆகியவற்றை முறைப்பாடு செய்த போதே இந்த முன்னறி விப்பை அவர்கள் கூறினார்கள்.

அவர்கள் தனது காலத்தைக் கூட அச்சம், பீதி, வறுமை அற்ற காலம் என்று கூடக் கூறவில்லை என்பதோடு, அவர்களின் காலத்தில் பெண்கள் தனித்து பயணங்கள் செய்வதை தடுத்தும் இருந்தார்கள் என்றால் இது எதைச் சுட்டிக்காட்டுகின்றது என்று நாம் சிந்திக்க வேண்டும்.

இந்த நிகழ்வு அதிய் (رضي الله عنه) அவர்களின் வாழ்நாளிலேயே நடந்தேறியது. அதை உண்மைப்படுத்தும் வகையில் அதன் நேரடி அறிவிப்பாளரான அதிய் (رضي الله عنه) அவர்கள் இது பற்றிக் குறிப்பிடுகின்ற போது, “ஒரு பெண் ஒட்டகத்தில் ஏறி அந்த அல்ஹீராவில் இருந்து கஃபா வரைத் (தனிமையாக) வந்து தவாஃப் செய்வதைக் கண்டேன். அல்லாஹ்வைத் தவிர வேறு யாரையும் அவள் அஞ்சமாட்டாள்”, என குறிப்பிடுகின்றார்கள்.
(நூல்: புகாரி)

இது இறைத் தூதரின் காலத்தைக் கூட குறிப்பிட வில்லை. அதனால்தான் போருக்குப் புறப்படத்தயாராக இருந்த தனது தோழர்களில் ஒருவரை நீ உனது மனைவியோடு

சேர்ந்து ஹஜ்ஜுக்குச் செல் எனப் பணித்துள்ளார்கள் என்பது இந்த நிகழ்வோடு தொடர்புபடுத்தி அறிந்து கொள்ள வேண்டிய மற்றொரு அம்சமாகும்.

மேற்படி ஹதீஸை கொலைகளும் கொள்ளைகளும் மலிந்து காணப்படும் இந்தக் காலத்திற்கு ஒப்பிடலாமா? என்றால், அனைவரும் இல்லை! என்றே கூறுவர்.

என்றும்போல் உலகில் அச்சமற்ற நாடுகளில் முதலாவது நாடு என 2020ம் ஆண்டும் போற்றப்படும் சவூதி அரேபியாவில் கூட கணவனுடன் ஹஜ் செய்யச் சென்ற பெண்கள் ஓரிருவர் கடத்திக் கற்பழிக்கப்பட்டு; கொலை செய்யப்பட்டிருக்கின்றனர் என்றால் என்றோ ஒரு நாள் நடந்தேறிய முன்னறிவிப்பைக் கொண்டு பெண்கள் தனிமையில் ஹஜ் செய்யலாம் என முடிவு செய்வது ஹதீஸுக்கு உடன்பாடான விளக்கமாகத் தெரியவில்லை.

ஐயம்:-

அன்னை ஆயிஷா (رضي الله عنها) அவர்கள் ஜமல் போரின் போது ஈராக்கின் கூஃபா நகர் நோக்கி பயணித்துள் ளார்களே! நாம் ஹஜ்ஜுக்காக செல்வதை எவ்வாறு தவறாகக் கொள்ள முடியும்?

தெளிவு:-

இது அவர்களின் தனிப்பட்ட ஒரு முடிவாகும். நபித் தோழர்கள் பலர் இதனை விரும்பவில்லை. அப்படி இருந்தும் இஸ்லாத்தில் சமரசம் செய்துவைத்தல் விரும்பத்தக்க செயல் எனக் காரணம் காட்டியே அவர்கள் அவ்வாறு புறப்பட்டுச் சென்றதாக வரலாறு சொல்கின்றது.

அத்துடன், பிற்காலத்தில் தனது இந்தத் தவறை உணர்ந்த அன்னை ஆயிஷா அவர்கள் தனது முந்தானை நனையும் அளவு அழுது கண்ணீர் வடித்துள்ளார்கள் என

ஆதாரபூர்வமான செய்திகள் குறிப்பிடுவதைக் கவனித்தால் இது போன்ற செய்திகள் ஒரு பெண் தனிமையில் ஹஜ் செய்வதற்கு எந்த வகையிலும் ஆதாரமாகக் கொள்ள முடியாதவை என்பதை அறியலாம்.

நபி (ﷺ) அவர்களின் மேற்படி கட்டளையை மீறி ஸஹாபிப் பெண்கள் யாராவது இவ்வாறு சென்றிருப்பார் களாயின், அவர்கள் என்ன ஆதாரத்தின் அடிப்படையில் சென்றார்கள் என்பதைக் கவனிக்க வேண்டும்.

அதில் தெளிவான ஆதாரங்கள் காணப்படுமானால் அது பற்றி முடிவு செய்யலாம். இல்லாத போது அவர்களின் விருப்பம் மார்க்கத்தின் முடிவாக முடியாது என்பதையும் முடிவு செய்ய வேண்டும்.

தமது மனைவியர் மாற்றானுடன் புன்முறுவல் பூப்பதையே விரும்பாதவர்கள், மாற்றான் மனைவி தனது குழுவில் இணைந்து ஹஜ் செய்வதை அனுமதிக்கின்றார்கள் என்றால் அதில் உலகியல் இலாபமின்றி வேறு என்னதான் இருக்க முடியும்?

ஹஜ்ஜுக்கான காலங்கள்:

ஹஜ்ஜுக்கான காலங்களாக ஷவ்வால், துல்கஃதா, துல் ஹிஜ்ஜா ஆகிய மாதங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

ஒருவர் ஷவ்வால் மாதத்தில் இருந்து துல்ஹஜ் பிறை எட்டு வரை ஹஜ்ஜுக்காக தன்னைத் தயார்படுத்தலாம். அதே வேளை உம்ராவிற்கென கால நிர்ணயம் கிடையாது.

ஹஜ்ஜுடன் இணைந்து செய்யப்படும் உம்ராவாக இருப்பின் அதை மேற்குறிப்பிட்ட மாதங்களிலேயே நிறை-வேற்ற வேண்டும். (இதன் விபரம் ஹஜ்ஜின் வகைகள் எனும் தலைப்பில் பின்னர் தரப்படும்).

ﭐلۡحَجُّ أَشۡهُرٞ مَّعۡلُومَٰتٞۚ فَمَن فَرَضَ فِيهِنَّ ٱلۡحَجَّ فَلَا رَفَثَ وَلَا فُسُوقَ وَلَا جِدَالَ فِي ٱلۡحَجِّۗ ... ﴿١٩٧﴾

(البقرة : ١٩٧)

ஹஜ்(ஜுக்குரிய காலம்) அறியப்பட்ட சில மாதங்களாகும். ஆகவே, அவற்றில் எவர் (தன்மீது) ஹஜ்ஜைக் கடமையாக்கிக் கொண்டாரோ அவர் (ஹஜ் கடமைக்குள் பிரவேசித்த பின்னர்) உடலுறவு கொள்வதோ, தீய செயல்கள் புரிவதோ, வீண் தர்க்கம் செய்வதோ கூடாது. (அல்பகரா: 197)

மேற்படி திருமறை வசனத்தின் அடிப்படையில் பார்த்தால் ஒருவர் மேற்கூறப்பட்ட மாதங்களில் தலைப்பிறை தென்பட்டது முதல் துல் ஹஜ் எட்டு வரையிலும் உள்ள காலப் பகுதியில் ஹஜ் செய்வதற்காக தன்னைத் தயார் படுத்திக் கொண்டு மக்கா செல்ல முடியும் என்பதை விளங்கலாம்.

உலக முஸ்லிம்கள் தம்மை ஹஜ்ஜுக்காகத் தயார் படுத்திக் கொண்டு ஒட்டகம், பாய்க்கப்பல் மற்றும் நடையாக என பலவிதமான வழிகளில் புனித கஃபாவை நோக்கி வந்து சேர்வதற்கு அல்லாஹ் இலகுவாக்கிக் கொடுத்த ஒரு வழியாகவும் ஹஜ்ஜுக்கான மாதங்களைக் கொள்ள முடியும். பொதுவாக இஸ்லாமிய வணக்க வழிபாடுகள் அவற்றை நடைமுறைப்படுத்துவோரின் வசதியைக் கொண்டு கட்டமைக்கப்பட்டவை என்பதை ஹஜ் வணக்கங்களிலும் பரவலாக நோக்க முடியும். (அல்லாஹ்வே மிகவும் அறிந்தவன்!)



14 இஹ்ராமில் நுழைவதற்கான (மீகாத்) எல்லைகள்

மேற் கூறப்பட்ட கடமையினை நாம் நிறைவு செய்வதற்காக அல்லாஹ்வின் தூதரால் நமக்கு எல்லைகள் வரையறுக்-கப்பட்டிருக்கின்றன. ஹஜ் அல்லது உம்ராவிற்காக அந்த எல்லைகளைக் கடந்து செல்வோர் இஹ்ராம் அணியாது அந்த எல்லைகளைக் கடந்து செல்லக் கூடாது என்ற கண்டிப்பான உத்தரவு அவர்களால் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றது.

அதையும் மீறி ஒருவர் செல்வாராயின் இஹ்ராம் அணிந்து செல்லாத குற்றத்திற்காக அவர் ஃபித்யா– எனப்படும் குற்றப்பரிகாரம்– நிறைவேற்றுவது அவசியமாகும். அவற்றைப் பற்றி பின்னர் கவனிப்போம்.

மதீனா வழியாகச் செல்வோர் “துல்ஹுலைஃபா” விலிருந்தும், எகிப்து, ஜோர்தான் போன்ற நாடுகளில் இருந்து பணயமாகி “ஜித்தா” வழியாகச் செல்வோர் “ஜுஹ்ஃபா” (தற்போதய ராபிஹ்) எல்லையில் இருந்தும், எமன், மற்றும் அதன் வழியாக வருவோர், “எலம்லம்” (தற்போதைய (ஸஃதிய்யா) எல்லையில் இருந்தும் “தாயிஃப்” வழியாக வருவோர் தாயிபிலுள்ள “அஸ்ஸைலுல் க(B)பீர்” என்றழைக்கப்படும் “கர்னுல் மனாஸில்” எல்லையில் இருந்தும் ஈராக்கிலிருந்து வருவோர் “தாது இர்க்” (தற்போதய லரீ (B)பா) எனும் எல்லையில் இருந்தும், “ஹஜ்” அல்லது “உம்ரா”

விற்கான நிய்யத் செய்து “இஹ்ராம்” ஆடை அணிந்து செல்ல வேண்டும். இவை நபிகள் நாயகம் (ﷺ) அவர்களால் நிர்ணயிக்கப்பட்ட எல்லை(மீகாத்)களாகும்.

هُنَّ لَهُنَّ، ولِمَن أَتَى عَلَيْهِنَّ مِن غَيْرِهِنَّ مِمَّنْ أرادَ الحَجَّ والعُمْرَةَ، ومَنْ كانَ دُونَ ذَلِكَ ، فَمِن حَيْثُ أَنْشَأ حَتّى أَهْلُ مَكَّةَ مِن مَكَّةَ .

(أخرجه مسلم في الحج باب مواقيت الحج والعمرة)

ஹஜ் அல்லது உம்ராச் செய்ய நாடி அவைகளைக் கடந்தால் அவை அவர்களுக்கான எல்லையாகும். (ஒருவர் இஹ்ராம் அணியாது இவைகளைக் கடக்கக் கூடாது.) எல்லைகளுக்கு உட்பட்டோர் அவர்கள் தாம் இருக்கும் இடத்தில் இருந்தும், மக்காவாசிகள் மக்காவில் இருந்தும் இஹ்ராம் அணிவர் என நபிகள் நாயகம் (ﷺ) அவர்கள் கூறியுள்ளார்கள்.
(நூல்: புகாரி, முஸ்லிம்)

இரு வகையாக நோக்கப்படும் மீகாத் (எல்லைகள்):

ஹஜ் அல்லது உம்றாக் கடமையினை மேற்கொள்ள இரு வகையான மீகாத்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

1) மீகாத் ஸமானி (காலம் தொடர்பான மீகாத்கள்):

குறிப்பாக இது ஹஜ் வணக்கம் தொடர்பாக வந்துள்ள மாதங்களைக் குறிக்கும்.

2) மீகாத் மகானி (இடம் சார்ந்த எல்லைகள்):

இது ஹஜ், உம்ரா ஆகிய இரண்டிற்கும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள மக்கா ஹரம்ஷரீபையும் அதைத் தொடர்ந்த குறிப்பிட்ட சில இடங்களையும் எல்லைகளாகக் குறிக்கும்.



15
எல்லைகளுக்கு உட்பட்டோர் மற்றும் மக்காவாசிகளின் எல்லை

உலக முஸ்லிம்களின் எல்லையை நிர்ணயம் செய்த பின் அதற்குள் வசிக்கின்ற மக்களின் எல்லை விபரம் பற்றிக் கூறும் போது,

وَمَنْ كَانَ دُوْنَ ذٰلِكَ فَمِنْ حَيْثُ أَنْشَأَ حَتّٰى أَهْلُ مَكَّةَ مِنْ مَكَّةَ (متفق عليه)

"எல்லைகளுக்கு உட்பட்டோர் தாம் இருக்கும் இடத்தில் இருந்தும், மக்காவாசிகள் மக்காவில் இருந்தும் இஹ்ராம் அணிவர் என நபி (ﷺ) அவர்கள் கூறியுள்ளார்கள்.

(நூல்: புகாரி, முஸ்லிம்)

மேற் கூறப்பட்ட எல்லைகளுக்குள் வசிப்போர் தமது வதிவிடங்களை எல்லையாக எடுத்துக் கொள்ள வேண்டும். வேறு எல்லைகளுக்குச் சென்று அங்கிருந்து இஹ்ராம் அணிந்து வர வேண்டிய அவசியம் இல்லை என்பதை புகாரி, முஸ்லிம் போன்ற கிரந்தங்களில் இடம் பெறும் மேற்படி நபிமொழிகளில் இருந்து அறிந்து கொள்ளலாம்.

குறிப்பு :-

"தன்யீம்" எனப்படும் இடம் ஹரம் எல்லைக்கு வெளியில் இருக்கின்றது. அது மக்காவாசிகளின் உம்ரா விற்கான எல்லை என அறிஞர்கள் குறிப்பிடுவதற்கு அமைவாக மக்கா வாசிகளாக இருப்போர் அதனை தமது

உம்றாவிற்கான எல்லை யாகவும் கொள்ளலாம். ஆனால் அவசியம் கிடையாது. ஏனெனில், அவர் மக்காவில் வசிக்கின்ற இடமே அவருக்குரிய எல்லையாகும் என்பதே மிகச் சரியான கருத்தாகும்.

அதே நேரம் இஹ்றாமுடைய நிலையில் மாதவிடாய் ஏற்பட்டு "தவா.ஃப்" மற்றும் "ஸ.ஃய்" செய்ய மார்க்கத்தில் தடை செய்யப்பட்டிருந்த பெண்கள் குளித்து, தூய்மையாகிய பின்பு தன்யீமில் இப்போதுள்ள "மஸ்ஜித் ஆயிஷா" பள்ளியில் இருந்து தமது விடுபட்ட உம்ராவிற்கான கடமையை முழுமைப் படுத்த இஹ்ராம் அணிவதற்கான கட்டாய எல்லையாகக் கொள்ள வேண்டும்.



அன்னை ஆயிஷா (﵂) அவர்கள் நபி (ﷺ) அவர்களுடன் ஹஜ் செய்வதற்காக வந்த போது அவர்களுக்கு மாதவிடாய் ஏற்பட்டது. அதற்காக தவா.ஃப் செய்ய முடியாமல் ஹஜ் முடிந்து இந்த இடத்தில் இருந்து விடுபட்ட தவா.ஃபையும், ச.ஃயையும் செய்தார்கள். அதற்காக அந்த இடம் பிற்காலத்தில் 'மஸ்ஜித் ஆயிஷா' என்ற பெயரில் அழைக்கப்பட்டது. அதுவே அன்னை ஆயிஷா(﵂) பெயரில் அமைக்கப்பட்ட ஆயிஷா மஸ்ஜித் அகும்.



16

ஹஜ் மாதங்களில் உம்ரா செய்யலாம்

ஜாஹிலிய்யாக் காலத்தில் பெண் குழந்தைகளை உயிருடன் புதைப்பது, சகுனம் பார்ப்பது, குறி சொல்வது, மாதத் தீட்டு ஏற்பட்ட பெண்களை சமூகத்தை விட்டும் ஒதுக்கி வைப்பது எனப் பல விதமான மூட நம்பிக்கைகள் இருந்து வந்ததைப் போல் ஹஜ் மாதங்களில் உம்ராச் செய்வதை ஜாஹிலிய்யா (அறியாமை)க் கால மக்கள் பூமியில் நிகழும் பெரும் பாவங்களில் ஒன்றாகக்கருதினர். அந்த மூட நம்பிக்கையை இஸ்லாம் தகர்த்தெறிந்து ஹஜ் மாதங்களில் உம்ராச் செய்வதை அனுமதித்தது.

முஹம்மத் நபி (ﷺ) அவர்கள் தனது வாழ்வில் செய்த உம்ராக்களில் நான்கையும் ஹஜ் மாதங்களில் ஒன்றான துல்–கஃதாவில் செய்தததும் இந்த மூடநம்பிக்கையைத் தகர்த் தெறிவதற்காகத்தான் என அறிஞர்கள் சுட்டிக் காட்டி இருக்கின்றனர்.

நபித்தோழர்கள் ஹஜ்ஜுக்கான தமது உம்ராவை துல் ஹஜ்ஜில் முடித்ததும் அவர்களிடம் வழமையான சாதாரண நிலைக்கு வாருங்கள், ஆடைகளை மாற்றுங்கள், மனைவிய ரோடு உடலுறவில் ஈடுபட அனுமதி உண்டு என்றெல்லாம் நபி (ﷺ) அவர்கள் பொதுவாக அனுமதித்தார்கள்.

فَتَعَاظَمَ ذٰلِكَ عِنْدَهُمْ فَقَالُوا يَا رَسُولَ اللهِ أَيُّ الْحِلِّ ؟ قَالَ حِلٌّ كُلُّهُ.

(أخرجه البخاري)

ஜாஹிலிய்யாவின் தாக்கத்தில் வளர்ந்த, "நபித்தோழர் களிடம் அது பாரியதொரு பாவமாகத் தென்பட்டது. அதனால் தான் அவர்கள் எந்த அனுமதி? எவ்வாறான அனுமதி? என ஆச்சரியமாகக் கேட்டனர். அதற்கு இறைத்தூதர் அவர்கள் உடலுறவு முதல் அனைத்தும் ஹலால்" என பதில் கூறினார்கள். (நூல்: புகாரி)

ஜாஹிலிய்யா '(அறியாமை)க் கால நம்பிக்கையின் பிரதிபலனாகவே அவர்களிடம் இவ்வாறான ஆச்சரியமான கேள்வி எழுந்திருப்பதையும் அந்த நம்பிக்கையை முறியடிக்கவே இறைத்தூதர் அவர்கள் இவ்வாறு பதில் அளித்தார்கள் என்பதையும் இதன் மூலம் அறிந்து கொள்ள முடியும்.

இந்த வழிமுறை ஹாஜிகள் 'தமத்துஃ' முறையில் ஹஜ் செய்வதைச் சிறந்ததாகக் காண்பதற்கான அடிப்படைக் காரணங்களில் ஒன்றாகவும் ஹஜ் மாதங்களில் உம்ராச் செய்யலாம் என்ற அனுமதியாகவும் பார்க்கப்படுகின்றது என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

மட்டுமின்றி, போர் செய்வதற்கு தடை செய்யப்பட்ட புனித முஹர்ரம் மாதத்தின் காலத்தினை அவர்கள் "ஸஃபர்" மாதமாக மாற்றியமைத்து அவர்கள் மாற்றிய அந்த ஸஃபரில் அதாவது உண்மையான முஹர்ரத்தின் புனிதத்தைக் கெடுத்து தாம் விரும்பியதைச் செய்தும் வந்தார்கள். இதுவும் அல்லாஹ் மக்கா காஃபிர்களைக் கண்டித்த அம்சங்களில் ஒன்றாகும். அவர்கள் தமது நம்பிக்கையை வெளிப்படுத்தும் விதமாக,

إِذَا بَرَا الدَّبَرُ وَعَفَا الْأَثَرُ وَانْسَلَخَ صَفَرُ حَلَّتِ الْعُمْرَةُ لِمَنِ اعْتَمَرَ (متفق عليه)

"(ஒட்டகத்தின்) நோய் நீங்கி, (அதன் மீதுள்ள பயணத்) தடயங்களும் அழிந்து (முஹர்ரம் என்ற) ஸஃபர் மாதமும் கழிந்தால் "உம்ரா" செய்பவரின் உம்ரா செல்லுபடியாகும்" எனக் கூறுவர். (நூல்: முஸ்லிம்).

முஹர்ரம் என்ற ஸஃபர் மாதமாக மாற்றப்பட்ட மாதமும் கழிந்த பின்னால் உம்ராச் செய்பவரின் உம்ராவே செல்லுபடியாகும் என்பதே இதன் பொருளாகும்.

ஹஜ் மாதங்களில் உம்ரா செய்வது பாவம் என்ற கோட்பாடு ஜாஹிலிய்யா (அறியாமை)க்கால மக்களின் நம்பிக்கையே தவிர இஸ்லாமிய மக்களின் நம்பிக்கை அல்ல என்பதை மேற்படி நபிமொழியில் இருந்து விளங்கலாம்.

இந்த நம்பிக்கையைத் தகர்த்தெறிவதற்காகவே நபி (ﷺ) அவர்கள் துல்ஹஜ்ஜில் உம்ராச் செய்தார்கள் என்று நாம் முன்னர் சுட்டிக் காட்டி உள்ளோம். புகாரி, முஸ்லிமில் இடம் பெறும் பின்வரும் அறிவிப்பில்,

قَدِمَ النَّبِيُّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ وَأَصْحَابُهُ صَبِيحَةَ رَابِعَةٍ مُهِلِّينَ بِالْحَجِّ فَأَمَرَهُمْ أَنْ يَجْعَلُوهَا عُمْرَةً (متفق عليه)

"நபிகள் (ﷺ) அவர்களும், அவர்களின் தோழர்களும் ஹஜ்ஜுக்காக துல்ஹஜ் பிறை நான்காவது தினத்தில் (மக்கா) வந்திருந்த போது நபித்தோர்களின் ஹஜ்ஜை தமத்துஃ ஹஜ்ஜுக்கான (உம்ராவாக) மாற்றும்படி நபி (ﷺ) அவர்கள் பணித்தார்கள்." (பார்க்க: புகாரி, முஸ்லிம்)

அத்துடன், ஹஜ்ஜுக்காக இஹ்ராம் அணிந்த நிலையில் இருந்த நபித்தோழர்களை உம்ராவை நிறைவு செய்துவிட்டு தமது இஹ்ராத்தைக் களையும்படியும் பணித்தார்கள். அப்போது,

فَقَامَ سُرَاقَةُ بْنُ مَالِكِ بْنِ جُعْشُمٍ رَضِيَ اللهُ عَنْهُ فَقَالَ يَا رَسُولَ اللهِ أَلِعَامِنَا هٰذَا أَمْ لأَبَدٍ؟ فَشَبَّكَ رَسُولُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ أَصَابِعَهُ وَاحِدَةً فِي الأُخْرَى وَقَالَ «دَخَلَتِ الْعُمْرَةُ فِي الْحَجِّ - مَرَّتَيْنِ - لاَ بَلْ لأَبَدٍ أَبَدٍ »

(أخرجه مسلم)

சுராகா பின் மாலிக் பின் ஜுஃஷும் (رضي الله عنه) அவர்கள் எழுந்து அல்லாஹ்வின் தூதரே! இது நமது இவ்வருடத்திற்கு மாத்திரமா? அல்லது எல்லாக் காலத்திற்கும் உரியதா? என வினவிய போது இல்லை இல்லை எல்லாக் காலத்திற்கும் தான் என நபி (ﷺ) அவர்கள் விளக்கி தமது விரல்களை மற்ற விரல்களோடும் இணைத்தவர்களாக,

فقال : دَخَلَتِ الْعُمْرَةُ فِي الْحَجِّ مَرَّتَيْنِ (أخرجه مسلم)

"ஹஜ்ஜுடன் உம்ராவும் சேர்ந்து விட்டது" என (இரு தடவைகள்) கூறினார்கள். (நூல்: முஸ்லிம்)


அதாவது ஹஜ் மாதத்தில் உம்ரா செய்யப்பட்டு, அதன் பின் ஹஜ் நிறைவேற்றப்படல் வேண்டும் எனப் பணித்த இந்த கட்டளையினைக் கருத்தில் கொள்ளும் அல்பானி போன்ற அறிஞர்கள் தமத்துஃ முறையில் ஹஜ் கடமை நிறைவு செய்வது கடமை என வாதிடுவதை இங்கு நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

ஆகவே, ஹஜ் செய்வோர் முதலாவதாக உம்ரா செய்து விட்டு, அதன் பின்னர் துல் ஹஜ் எட்டாம் நாள் காலை ஹஜ்ஜுக்கான நிய்யத்துடன் இஹ்ராம் அணிந்து செல்லும் இந்த நடைமுறைதான் இஃப்ராத், மற்றும் கிரான் என்ற அனுமதிக்கப்பட்ட ஹஜ்ஜின் மற்றைய இரு முறைகளை விடவும் மிகவும் ஏற்றமான, சிறந்த நடை முறை என்பதை நபி (ﷺ) அவர்கள் சிறப்பாக்கியுள்ளார்கள் என்பதையும் மேலே உள்ள ஹதீஸ்கள் மூலம் நாம் அறிந்து கொள்ளலாம். தூரப் பிரதேசங்களிலிருந்து ஹஜ்ஜுக்காகச் செல்வோர் இந்த முறையைத் தேர்வு செய்வதே மிகவும் ஏற்றமானதாகும்.



17 ஹஜ்ஜின் வகைகள்

இஸ்லாமிய சட்டங்கள் எளிமையானவை. அனைவராலும் பின்பற்ற சாத்தியமானவை என்பதை இஸ்லாத்தின் சட்டம் தொடர்பான வாசிப்புக்கள் மூலம் உணர முடிகின்றது. அந்த அடிப்படையில் ‘ஹஜ்’ கடமையும் பல எளிய சட்ட அமைப்புக்களைக் கொண்டது என்பதை ஹஜ்ஜின் வகைகள் உணர்த்துகின்றன.



தமத்து.ஃ :

ஹஜ்ஜுடைய மாதம் ஒன்றில் எல்லையில் இஹ்ராம் அணியும் ஒருவர் **‘அல்லாஹும்ம லெப்பைக்க உம்றதன்’** اَللّٰهُمَّ لَبَّيْكَ عُمْرَةً என்ற தல்பியாவுடன் உம்ராவிற்காக மாத்திரம் மனதால் நிய்யத் செய்து, தவாஃபை முடித்து, பின் “ஸஃய்” (தொங்கோட்டம் ஓடுதல்) ஆகிய கடமைகளை முடித்து தலை

முடியையும் குறைத்து அல்லது முழுமையாக மழித்த பின் இஹ்ராத்தையும் களைந்து, சாதாரண நிலைக்கு வருவதாகும்.

பின்னர் துல்ஹஜ் பிறை எட்டில் ஹஜ்ஜுக்காக மீண்டும் நிய்யத் செய்து, தனது ஹஜ் கடமையை தொடர்ந்து மேற்கொள்ளும் இந்த வழிமுறைக்கு ‘ஹஜ் தமத்துஃ’ எனக் கூறப்படும்.

ஒருவர் இஹ்ராத்தை களைந்த பின் சுதந்திரமாக தனது இயல்பான நிலையில் செயல்படுவதையும் குடும்ப உறவில் ஈடுபடுவதையும் அனுமதிப்பதைக் குறிக்கப் பயன்படுத்தப்படும் “தமத்துஃ” மகிழ்ச்சியாக இருத்தல், இன்பம் அனுபவித்தல் என்ற பொருளில் இச்சொல் இங்கு பிரயோகிக்கப்பட்டுள்ளது.

சுருக்கமாகக் கூறினால் ‘தமத்துஃ’ என்பது ‘ஹஜ்’ மாதத்தில் ஒருவர் உம்ராவைத் தனித்துச் செய்து, சாதாரண நிலைக்கு வந்து பின், துல்ஹஜ் மாதம் எட்டாம் நாள் காலை மீண்டும் ஹஜ்ஜிற்காக நிய்யத் செய்து ஹஜ் கிரியைகளைத் தொடர்தல் எனக் குறிப்பிட முடியும்.

கிரான்:

எல்லையில் இஹ்ராம் அணியும் ஒருவர் ஹஜ், உம்ரா இரண்டையும் சேர்த்து செய்வதாக நிய்யத் செய்து,

اَللّٰهُمَّ لَبَّيْكَ حَجًّا وَ عُمْرَةً

‘அல்லாஹும்ம லெப்பைக்க ஹஜ்ஜன் வ உம்றதன்’

“யா அல்லாஹ்! ஹஜ் மற்றும் உம்ராவை சேர்த்து செய்யப் புறப்படுகின்றேன்” என்ற தல்பியாவைக் கூறி நிய்யத் வைத்து தவாஃபுல் குதூம் செய்வதோடு ஸஃய் (தொங்கோட்டம் ஓடுதல்) ஆகிய இரு வழிமுறைகளையும் முடித்த பின், தலையையும் மழிக்காது, இஹ்ராத்தையும் களையாது தனது

ஹஜ் கடமையைத் தொடர்வதுடன், தொடர்ந்தும் துல்ஹஜ் பிறை பத்திலுள்ள கடமைகளை முடித்த பின்னர் தனது இயல்பான நிலைக்கு வருவதாகும்.

இதில் ஹஜ்ஜும், உம்ராவும் இணைத்துச் செய்யப் படுவதால் இது **"கிரான்"** என அழைக்கப்படுகின்றது.

இ.ஃ.ப்ராத் :

ஒருவர் ஹஜ்ஜுக்காக மாத்திரம் நிய்யத் செய்து,

اَللّٰهُمَّ لَبَّيْكَ حَجًّا

'அல்லாஹும்ம லெப்பைக்க ஹஜ்ஜன்'

(யா அல்லாஹ்! ஹஜ்ஜை நிறைவேற்றச் செய்கின்றேன்.)

என தல்பியாக் கூறி மனதால் நிய்யத் செய்து தனது கடமையை ஆரம்பிப்பதாகும்.

தவாஃபுல் குதூம் என்ற ஆரம்ப தவாஃப் மற்றும் ஸஃய் (தொங்கோட்டம் ஓடுதல்) ஆகிய இரு வழிமுறைகளையும் முடித்து, தலையையும் மழிக்காது, இஹ்ராத்தையும் களையாது ஹஜ்ஜுடன் தொடர்பான ஏனைய கடமைகளை மாத்திரம் தனித்துச் செய்வதால் இது **"இஃப்ராத்"** எனக் கூறப்படுகின்றது.

குறிப்புக்கள்:

(1) இந்த இரு முறைகளிலும் செய்யப்படுகின்ற முதலாவது 'தவாஃப்' 'தவாஃபுல் குதூம்' சுன்னத்தான தவாஃபே தவிர கட்டாயக் கடமையான தவாஃப் அல்ல. எனவே, அது விடுபடுவது அவர்கள் மீது குற்றம் இல்லை. அதேவேளை,

والقارن كالمتمتع - الشرح الممتع على زاد المستقنع (٤ : ٣٠٣)

(2) ஹஜ்ஜையும் உம்ராவையும் சேர்த்து செய்பவர் தமத்துஃ முறையில் ஹஜ் செய்பவர் போன்றவரே” என்ற பொது விதியின் அடிப்படையில் கிரான் முறையில் ஹஜ் செய்தவர் உம்ராவும் செய்வதால் அவர் பலிப்பிராணி கொடுப்பது கடமையாகும். (ஷேக் இப்னு உஸைமீன் (ரஹ்) ஷரஹுல் மும்திஃ)

நபி(ﷺ) அவர்களின் காலத்தில் பலிப் பிராணியைத் தம்முடன் கூடவே எடுத்து வந்தவர்கள் இந்த முறையைப் பேணி இருந்தனர் என்பதை ஹதீஸ்களில் இருந்து விளங்க முடிகின்றது.

(3) ஆனால், ‘இஃப்ராத்’ முறையில் ஹஜ் செய்பவர் உம்ராச் செய்யாத காரணத்தால் அவர் பலிப்பிராணி கொடுப்பது கடமையில்லை.

பின்வரும் நபி மொழி இவ்வகைகள் பற்றி உறுதி செய்கின்றது.

عَنْ عَائِشَةَ رَضِيَ اللهُ عَنْهَا قَالَتْ خَرَجْنَا مَعَ رَسُولِ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ فَقَالَ : "مَنْ أَرَادَ مِنْكُمْ أَنْ يُهِلَّ بِحَجٍّ وَعُمْرَةٍ فَلْيَفْعَلْ ، وَمَنْ أَرَادَ أَنْ يُهِلَّ بِحَجٍّ فَلْيُهِلَّ ، وَمَنْ أَرَادَ أَنْ يُهِلَّ بِعُمْرَةٍ فَلْيُهِلَّ". (متفق عليه)

நபி (ﷺ) அவர்களுடன் ஹஜ்ஜுக்காக நாம் புறப்பட்டுச் சென்றோம். உங்களில் யார் ஹஜ்ஜுக்காகவும் உம்ராவிற் காகவும் (இஹ்ராம் அணிந்து) தல்பியா கூற விரும்புகிறாரோ அவர் அவ்வாறு செய்து கொள்ளட்டும். அதே நேரம் யார் ஹஜ்ஜுக்காக மாத்திரம் (இஹ்ராம் அணிந்து) தல்பியா கூற விரும்புகின்றாரோ அவரும் அவ்வாறு செய்து கொள்ளவும். உம்ராவிற்காக மாத்திரம் யார் (இஹ்ராம் அணிந்து) தல்பியாக் கூற விரும்புகிறாரோ அவரும் அவ்வாறு செய்து கொள்ளட்டும், என நபி (ﷺ) அவர்கள் கூறியதாக அன்னை ஆயிஷா (رضي الله عنها) அவர்கள் அறிவிக்கிறார்கள். (நூல்: புகாரி, முஸ்லிம்)

மூன்று முறைகளுக்கும் இடையில் காணப்படும் பிரதான வேறுபாடுகள்:

“கிரான்” முறைப்படி ஹஜ் செய்பவர் ஹஜ்ஜுக்காகவும் உம்ராவிற்காகவும் சேர்த்து நிய்யத் செய்த காரணத்தால் அவர் மக்கா வந்தடைந்ததும் (தவாஃபுல் குதூம்) எனப்படும் சுன்னத்தான முதல் தவாஃப் உடன் செய்த ஸஃய் ஹஜ்ஜுக்கான ஸஃயாகக் கொள்ளப் போதுமானதாகும். இதே வழிமுறையை இஃப்ராத் முறைப்படி ஹஜ் செய்பவரும் கடைப்பிடிப்பார்.

இவ்விருவரும் பிறை பத்தில் ஹஜ்ஜின் பிரதான பர்ளாகக் கணிக்கப்படுகின்ற “தவாஃபுல் இஃபாழா” செய்ய வேண்டும். இந்த நேரத்தில் அவர்கள் ஏற்கனவே ஸஃய் செய்துள்ளதால் தமத்துஃ செய்தவர் ஸஃய் செய்வது போன்று இவர்கள் மீண்டும் ஸஃய் செய்ய வேண்டிய கடமை இல்லை. பிறை பத்தில் செய்யப்படும் இந்தத் தவாஃப் “தவாஃபுல் இஃபாழா” எனப்படும்.

அவர்கள் துல் ஹஜ் பிறை எட்டில் நேரடியாக மினாவிற்கோ அல்லது பிறை ஒன்பதில் அரஃபாவிற்கோ செல்வதனால் தவாஃபுல் குதூம் என்ற சுன்னத்தான ஆரம்ப தவாஃப் இவர்களுக்கு தவறிவிடுமானால் அதில் தவறில்லை.

இதற்கு உர்வா பின் முளர்ரிஸ் (رضي الله عنه) அவர்களின் செய்தியை ஆதாரமாகக் கொள்ளலாம். (பார்க்க: ஷரஹுல் மும்திஃ– ஆசிரியர்: இப்னு உஸைமீன் (ரஹ்) அவர்கள்).

அதே நேரம், “தமத்துஃ” முறையில் “ஹஜ்” செய்தவர் ஆரம்ப தவாஃபும் “ஸஃய்”யும் அவரது உம்ராவிற்கான கடமையான தவாஃபாகவும் ஸஃயாகவும் கொள்ளப்படும். அதனால் அவர் பிறை பத்தில் தவாஃபுல் இஃபாழாவுடன்

மீண்டும் 'ஹஜ்' கடமைக்கான மற்றொரு ஸஃயும் செய்வது பர்ளாகும்.

ஏனெனில், தமத்துஃ முறையில் ஹஜ் செய்கின்ற இவரது உம்ரா மற்றும் ஹஜ் இரு வணக்கங்களும் தனித்தனியே நிறைவேற்றப்படுவது அவசியமானதாகும். அதனால் அதன் கடமைகளும் தனிப்பட்டே நிறைவேற்றப்படல் வேண்டும். மேலும், 'தமத்துஃ' முறையில் ஹஜ் செய்பவர் பலிப்பிராணி கொடுப்பதும் கடமையாகும். அது "ஹத்யு தமத்துஃ" எனக் கூறப்படும்.

அதே போன்று, கிரான் அடிப்படையில் ஹஜ்ஜும் உம்றாவும் செய்தவரும் "ஹத்ய்" என்ற பலிப்பிராணி கொடுப்பதும் கடமையாகும் என்று கிரான் பற்றிய பகுதியில் நாம் முன்னால் சுட்டிக்காட்டியதை நீங்கள் படித்திருப்பீர்கள்.

குறிப்பு:

உலக நாடுகளில் இருந்து ஹஜ்ஜுக்காக வருவோர் 'தமத்துஃ' முறையை அதிகம் பேணுவர். அதுவே அவர்களுக்கு எளிய மற்றும் சிறந்த முறையுமாகும். அதனால் அது பற்றி பின்னால் விரிவாக தரப்படுகின்றது.



18 இஹ்ராம் அணிவதற்கு முன் செய்ய வேண்டிய காரியங்கள்

குளிப்பு:

மாதத்தீட்டு, பிரசவத் தீட்டு போன்ற உபாதைகளால் குளிப்பு கடமையான பெண்கள் தமது உபாதைகள் முடிந்து குளிப்பது போன்று உடலுறவு, உறக்கம் போன்றவற்றால் குளிப்புக் கடமையான ஆண், பெண் அனைவரும் குளிப்பது கடமையாகும். ஆனால், குளிப்புக் கடமையில்லாத மற்றவர்கள் விரும்பினால் குளிக்கலாம். விரும்பாவிட்டால் குளிக்காது விட்டும் விடலாம்.

மாதத்தீட்டு, பிரசவத் தீட்டு ஏற்பட்ட இரு பெண்களும் 'மீகாத்' எல்லையை வந்தடைந்தால் அவ்விருவரும் குளித்து இஹ்ராம் அணிந்து ஹஜ், உம்றாவின் அனைத்துக் கடமைகளையும் நிறைவேற்றலாம். தவாப் செய்வது கூடாது.

மாதத்தீட்டுடன் இருக்கும் பெண்கள் இஹ்ராம் அணிந்து மக்கா செல்வது மார்க்கத்தில் தடையில்லை. ஆனால், அவர்கள் தவாஃப் செய்வது தடை செய்யப்பட்டுள்ளது. இந்த உபாதைகளின் போது தடுக்கப்பட்டவைகள் போக ஹஜ், உம்றா தொடர்பான ஏனைய கிரியைகளை மற்றவர்கள் போன்று செய்து கொள்ளலாம். இது பெண்கள் தீண்டத் தகாதவர்கள் என்பதைத் தகர்க்கும் மிகப்பெரும் வழிகாட்டலாகும்.



19 மனதால் நிய்யத் செய்து தல்பியாவுடன் இஹ்ராத்தில் நுழைதல்

இஸ்லாத்தின் சகல அமல்களுக்கும் உள்ளத்துடன் தொடர்பு இருப்பது போன்று ஹஜ், உம்ராவிற்கும் தொடர்பு இருக்கிறது.

அந்த அடிப்படையில் ஹாஜி ஒருவர் தனது எல்லையை அடைந்ததும் உம்ராவிற்கான எண்ணத்தை மனதில் இருத்தி,

اَللّٰهُمَّ لَبَّيْكَ عُمْرَةً

“அல்லாஹும்ம லெப்பை(க்)க உம்ரதன்”

“அல்லாஹ்வே! உனக்காக உம்ராவை நிறைவேற்ற தயாராகின்றேன்” என்ற வார்த்தையை நாவால் வெளிப்படை யாகக் கூறிக் கொள்ளல்.

இது தல்பியாவைக் கொண்டு ஆரம்பித்தலே தவிர சப்தமிட்டு நிய்யத் சொல்வது கிடையாது என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

நிய்யத் என்பது வாயால் மொழிவதல்ல. மாற்றமாக, மனதால் நினைப்பதாகும்.



20

பயணம் தடைப்படுவதை அஞ்சினால்

உம்ராப் பயணம் செல்லும் போது சில தடங்கல்கள் ஏற்பட்டு, அதனால் ஹஜ், உம்ராவை நிறைவு செய்ய முடியாது போகும் என்ற அச்ச நிலை ஏற்படுவதை ஒருவர் அஞ்சினால் அவர் உம்ராவிற்கான நிய்யத் செய்யும் போது

اَللّٰهُمَّ إِنْ حَـبَسَـنِـيْ حَابِسٌ فَمَحِلِّي حَيْثُ حَبَسْتَنِي (أخرجه البخاري ومسلم)

“அல்லாஹும்ம இன்ஹ(B)பஸனீ ஹா(B)பிஸுன் (F)ஃப மஹில்லீ ஹைஸு ஹ (B)பஸ்தனீ

பொருள்:

“அல்லாஹ்வே! தடங்கள் ஏற்படுத்தக் கூடியது ஏதாவது என்னைத் தடுத்துவிட்டால் நீ என்னைத் தடுத்த அந்த இடமே எனது (இஹ்ராத்தைக் களையும்) இடமாகும். (புகாரி, முஸ்லிம்) என மனதால் நினைத்துக் கொள்ளுதல்.

இவ்வாறு செய்வதால் ஏற்படும் சாதக பாதகம் என்ன?:

இவ்வாறு நிய்யத் செய்து போகும் ஒருவருக்கு ஹஜ் மற்றும் உம்ராவை நிறைவு செய்ய முடியாதவாறு வழியில் நோய், பாதைப் பிரச்சினை, பயங்கரவாதப் பிரச்சினைகள் போன்ற ஏதாவது தடங்கல்கள் ஏற்படுகின்ற போது அவர் குறித்த ஸ்தலத்திலேயே முடியை மழித்து அல்லது குறைத்துக் கொண்டு இஹ்ராத்தில் இருந்து விடுதலையாகலாம்.

இந்நிலையில் அவர் இஹ்ராத்தை இடை நடுவில் களைந்த குற்றப் பரிகாரமாக கொடுக்கப்படும் “ஹத்ய்” எனப்படும் பலிப் பிராணியைக் கொடுக்க வேண்டிய கடமையில்லை.

அவ்வாறு கூறாத ஒருவருக்கு தடங்கல் ஏற்பட்டு, இஹ்ராத்தை களைய வேண்டிய நிர்ப்பந்த நிலையும் ஏற்பட்டால் அவர் நபி (ﷺ) அவர்களும் நபித்தோழர்களும் “ஹுதைபியா” உடன்படிக்கை ஆண்டில் பலிப்பிராணியை கொடுத்து, தமது தலை முடிகளை மழித்து, பின் இஹ்ராத்தை களைந்தது போன்று செய்ய வேண்டும்.

மார்க்க விவகாரத்தில் அல்லாஹ் கற்றுக் கொடுத்த-தைத் தவிர மற்றவை பற்றி அறியாதவராக வாழ்ந்த இறைத்தூதர் அவர்களுக்கு இந்த விடயத்தில் மறைவான அறிவில்லாத காரணத்தினால் இவ்வாறு நிய்யத் செய்யாமல் தனது தோழர்களோடு உம்ராவுக்குச் சென்ற போது மக்கா காஃபிர்களால் ஹுதைபியாவில் இடை மறிக்கப்பட்டார்கள். இறுதியில் தனது தோழர்களிடம்

قُومُوا فَانْحَرُوا ثُمَّ احْلِقُوا (أخرجه البخاري ٢٥٢٩)

“எழுந்து, உங்கள் பலிப்பிராணிகளை அறுங்கள், பின்னர் உங்கள் (தலை) முடிகளை மழித்துக் கொள்ளுங்கள் எனக் கட்டளையிட்டார்கள். பின்னர் வந்த அடுத்த ஆண்டு விடுபட்ட தமது உம்ராவைக் கழாச் செய்தார்கள்.” (நூல்: புகாரி)

எனவே, நாமும் இவ்வாறு விடுபடும் உம்றாக்களை அவ்வாறே நாம் கழா செய்யவும் வேண்டும். இருந்தும் நோய், பொருளாதார நெருக்கடி காரணமாக குறித்த உம்றாக் கடமையை நிறைவு செய்ய முடியாது போனால் அவர் மீது குற்றமில்லை.



21 மாதவிடாய், பிரசவம் ஏற்பட்ட பெண்களின் இஹ்ராம் செல்லுபடியானதாகும்

மகப்பேறு அல்லது பிரசவத்திற்குப் பிறகு பெண்கள் இஹ்ராம் அணிந்து தல்பியாக் கூறுவதோ அல்லது மாதவிடாயோடு இருக்கும் நிலையில் இஹ்ராம் அணிந்து தல்பியாக் கூறுவதோ மார்க்கம் அனுமதித்த காரியமாகும்.

عَنْ عَائِشَةَ رَضِيَ اللهُ عَنْهَا قَالَتْ نُفِسَتْ أَسْمَاءُ بِنْتُ عُمَيْسٍ بِمُحَمَّدِ بْنِ أَبِي بَكْرٍ بِالشَّجَرَةِ فَأَمَرَ رَسُولُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ أَبَا بَكْرٍ يَأْمُرُهَا أَنْ تَغْتَسِلَ وَتُهِلّ (أخرجه مسلم)

அபூபக்கர் (ﷺ) அவர்களின் மனைவி அஸ்மா பின்த் உமைஸ் (ﷺ) அவர்கள் (துல்குலைஃபா) மரத்தடியில் முஹம்மத் பின் அபூபக்ரைப் பிரசவித்த போது அது பற்றிய மார்க்க சட்டம் பற்றி இறைத்தூதரிடம் வினவியதும் அவரைக் குளித்து, பின்பு தல்பியாக் கூறிக் கொள்ளும்படி நபி (ﷺ) அவர்கள் அபூபக்கர் (ﷺ) அவர்களிடம் கட்டளையிட்டிருந்தார்கள். (நூல்: முஸ்லிம்) இது கியாஸின் அடிப்படையில் மாதவிடாய் ஏற்பட்ட பெண்ணுக்கும் பொருந்தும் சட்டமாகும்.

இது பற்றி விளக்குகின்ற இமாம் நவவி (ரஹ்) அவர்கள் :

وَفِيهِ : صِحَّة إِحْرَام النُّفَسَاء وَالْحَائِض ، وَاسْتِحْبَاب اِغْتِسَالهمَا لِلْإِحْرَامِ ، وَهُوَ مُجْمَع عَلَى الْأَمْر بِهِ (شرح النووي على مسلم)

“பிரசவத் தீட்டு ஏற்பட்ட பெண்கள், மாதவிடாய்ப் பெண்கள் ஆகியோரின் இஹ்ராம் செல்லுபடியானதாகும் என்பதும், அவ்விருவரும் இஹ்ராத்திற்காக குளித்துக் கொள்வது சுன்னத் என்பதும் இந்த ஹதீஸில் உள்ளடங்கி இருக்கின்றது. இதில் அறிஞர்கள் ஒருமித்த கருத்தில் உள்ளனர் என்றும் சுட்டிக் காட்டுவதை இங்கு கவனத்தில் கொள்ள வேண்டும்.

இமாம் முஸ்லிமின் ஹதீஸ் கிரந்த விரிவுரையில், ‘மாதத் தீட்டு ஏற்பட்ட பெண்கள், பிரசவத் தீட்டு ஏற்பட்ட பெண்கள் ஆகியோர் எவ்வாறு இஹ்ராத்தில் நுழைய வேண்டும்’ என்ற அவர்களின் பாடத்தலைப்பினூடாகவும் இதன் விபரம் பற்றித் தெளிவாக அறிந்து கொள்ளலாம்.

மாதவிடாய் ஏற்பட்ட பெண்கள் இஹ்ராம் அணிந்து ஹஜ், உம்ராவிற்காகச் செல்ல முடியும் என்பதை புகாரியில் இடம் பெறும் பின்வரும் மற்றொரு நிகழ்வினூடாக உறுதி கொள்ள முடிகின்றது.

عَنْ عَائِشَةَ رَضِيَ اللهُ عَنْهَا أَنَّ النَّبِيَّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ دَخَلَ عَلَيْهَا وَحَاضَتْ بِسَرِفَ قَبْلَ أَنْ تَدْخُلَ مَكَّةَ وَهِيَ تَبْكِي ، فَقَالَ مَا لَكِ أَنَفِسْتِ؟ قَالَتْ نَعَمْ ، قَالَ : "إِنَّ هَذَا أَمْرٌ كَتَبَهُ اللهُ عَلَى بَنَاتِ آدَمَ فَاقْضِي مَا يَقْضِي الْحَاجُّ غَيْرَ أَنْ لَا تَطُوفِي بِالْبَيْتِ (أخرجه البخاري)

ஸரிஃப் என்ற இடத்தை (தற்போதைய மக்காவின் நவாரிய்யாவை) அடைந்த போது மக்காவிற்குள் நுழையும் முன்னதாக அன்னை ஆயிஷா (﵅) அவர்களுக்கு மாதவிடாய் ஏற்பட்டது. அழுதவர்களாக நபி (ﷺ) அவர்களிடம் வந்தார்கள். உனக்கு என்ன நேர்ந்தது? உனக்கு மாதவிடாய் ஏற்பட்டுவிட்டதா? எனக் கேட்டார்கள். அவர்கள் ஆம் என்றதும்,

இது அல்லாஹ் ஆதம் நபியின் பெண் பிள்ளைகள் மீது விதித்ததாச்சே! எனக் கூறிவிட்டு ஹாஜிகள் செய்கின்ற அனைத்தையும் நீ செய்து கொள். ஆனால் காஃபாவை தவாஃப் செய்யாதே எனக் கூறினார்கள் (புகாரி, முஸ்லிம்) புகாரியின் மற்றொரு அறிவிப்பில்: நீ பரிசுத்தமாகின்ற வரை என இடம் பெற்றுள்ளது. இதன் மூலம் குளிப்புக் கடமையான நிலையில் ஒருவர் இஹ்ராம் அணிந்து செல்வது ஆகுமானது என்பதைக் காட்டுகின்றது.

இருப்பினும் மாதவிடாய் மற்றும் பிரசவத்தீட்டு போன்ற உபாதைகளுக்குள்ளான பெண்கள் சுத்தம் இல்லாத காரணத்தால் கஃபாவை தவாஃப் செய்யலாகாது. ஸஃய் செய்யலாம். இருப்பினும் அந்த ஸஃயை விடுபட்ட தவாஃபுடன் செய்து கொள்வது ஏற்றமானதாகும்.

அவ்வாறுதான் இஹ்ராம் அணிந்த நிலையில் ஒருவருக்கு ஸ்கலிதமாகி குளிப்புக் கடமையானாலும் அவர் குளித்து சுத்தமாக வேண்டும். தண்ணீர் இல்லாத போது தயம்மும் செய்து கொள்ள வேண்டும். நோன்பு வைத்த நிலையில் குளிப்புக் கடமையானால் எவ்வாறு குளித்து சுத்தமாகி நோன்பைத் தொடர்வோமோ அதே போன்று இஹ்ராத்தைத் தொடர வேண்டும்.

இஹ்ராத்திற்கென விஷேடமான சுன்னத் தொழுகை இல்லை:

இஹ்ராத்திற்கென ஒரு தொழுகையை நபி (ﷺ) அவர்கள் அறிமுகம் செய்யவில்லை என்பதாலும், ஒரு வணக்கத்தை நாமாக கண்டு பிடிக்க முடியாது என்பதாலும் இஹ்ராத்திற்கென விஷேட தொழுகை ஏதும் இல்லை என்பதாலும் இஹ்ராத்திற்கென ஒரு தொழுகையைத் தொழக் கூடாது என்ற கருத்தில் நாம் உறுதியாக இருக்கின்றோம்.



22

மதீனாவின் எல்லை வழியாகச் செல்வோர் கவனிக்க வேண்டியது

மதீனாவின் மீகாத் எல்லையான “துல்ஹுலைஃபா” பள்ளிவாசல் “வாதில் அகீக்” எனும் புனித பள்ளத்தாக்கில் அமைந்துள்ளது.

ஹஜ் அல்லது உம்ராவிற்காக அந்த எல்லையைக் கடந்து செல்வோர் அதில் இரண்டு ரகஅத்துக்கள் தொழுவது கடமையான ஒரு அமல் என்பது தனியான பிரத்தியேக வழிகாட்டலாக இருக்கின்றது. அது பின்வரும் ஹதீஸ் மூலம் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

عَنِ ابْنِ عَبَّاسٍ عَنْ عُمَرَ ، رَضِيَ اللهُ عَنْهُمْ ، عَنِ النَّبِيِّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ : اللَّيْلَةَ أَتَانِي آتٍ مِنْ رَبِّي وَهْوَ بِالْعَقِيقِ أَنْ صَلِّ فِي هٰذَا الْوَادِي الْمُبَارَكِ وَقُلْ عُمْرَةٌ فِي حَجَّةٍ. (أخرجه البخاري)

“இன்றிரவு கனவில் எனது இரட்சகனிடம் இருந்து வரக்கூடியவர் (ஜிப்ரீல் (عليه السلام) அவர்கள் என்னிடம் தோன்றி “இந்தப் புனித பள்ளத்தாக்கில் தொழுவீராக” மேலும், ஹஜ்ஜுடன் உம்ரா செய்ய நாடுகின்றேன் என்றும் கூறுவீராக! எனக் கூறினார்” என்பதாக நபி (ﷺ) அவர்கள் நபித்தோழர்களிடம் கூறினார்கள். (நூல்: புகாரி)

மேற்படி ஹதீஸை அடிப்படையாகக் கொண்டு மதீனாவின் எல்லையில் இருந்து “இஹ்ராம்” அணியும் ஒருவர் “துல்ஹுலைஃபா” பள்ளியில் இரண்டு ரக்அத்துக்கள் தொழுவது கடமையானது என்றும் வேறு எல்லைகளில் இருந்து செல்வோர் அந்த இரு ரகஅத்துக்களையும் தொழ வேண்டிய அவசியமில்லை என்றும் அறிஞர்கள் விளக்கம் தருகின்றனர்.

இது இபாதா (வணக்கம்) சார்ந்த ஒரு அமலாக இருப்பதனால் மதீனாவின் எல்லைக்கென குறித்த சிறப்புடன் வந்துள்ள மேற்படி ஹதீஸின் சட்டத்தை அனைத்து எல்லைக்கும் பொதுவான ஹதீஸாக கியாஸ் என்ற அனுமான விளக்கத்தின் மூலம் ஆதாரமாகக் கொள்ள முடியாது என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.



மகத்துவம் நிறைந்த அல் அகீக் பள்ளத்தாக்குடன் இணைந்த துல் ஹுலை∴பா பள்ளிவாசல்



23

மார்க்கத்தில் நல்லதுதானே என்ற வாதம் பிழையானதே!

முஹம்மது நபி (ﷺ) அவர்கள் காட்டித் தராத பல்வேறு வழிமுறைகள் நன்மை என்ற பெயரில் அரங்கேற்றப் படுகின்றன. அந்த அடிப்படையில் சிலர் ஹஜ்ஜுக்கு வழி அனுப்புவோரை பாங்கு கூறி வழி அனுப்புகின்றனர். இதுவும் மார்க்கத்தில் இல்லாத புதிய வழிமுறையாகும். தொழுவதால், பாங்கு சொல்வதால் என்ன பிரச்சினை நன்மைதானே என நாமாக முடிவு செய்யும் அதிகாரம் நமக்கில்லை.

حَدَّثَنَا قَبِيصَةُ أَخْبَرَنَا سُفْيَانُ عَنْ أَبِى رَبَاحٍ – شَيْخٌ مِنْ آلِ عُمَرَ – قَالَ : رَأَى سَعِيدُ بْنُ الْمُسَيَّبِ رَجُلاً يُصَلِّى بَعْدَ الْعَصْرِ الرَّكْعَتَيْنِ يُكْثِرُ فَقَالَ لَهُ. فَقَالَ : يَا أَبَا مُحَمَّدٍ أَيُعَذِّبُنِى اللَّهُ عَلَى الصَّلاَةِ؟ قَالَ : لاَ وَلَكِنْ يُعَذِّبُكَ اللَّهُ بِخِلاَفِ السُّنَّةِ. (أخرجه الدارمي في سننه)

ஸயீத் பின் முஸய்யப் (ரஹ்) என்ற சிறந்த தாபியீ அவர்கள், 'அஸருக்குப் பின்னால் இரண்டு ரகாஅத்துக் களுக்கும் அதிகமாக தொழுதுவரும் மனிதர் ஒருவரைக் அவதானித்தார்கள். அவரிடம் (கூற வேண்டியதைக்) கூறினார்கள். அதற்கவர், அபூ முஹம்மத் அவர்களே! தொழுதமைக்காக அல்லாஹ் என்னை தண்டிப்பானா? எனக் கேட்டார். அதற்கு அவர்கள், இல்லை. எனினும் நீ சுன்னா (நபிவழிக்கு) முரணாக செய்வதற்காக அல்லாஹ் உன்னைத் தண்டிப்பான்' எனக் கூறினார்கள். (நூல்: சுனன் தாரமி)

மற்றொரு வரலாற்றைக் கவனியுங்கள்.

عَنْ طَارِقِ بْنِ عَبْدِ الرَّحْمَنِ قَالَ : انْطَلَقْتُ حَاجًّا فَمَرَرْتُ بِقَوْمٍ يُصَلُّونَ ، قُلْتُ مَا هَذَا الْمَسْجِدُ؟ قَالُوا : هَذِهِ الشَّجَرَةُ حَيْثُ بَايَعَ رَسُولُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ بَيْعَةَ الرِّضْوَانِ ، فَأَتَيْتُ سَعِيدَ بْنَ الْمُسَيَّبِ فَأَخْبَرْتُهُ ، فَقَالَ سَعِيدٌ حَدَّثَنِي أَبِي أَنَّهُ كَانَ فِيمَنْ بَايَعَ رَسُولَ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ تَحْتَ الشَّجَرَةِ، قَالَ : فَلَمَّا خَرَجْنَا مِنْ الْعَامِ الْمُقْبِلِ نَسِينَاهَا فَلَمْ نَقْدِرْ عَلَيْهَا ، فَقَالَ سَعِيدٌ إِنَّ أَصْحَابَ مُحَمَّدٍ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ لَمْ يَعْلَمُوهَا ، وَعَلِمْتُمُوهَا أَنْتُمْ ، فَأَنْتُمْ أَعْلَمُ ؟ (أخرجه البخاري : ٣٨٤٥)

தாரிக் பின் அப்துர் ரஹ்மான் என்பவர் குறிப்பிடு-கின்றார்: நான் ஹஜ்ஜுக்காச் சென்றிருந்தேன். அப்போது ஒரு இடத்தைப் பள்ளியாக்கி தொழுகின்ற ஒரு கூட்டத்தினர் அருகாமையாகச் சென்ற நான் இது என்ன பள்ளிவாசல் எனக் கேட்டேன். அவர்கள் இது இறைத்தூதர் அவர்கள் தனது தோழர்களோடு பைஅத்துர் ரிழ்வான் உடன்படிக்கை செய்த ஹுதைபிய்யா மரத்தடி என்றதும், ஸயீத் பின் முஸய்யிப் (ரஹ்) அவர்களிடம் வந்து விஷயத்தைக் கூறினேன். அப்போது அவர்கள் தனது தந்தை அவ்வாறு பைஅத் செய்தவர்களில் ஒருவர் என்று அவருக்குச் சொன்னதாகக் கூறினார்கள். அடுத்த வருடம் நாம் அந்த இடத்தால் சென்றோம். நாம் அதைப் பற்றி மறந்து விட்டோம். அதன் காரணமாக அங்கு செல்ல கிடைக்கவில்லை. அது பற்றிக் கூறிய போது "நிச்சயமாக முஹம்மது நபி (ﷺ) அவர்களின் தோழர்கள் அதனைச் செய்யவில்லை. நீங்கள்தான் செய்துள்ளீர்கள். நீங்கள் தான் அவர்களை விடவும் அறிந்தவர்களோ என ஸயீத் (ரஹ்) அவர்கள் கண்டிக்கும் வண்ணமாகக் கூறினார்கள்.

(நூல்: புகாரி)

வணக்க வழிபாடுகளை நாமாகக் கண்டுபிடிக்க முடியாது என்பதை இந்த அறிஞரின் விளக்கத்தில் இருந்து நாம் அறிந்து கொள்ள முடியும்.

அவ்வாறு செய்யப்படும் வணக்கத்தை அல்லாஹ் ரத்து செய்வான் என இறைத்தூதர் அவர்களின் பல கூற்றுக்கள் நமக்கு அறிவுரையாகவும் அமைய வேண்டும்.

قَالَ رجل لمَالِك يا أبا عبد الله ! من أَيْن أحرم؟ قَالَ مِنْ حَيْثُ أَحْرَمَ رَسُولُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ ، فَأَعَادَ عَلَيْهِ مِرَارًا ، قَالَ : فَإِنْ زِدْتُ عَلَى ذَلِكَ ؟ قَالَ فَلَا تَفْعَلْ فَإِنِّي أَخَافُ عَلَيْكَ الْفِتْنَةَ، قَالَ : وَمَا فِي هَذَا مِنَ الْفِتْنَةِ؟ إِنَّمَا هِيَ أَمْيَالٌ أَزِيدُهَا ؟ قَالَ : إِنَّ اللهَ يَقُولُ {فَلْيَحْذَرِ الَّذين يخالفون} الْآيَة ، قَالَ : وَأَيُّ فِتْنَةٍ فِي هَذَا ؟ قَالَ : وَأَيُّ فِتْنَةٍ أَعْظَمُ مِنْ أَنْ تَرَى أَنَّكَ أَصَبْتَ فَضْلًا قَصَّرَ عَنْهُ رَسُولُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ؟ أَوْ تَرَى أَنَّ اخْتِيَارَكَ لِنَفْسِكَ خَيْرٌ مِنِ اخْتِيَارِ اللهِ واخْتِيَارِ رَسُولِ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ؟ (ذم الكلام وأهله للهروي (٣: ١١٥) أبو شامة في كتاب: الباعث على إنكار البدع والحوادث نقلا عن أبي بكر الخلال ص ١٤.- كتاب التوحيد للفوزان - ١ : ١٥١)

மதீனாவின் பிரசித்தி பெற்ற அறிஞரான இமாம் மாலிக் (ரஹ்) அவர்களிடம் ஒரு மனிதர் வந்து, 'அபூ அப்தில்லாஹ் (இமாம்) அவர்களே! நான் எங்கிருந்து இஹ்ராம் அணிய வேண்டும்? எனக் கேட்டார். அதற்கு அவர்கள், இறைத்தூதர் முஹம்மத் நபி (ﷺ) அவர்கள் எங்கிருந்து இஹ்ராம் அணிந்தார்களோ அங்கிருந்துதான் எனப் பதில் கூறினார்கள். அவர் பல தடவைகள் மீண்டும் மீண்டும் கேட்டு விட்டு அதை விட சற்று அதிக தூரத்திலிருந்து இஹ்ராம் அணியப் போகின்றேன் என்று கூறிவிட்டு, நான் இறைத்தூதரின் இந்தப் பள்ளி யிலிருந்து இஹ்ராம் அணியப் போகின்றேன் என்றார்.

இமாம் அவர்கள் அவ்வாறு செய்யாதே! அதனால் உன்மீது மார்க்கத்தில் குழப்பத்தை நான் அஞ்சுகின்றேன் என்றார்கள். இதில் என்ன அப்படிப் பெரிய குழப்பம் உள்ளது எனக் கேட்டார். அதற்கவர்கள், இறைத்தூதர் அவர்களுடன் சுருங்கிக் கொண்டதாக எண்ணி சரியான ஒரு சிறப்பைப் போலாக்கி நீ முந்திக் கொள்ளும் ஒரு குழப்பத்தை விட வேறு பெரிய குழப்பம் இருக்க முடியுமா? எனக் கூறிவிட்டு,

"அவரின் (தூதரின்) கட்டளைக்கு மாறு செய்வோர் தமக்கு ஒரு துன்பம் நேருவதையோ அல்லது தமக்கு நோவினை தரும் வேதனை ஏற்படுவதையோ அஞ்சிக் கொள்ளட்டும்." (அந்நூர்: 63)

எனும் வசனத்தை ஓதிக் காட்டினார்கள்.

(நூல்: தம்முல் கலாமி வ அஹ்லிஹி)

நபித்தோழர்களிடமும் தாபியீன்களிடமும் பாடம் படித்த அதி சிரேஷ்ட மாணவர்களிடம் காணப்பட்ட இந்தக் கட்டுப் பாடுகள் மூதாதையர் வழி, முன்னோர் வழி, போன்ற ஆதாரமற்ற காரணங்களால் சுக்கு நூறாக்கப்பட்டதன் விளைவாகவே மார்க்கம் அதன் தூய வடிவில் தொடரக் காரணமானது. இருந்தாலும், பிற்காலத்தில் வந்த சமூகத்தில் மேற்படி வசனம் புறக்கனிக்கப்பட்டதால் நவீன அநாச்சாரங்கள் புகக் காரணமாக அமைந்தன.

ஹஜ், உம்றா ஏனைய வணக்கங்கள் செய்யும் ஒரு முஸ்லிம் அவற்றை சரியாக நிறைவேற்ற வேண்டுமானால் அந்த வணக்கம் யாரால், எப்படிக் கடமையாக்கப்பட்டது? நிறைவேற்றப்பட்டது என்பது பற்றி சிந்திக்க வேண்டுமே தவிர தனது பரம்பரையான வழக்காறுகளின் அடிப்படைகளை முன்நிறுத்தி சிந்திக்கக் கூடாது.



24 தல்பியாக் கூறுதல்

ஹஜ், உம்ராவில் சப்தமாகக் கூறப்படும் அமல்களில் "தல்பியா" முன்னணி வகிக்கின்றது என்றால் மிகை இல்லை. அது ஹாஜிகளின் நாவுகளால் ஒலிக்கப்படும் போது அதன் அழகுக்கு நிகரில்லை. இருந்தும் அதன் பொருள் வேண்டி நிற்கும் தூய ஓரிறைக் கோட்பாட்டை ஹாஜிகள் பலர் தமது அறியாமையால் சிதைத்துக் கொள்கின்றனர் என்பதை மறுக்கவும் முடியாது.

நபிகள் நாயகம் (ﷺ) அவர்கள் "ஹஜ்" உம்ராவிற்காக இஹ்ராம் அணிந்து நிய்யத் வைத்து ஒட்டகத்தில் அமர்ந்த பின்னர் பின்வருமாறு தல்பியாக் கூறுவார்கள்.

இதை தனித்தனியே சப்தத்தை உயர்த்தி கூற வேண்டும். இது ஹரம் செல்லும் வரை தொடர வேண்டும் என்பது நபி (ﷺ) அவர்களும் அவர்களின் தோழர்களும் கடைப்பிடித்த ஒழுங்கு முறையாகும்.

தல்பியா அரபியில் :

لَبَّيْكَ اَللّٰهُمَّ لَبَّيْكَ ، لَبَّيْكَ لَا شَرِيكَ لَكَ لَبَّيْكَ ، إِنَّ الْحَمْدَ وَالنِّعْمَةَ لَكَ وَالْمُلْكَ، لَا شَرِيكَ لَكَ .

உச்சரிப்பு:- "லெப்(B)பைக், அல்லாஹும்ம லெப்(B)பைக், லெப்(B)பைக் லாஷரீக்க லக, லெப்பைக், இன்னல் ஹம்(D)த, வன்னிஃமத லக, வல்முல்க். லாஷரீகலக்." (நூல்: புகாரி, முஸ்லிம்)

பொருள்: அல்லாஹ்வே! உனது அழைப்புக்கு விடை கொடுத்து, உன்னை மென்மேலும் வழிப்பட்டுவிட்டேன். அல்லாஹ்வே! உனது அழைப்புக்கு விடை கொடுத்து, உன்னை முழுமையாக வழிப்பட்டுவிட்டேன். உனக்கு எந்த இணையாளரும் கிடையாது. புகழும், அருளும், ஆட்சியும் உனக்கே உரியன. உனக்கு எந்த இணையாளரும் கிடையாது.

தல்பியாக் கூறுவதன் அவசியம்:

உம்ராவுக்காகச் சென்ற நபி (ﷺ) அவர்கள் மக்கா ஹரம் எல்லையை வந்தடையும் வரை தல்பியாக் கூறுபவர்களாகவும் ஹஜ் காலத்தில் துல்ஹஜ் மாதம் பத்தாம் நாள் காலை ஜம்ரத்துல் அகபா (முதலாவது ஜம்ரா)விற்கு கல்லெறியும் வரை தல்பியாக் கூறிக் கொண்டே இருப்பார்கள் என்றும் நபித்தோழர் கள் பலர் அறிவிக்கின்ற ஹதீஸ் அறிவிப்புக்களைப் பார்க்கின்றோம். அதில் பின்வரும் ஹதீஸ் தல்பியாவின் முக்கியத்துவத்தைக் கூறுகின்றது.

عنْ خَلَّادِ بْنِ السَّائِبِ الأنصاري عَنْ أَبِيهِ عَنْ رَسُولِ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ : "جَاءَنِي جِبْرِيلُ ، فَقَالَ لِي يَا مُحَمَّدُ مُرْ أَصْحَابَكَ أَنْ يَرْفَعُوا أَصْوَاتَهُمْ بِالتَّلْبِيَةِ ". (أخرجه أبو داود والنسائي في سننهما)

ஜிப்ரீல் (عليه السلام) அவர்கள் என்னிடம் வந்து முஹம்மதே! தல்பியாவால் சப்தத்தை உயர்த்தும்படி உமது தோழர்களுக்கு பணிப்பீராக! எனக் கூறினார்கள் என நபி (ﷺ) அவர்கள் கூறியதை கல்லாத் பின் ஸாயிப் அல்அன்ஸாரி (رضي الله عنه) அவர்கள் தனது தந்தை ஸாயிப் (رضي الله عنه) அவர்கள் வழியாக அறிவிக்–கின்றார்கள். (நூல்: அபூதாவூத், நஸயீ)

மேற் கூறப்பட்ட ஹதீஸிலும் வேறு நபிமொழிகளிலும் கூறப்பட்டிருப்பது போன்று தல்பியாவின் அவசியத்தை உணர்ந்து, நாமும் அதனை தனித்தனியே உரத்த குரலில் கூற வேண்டும்.

தல்பியாவின் சிறப்பு:

عَنْ سَهْلِ بْنِ سَعْدٍ رَضِيَ اللهُ عَنْهُ قَالَ رَسُولُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ مَا مِنْ مُسْلِمٍ يُلَبِّي إِلَّا لَبَّى مَنْ عَنْ يَمِينِهِ أَوْ عَنْ شِمَالِهِ مِنْ حَجَرٍ أَوْ شَجَرٍ أَوْ مَدَرٍ حَتَّى تَنْقَطِعَ الْأَرْضُ مِنْ هَاهُنَا وَهَاهُنَا (أخرجه الترمذي و ابن ماجه)

"தல்பிய்யாக் கூறும் முஸ்லிமின் (தல்பியாவோடு அவரது) வலது மற்றும் இடது புறங்களில் காணப்படும் கற்கள், மரங்கள், மண் இங்கும் அங்குமாக பூமி முடிவடையும் வரை உள்ள படைப்புக்கள் யாவும் தல்பியாக் கூறுகின்றன" என நபி (ﷺ) அவர்கள் கூறினார்கள். (நூல்: திர்மிதி, இப்னுமாஜா)

ஒரு முஸ்லிம் இறை அடிபணிதலை மனதால் அங்கீகரிப்பதை நாவினால் மொழிய அல்லாஹ்வின் அனைத்துப் படைப்புக்களும் அதனை அங்கீகரிக்கும் முகமாக 'தல்பிய்யாக்' கூறுகின்றன என்றால் உலகில் இறை நிராகரிப்பு மற்றும் இணை வைத்தலின் கொடிய எதிர்வினை பற்றி விவாதிக்க வேண்டியதில்லை.



25 இஹ்ராம் அணிந்த நிலையில் தடுக்கப்பட்டவை (ஹஜ் மற்றும் உம்ராவுக்கு பொதுவானதாகும்)

1) தலைமுடியை மழித்தல் அல்லது குறைத்தல். (நகமும் இத்தோடு இணைக்கப்படுகின்றது.)

2) ஆண்கள் தலையை மூடுதல்.

3) ஆண்கள் சேட், ட்ரவ்ஸர், உள்ளாடை, பெனியன் போன்ற தைக்கப்பட்ட ஆடைகளை அணிதல்.

4) இஹ்ராமுடைய நிலையில் ஆடையில் அல்லது உடலில் மணம் பூசுதல்.

குறிப்பு: இஹ்ராம் அணிய முன்னர் உடம்பில் பூசப்பட்ட வாசனையின் வாடை உடம்பில் காணப்படுவது குற்றமல்ல. ஆனால் அது இஹ்ராம் ஆடையில் காணப்படுவது தடுக்கப்பட்டுள்ளது.

5) தரைவாழ் மிருகங்களைக் கொல்லுதல் அல்லது வேட்டையாடுதல்.

6) திருமண ஒப்பந்தம் செய்தல்.

7) பெண்கள் முகத்தை மறைத்தல் அல்லது இரு மணிக் கட்டுகளுக்கும் கையுறை அணிதல்.

8) ஆண்கள் காலுறைகள் அணிதல்.

9) இஹ்ராமுடன் இருக்கும் நிலையில் ஹஜ், உம்ராக் கடமைகள் முடிவதற்கு முன் இல்லற உறவில் ஈடுபடுதல். இது ஹஜ், உம்ராக் கடமைகளைப் பாழாக்கும்.

10) இஹ்ராத்தின் போது மனைவியைக் கட்டியணைப்பதால் விந்து வெளியேறுதல்.

குறிப்புக்கள்:

1) கைக்கடிகாரம் (வொச்), இடுப்பு வார், (பெல்ட்) போன்ற வற்றில் தையல் இருந்தாலும் அவற்றை அணிந்து கொள்ளலாம். ஏனெனில், அவை ஆடையாகப் பார்க்கப் படுவதில்லை.

2) பாதணிகள் இல்லாதவர்கள் “காலுறை” (மேஸ்) அணிய முடியும்.

3) இஹ்ராத்துடன் இருக்கும் ஒரு பெண் அவளது முகத்தை மூடுவதையும் இரு மணிக்கட்டுகளையும் கையுறை களால் மறைப்பதையும் தவிர்க்க வேண்டும்.

4) இஹ்ராத்தின் போது மார்க்கம் பிரத்தியேகமாக அவளுக்கென விதித்த சட்டங்களை ஆண்களைப் போன்று பெண்களும் பேண வேண்டும்.

5) இஹ்ராத்துக்கு அப்பால் வற்புறுத்தியுள்ள கடமைகளை இஹ்ராத்தின் போது செய்வது தடையாக இல்லை எனில் அவற்றையும் பேணி நடக்கலாம்.

6) ஒரு பெண் இஹ்ராம் அணிந்த பின்னால் “மாதவிடாய்” ஏற்பட்டால் தவாஃப் மற்றும் ஸஃய் செய்வது கூடாது. ஹாஜிகள் செய்கின்ற ஏனைய எல்லாக் கடமைகளையும் செய்யலாம்.

7) ஆணோ, பெண்ணோ இஹ்ராம் அணிந்து பயணிக்கின்ற போது உறக்கம் உஷ்ணம் போன்ற காரணிகளால் குளிப்பு கடமையானவர்களாகிவிட்டால் குளித்த பின்பே அவர்கள் தவாஃப் செய்ய வேண்டும்.

8) மக்களுக்கு தீங்கிளைக்கும் தேள், பாம்பு, எலி, காகம், விசர் நாய், பருந்து போன்ற விலங்குகளையும் கொல்வதற்கு அனுமதிக்கப்பட்ட பறவைகளையும் இஹ்ராம் அணிந்தவாறு கொல்லலாம்.

9) இஹ்ராத்தின் போது பெண்களுக்கென ஆண்களைப் போன்று தனியான ஆடை அமைப்புக் கிடையாது. அவர்களின் இஸ்லாமிய ஆடையே இஹ்ராத்திலும் ஆடையாகும்.

10) இஹ்ராத்தின் போது தடுக்கப்பட்டவைகளைச் செய்வதற் குரிய -ஃபித்யா- குற்றப் பரிகாரம் அனைத்துக்கும் சமமானவை அல்ல. மாற்றமாக, அது ஒன்றுக்கொன்று வேறுபட்டதாகும்.

11) ஹஜ்ஜில் ஒருவர் அறியாத நிலையில் அல்லது மறதியாகச் செய்கின்ற காரியங்கள் குற்றப்பரிகாரம் என்ற சட்டத்தின் கீழ் உள்ளடக்கப்படமாட்டாது. மாறாக மறதி, தவறு, அறியாமை போன்ற காரணங்களின் அடிப்படையில் மன்னிப்பின் கீழ் உள்ளடக்கப்படுவதே அறிஞர்களின் பார்வையாகும். அதற்காக கடமைகளை மறந்து விட்டு சட்டத் தீர்ப்பு தேடக் கூடாது.

12) ஒருவர் கஃபாவை முதலாவதாகக் காணுகின்ற போது கேட்கும் பிரார்த்தனை ஏற்றுக் கொள்ளப்படும் என்ற செய்தியும் கஃபாவைக் கண்டதும் ஓதும் பிராரத்தனையும் ஆதாரத்திற்கு கொள்ள முடியாத செய்திகளாகும்.

ஆதாரமற்ற செய்திகளை வணக்கமாக்கி வழிபடுவதை ஒரு முஃமின் முழுமையாகத் தவிர்க்க வேண்டும்.



26 கஃபாவில் பிரவேசிப்பது பற்றி

வரலாற்றில் பாபு பனீ அப்தி மானாஃப் அல்லது பாபு பனீ ஷைபா என்றும் (தற்போது பாபுஸ் ஸலாம்) என்றும் அறியப்படும் வாயில் வழியாக நபி (ﷺ) அவர்கள் வசதிக்காக நுழைந்துள்ளார்களே அன்றி மார்க்கமாக நுழையவில்லை என்பதைக் கவனத்தில் கொள்ளவும். பாபுஸ்ஸலாம் வழியாக நுழைவது சுன்னத் என்பது குறித்த ஒரு மத்ஹபின் கருத்தே அன்றி அது முழு அறிஞர்களின் முடிவும் அல்ல.

மக்காவிற்குள் நுழைவதில் சிறப்பான முறை:

நபி (ﷺ) அவர்கள் ஹஜ் அல்லது உம்ராவிற்காக மக்காவிற்குள் பிரவேசித்ததும் குறிப்பாக இரவில் வந்தடைந்தால் தனது கடமைகளைச் செய்வதற்கு வசதியாக கஃபாவிற்குள் உடனடியாக நுழையாமல் மக்காவின் மேற் பகுதியில் இரவு தங்கி, ஓய்வெடுத்து, குளித்த பின்னரே கஃபாவில் நுழைவார்கள் என்பதை அது பற்றி இடம்பெறும் ஹதீஸ்களில் அவதானிக்க முடிகின்றது.

ஹஜ் தொடர்பாக நபித்தோழர்கள் அறிவிக்கின்ற செய்தியில் இது பற்றிய விபரம் தெளிவாக இடம் பெற்றுள்ளது. இமாம்கள் தமது கிரந்தங்களில் மக்காவில் நுழைவது பற்றி எழுதி இருப்பதையும் பார்க்கின்றோம். இமாம் புகாரி (ரஹ்) அவர்கள் தனது கிரந்தமான புகாரியில்,

باب الاغتسال عند دخول مكة

மக்காவில் நுழையும் போது குளித்தல்!

بَابٌ دُخُولِ مَكَّةَ نَهَارًا أَوْ لَيْلاً.

இரவிலோ, பகலிலோ மக்காவில் நுழைதல்! என்ற தலைப்புக்களில் செய்திகள் எழுதியிருப்பதைப் பார்க்கின்றோம். அந்த வகையில் பின்வரும் செய்திகள் இடம் பெற்றுள்ளன.

عن نافع : أَنَّ عَبْدَ اللهِ بْنَ عُمَرَ رَضِيَ اللهُ عَنْهُما حَدَّثَهُ أَنَّ النَّبِيَّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ كَانَ يَنْزِلُ بِذِي طُوًى ، وَيَبِيتُ حَتَّى يُصْبِحَ ، يُصَلِّي الصُّبْحَ حِينَ يَقْدَمُ مَكَّةَ ، وَمُصَلَّى رَسُولِ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ ذَلِكَ عَلَى أَكَمَةٍ غَلِيظَةٍ ، لَيْسَ فِي الْمَسْجِدِ الَّذِي بُنِيَ ثَمَّ ، وَلَكِنْ أَسْفَلَ مِنْ ذَلِكَ عَلَى أَكَمَةٍ ـ غَلِيظَةٍ

(أخرجه البخاري : ٤٩١)

"நபி (ﷺ) அவர்கள் மக்காவுக்கு வரும் போது மக்காவிற்கு மேல் புறமாக உள்ள "தூதுவா" எனும் இடத்தில் இரவு விடியும் வரை தங்கி அங்கேயே சுபஹையும் தொழுவார்கள், அவர்கள் தொழுத இடம் கெட்டியான மேட்டின் மேல் அமைந்துள்ளது. அது தற்காலத்தில் பள்ளிவாசல் கட்டப்பட்ட இடம் அன்று. அது அந்தப் பள்ளிக்கு கீழ் புறமாக அமைந்த இடமாகும் என இப்னு உமர் (رضي الله عنه) அவர்கள் அறிவிக்கின்ற செய்தியை அவரது மாணவரான நாஃபிஃ (ரஹ்) அவர்கள் அறிவிக்கின்றார்கள்." (நூல்: புகாரி)

عَنْ نَافِعٍ أَنَّ ابْنَ عُمَرَ ، رَضِيَ اللهُ عَنْهُمَا كَانَ يَبِيتُ بِذِي طُوًى بَيْنَ الثَّنِيَّتَيْنِ ، ثُمَّ يَدْخُلُ مِنَ الثَّنِيَّةِ الَّتِي بِأَعْلَى مَكَّةَ ، وَكَانَ إِذَا قَدِمَ مَكَّةَ حَاجًّا ، أَوْ مُعْتَمِرًا لَمْ يُنِخْ نَاقَتَهُ إِلاَّ عِنْدَ بَابِ الْمَسْجِدِ ثمَّ يَدْخُلُ فَيَأْتِي الرُّكْنَ الأَسْوَدَ فَيَبْدَأُ بِهِ

(أخرجه البخاري : ١٧٦٧)

நபி (ﷺ) அவர்கள் மக்காவின் “தூத்துவா” விலுள்ள இரண்டு கணவாய்களுக்கும் இடையில் இரவில் தங்குவார்கள். பின்னர், மக்காவின் மேற்பகுதியாக இருக்கும் கணவாய் வழியாக மக்கா பள்ளியில் நுழைவார்கள். அவர்கள் ஹஜ்ஜுக்காகவோ உம்ராவிற்காகவோ மக்காவுக்கு வந்தால் தனது ஒட்டகத்தை பள்ளியின் வாசலில் கட்டுவார்கள் பின்னர், ஹஜருல் அஸ்வத் மூலையில் இருந்து தவாஃபை ஆரம்பம் செய்வார்கள் என இப்னு உமர் (رضي الله عنه) அவர்கள் மேலும் அறிவிக்கின்ற செய்தி புகாரியில் 1767 வது இலக்கமாகவும் இடம் பெற்றுள்ளது.

عَنْ عَائِشَةَ ، رَضِيَ اللهُ عَنْهَا ، أَنَّ النَّبِيَّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ لَمَّا جَاءَ إِلَى مَكَّةَ دَخَلَ مِنْ أَعْلاَهَا وَخَرَجَ مِنْ أَسْفَلِهَا (أخرجه البخاري)

அன்னை ஆயிஷா (رضي الله عنها) அவர்கள் அறிவிக்கின்ற புகாரி (1577-1578 ஆகிய) இலக்க ஹதீஸ் அறிவிப்புக்களில்: நபி (ஸல்) அவர்கள் மக்காவிற்குள் நுழைகின்ற போது மக்காவின் மேல் பகுதியாக நுழைந்து, அதன் கீழ் (பின்) பகுதியால் வெளியேறுவார்கள் என இடம் பெற்றுள்ளது.

அந்தக்கணவாயை (கதா, குதை) என மக்கள் இன்றும் அழைப்பதுண்டு. இது மர்வாவின் வாசல் பக்கமாக இருக்கின்ற மேல் பகுதி என அடையாளப்படுத்தப்படுகின்றது.

இதன் வழியாக நுழைவது சிறப்பைக் குறிப்பதாகக் கொள்ளப்படும் என்று அறிஞர்களால் சுட்டிக்காட்டப் படுகின்றது.

இப்னு உமர் (رضي الله عنه) அவர்கள் மக்காவிற்குள் நுழைகின்ற போது மேற்படி ஒழுங்குகளை கடைப்பிடிப்பதுடன் குளித்து முடிந்ததும் இறைத்தூதர் முஹம்மத் நபி (ﷺ) அவர்கள் இவ்வாறு செய்வார்கள் எனக் குறிப்பிடுவார்கள் என புகாரியின் 1573 வது இலக்க ஹதீஸாக இடம் பெற்றுள்ளது.

இவ்வாறு கவனிக்கின்ற போது மக்காவை வந்தடைந்ததும் இரவாகிவிட்டால் அங்கு தங்கி, பின்னர் ஹஜ் மற்றும் உம்ராக் கடமைக்காக மக்காவின் மேல் பகுதியாக நுழைவதும், கடமைகள் முடிந்ததும் அதன் கீழ் பகுதியாக வெளியேறுவதும் இறைத்தூதரின் வழிமுறையாக பதிவு செய்யப்பட்டுள்ளதை அறிந்து கொள்ள முடியும். தூரப் பிரதேச மக்கள் இவ்வாறு செய்வதால் உடம்பில் தெம்பும், உற்சாகமும் இருக்க தமது கடமைகளை நிறைவேற்ற முடியும். (அல்லாஹ்வே மிக அறிந்தவன்)

கஃபாவை வந்தடைந்ததும்:

கஃபாவை வந்தடைந்ததும் தல்பியாவை நிறுத்தி விட்டு, பொதுவாக பள்ளிவாசல்களில் பிரவேசிக்கும் போது பேணுகின்ற பின்வரும் ஒழுங்கைப் பேணியவாறு, வுழூவுடன் கஃபா நோக்கிச் செல்ல வேண்டும்.

பள்ளியில் பிரவேசிக்கின்ற போது

اَللّٰهُمَّ افْتَحْ لِي أَبْوَابَ رَحْمَتِكَ (أخرجه مسلم)

“அல்லாஹ்வே! உனது கருணையின் வாயில்களை எனக்கு திறந்து தருவாயாக.” என்றும்,

வெளியேறுகின்ற போது

اَللّٰهُمَّ إِنِّي أَسْأَلُكَ مِنْ فَضْلِكَ (أخرجه مسلم)

“அல்லாஹ்வே! உனது அருட்கொடைகளில் இருந்து உன்னிடம் வேண்டுகின்றேன்” என்றும் பிரார்த்திக்க வேண்டும். (முஸ்லிம்) இப்னு மாஜா மற்றும் பல ஹதீஸ் கிரந்தங்களில் பள்ளியில் இருந்து வெளியேறும் போது மேலதிகமாக,

اَللّٰهُمَّ اعْصِمْنِي مِنَ الشَّيْطَانِ الرَّجِيمِ (أخرجه ابن ماجه في سننه)

“அல்லாஹ்வே! உனது விசேட அருளில் இருந்து தூக்கி எறியப்பட்ட ஷைதானின் தீங்கை விட்டும் என்னைப் பாதுகாப்பாயாக” என இடம் பெற்றுள்ளது.

ஹஜருல் அஸ்வதை நோக்கி வருதல்:

ஹஜருல் அஸ்வதை அடைந்ததும் அதனை நேரடியாக முத்தமிடுதல் அல்லது வலது கரத்தினால் தொட்டு முத்தமிட்டு அக்கரத்தை முத்தமிடுதல். அல்லது ஒரு தடியினால் அதனை முத்தமிட்டு பின் அந்த தடியை முத்தமிட்டுக் கொள்ளல்.

அதைத் தொடர்ந்து “**அல்லாஹு அக்பர்**” என்று கூறியவாறு தவாஃபை ஆரம்பித்தல்.

நபி (ﷺ) அவர்கள் அவ்வாறே செய்துள்ளார்கள். இஹ்ராம் அணிந்த நிலையில் தஹிய்யதுல் மஸ்ஜித் தொழ வேண்டிய அவசியம் இல்லை.

ஹஜருல் அஸ்வத்:

இது சுவர்க்கத்திலிருந்து அல்லாஹ்வினால் இறக்கி வைக்கப்பட்ட வெண்ணிறக் கல்லாகும். உலகில் இருக்கின்ற எந்தக் கல்லுக்கும் இது ஒப்பானது கிடையாது. அதன் துகள்கள் உலகில் உள்ள எந்தக் கற்களின் துகள்களையும் ஒத்ததல்ல என்பதே இது சுவர்க்கத்துக் கல் என்பதற்குப் போதுமான சாட்சியாகும்.

புனித மக்காவின் புனிதத்துவத்தை சீர்குலைத்த வர்களில் கராமித்தாக்கள் என்ற முத்திய ஷீஆக் குழவினர் முதல் இடம் பிடிக்கின்றனர். இவர்கள் ஹி. 317 இல் ஹஜ்ருல் அஸ்வதை சூறையாடிச் சென்றனர். 22 ஆண்டுகள் கழித்து அது மீட்கப்பட்டது.

அவ்வாறே, கஃபாவை புனர்நிர்மாணம் செய்த துருக்கியர்கள் இதனைப் பல துண்டுகளாக்கி தமது மன்னர்களான முஹம்மத் பாஷா, சுலைமான் அல் கானூனி போன்றோரின் சமாதிகளில் பரக்கத் வேண்டி பதித்துள்ளதுடன் மற்றொரு துண்டை துருக்கியின் வட ஐரோப்பிய பகுதியில் அமைந்துள்ள ‘உஸ்கை’ மஸ்ஜிதில் பதித்துள்ளனர். இது உஸ்மானியர்கள் செய்த மிகப்பெரும் வரலாற்றுத் துரோகமாகும்.



தவாஃப் ஆரம்பிக்க முன்னால் ஆண்கள் தமது மேல் “இஹ்ராம்” ஆடையை வலது தோளின் கீழால் எடுத்து, இடது தோளின் மேல் போட்டுக் கொள்ள வேண்டும்.

இதற்கு அரபு மொழியில் إضطباع ‘இழ்திபாஃ’ எனக் கூறப்படும். பின்னர், கஃபாவின் வலது பக்க மூலையில் அமைந்திருக்கும் “றுக்னுல் ஹஜரில் அஸ்வத்” கறுப்புக் கல் இருக்கும் மூலையில் இருந்து “அல்லாஹு அக்பர்” எனக் கூறியவராக ஆரம்பம் செய்து புனித கஃபாவை அவர் ஏழு முறை தவாஃப் செய்ய வேண்டும்.

இதில் ஏழு தடவையும் வலது தோள் திறந்திருப்பதுடன், முதல் மூன்று சுற்றிலும் “ரம்ல்” (ஓட்டமும், நடையும் அற்ற) வேகமான நடையில் ஹஜருல் அஸ்வதில் ஆரம்பித்து அதில் முடியும் வரை “ரம்ல்” முறையில் தவாஃப் செய்வது சுன்னத்தாகும். அவ்வாறு செய்ய முடியாவிடின் அதில் எவ்விதக் குற்றமுமில்லை.

இவ்வேளை ஹஜருல் அஸ்வதிற்கு நேராக இருக்கும் மூலையான “ருக்னுல் யமானி” கஃபாவின் வலது (கோனர்) மூலையை முத்தமிடாது, கையினால் தொடுவதுடன், அதற்கும் ஹஜருல் அஸ்வதுக்கும் இடைப்பட்ட அந்தப் பகுதியில்

رَبَّنَا آتِنَا فِي الدُّنْيَا حَسَنَةً وَفِي الْآخِرَةِ حَسَنَةً وَقِنَا عَذَابَ النَّارِ

'ர(B)ப்பனா ஆதினா (F)பித்துன்யா ஹஸனதன், வ(F)பில் ஆஹிர(த்)தி ஹஸனதன், வகினா அதா(B)பன்னார்" என்ற பிரார்த்தனையை பொருள் அறிந்து கூற வேண்டும்.

பொருள்:

எங்கள் இரட்சகனே! இம்மையிலும் மறுமையிலும் எமக்கு நல்லதை வழங்குவாயாக! நரக நெருப்பிலிருந்தும் எம்மைப் பாதுகாப்பாயாக!

இது அனைத்து துஆக்களையும் உள்ளடக்கிய மகத்தான துஆவாகும். இந்த துஆவை அதிகமதிகம் கேட்க வேண்டும்.

தவா∴பின் போது திக்ர், துஆக்கள் தொடர்பான குறிப்புக்கள்:

(1) தவாஃபின் தொடக்கத்தில் ஹஜருல் அஸ்வத் கல்லைத் தொடும் போது 'அல்லாஹு அக்பர்' என நபி (ﷺ) அவர்கள் கூறுவார்கள் என்றும், 'பிஸ்மில்லாஹ் அல்லாஹு அக்பர்' என பிஸ்மியை அதிகரித்து இப்னு உமர் (رضي الله عنه) அவர்களே கூறி இருக்கின்றார்கள் என்றும் இடம் பெற்றுள்ளதால் நாம் "அல்லாஹு அக்பர்" என மாத்திரம் கூறியவாறு தவாஃபை ஆரம்பம் செய்வதை நபிவழிக்கு மிகவும் நெருக்கமானதாகக் கருதுகின்றோம்.

(2) சிலர் ஒவ்வொரு சுற்றுக்குமாக குறித்ததொரு துஆவைத் தொகுத்து மக்களின் கைகளில் கொடுக்கின்ற துஆக்களின் தொகுப்புக்கள் இறைத்தூதர் அவர்கள் ஹஜ், உம்றா தொடர்பாகக் காட்டிய வழி முறையில் உள்ளடங்க மாட்டாது.

(3) இன்னும் சிலர் தவாஃபை ஆரம்பம் செய்கின்ற போது கூறும் திக்ருடன்,

اَللّٰهُمَّ إِيمَانًا بِكَ ، وَتَصْدِيقًا بِكِتَابِكَ ، وَوَفَاءً بِعَهْدِكَ ، واتِّبَاعًا لِسُنَّةِ نَبِيِّكَ مُحَمَّدٍ ﷺ

அல்லாஹும்ம ஈமானம் (B)பிக்க, வ தஸ்தீகன் (B)பிகதாபிக்க, வவஃ(F)பாஅன் பி(B)அஹ்திக்க, வத்திபா (B)

அன் பிசுன்னத்தி நபிய்யிக்க என்பதை நபி வழி என நினைத்து பிரச்சாரம் செய்து ஓதுவதையும் அவதானிக்கின்றோம். அதுவும் ஆதாரபூர்வமான நபிவழி கிடையாது என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

ஏனெனில், அந்த துஆ முஃஜமுத்தபரானி அவ்ஸத் , சுனன் பைஹகி போன்ற கிரந்தங்களில் அறிவிக்கப் பட்டிருந்தாலும் அதன் அறிவிப்பாளர் தொடரில் ஷீஆக் கொள்கையுடைவர் என விமர்சிக்கப்படும் அல்ஹாரிசுல் அஃவர் என்ற பிரசித்தி பெற்ற கடுமையான பலவீனம் உடைய அறிவிப்பாளர் இடம் பெறுகின்றார். அதனை வலுப்படுத்தும் வேறு வழிகளில் அது அறிவிக்கப்படவும் இல்லை.

எனவே, அந்தச் செய்தியை ஆதாரமாகக் கொள்ள முடியாது என்பதைக் கவனத்தில் கொள்ளவும்.

இமாம் பூசைரி (புர்தாக் கவிதை பாடியவர் இல்லை) என்ற ஹதீஸ் கலை வல்லுனர்

مدار الحديث على الحارث الأعور وهو ضعيف

ஹாரிசுல் அஃவர் என்பவர் மீது இந்த ஹதீஸின் அறிவிப்புச் சுழற்சியடைவதால் அது பலவீனமானதாகும் எனக் குறிப்பிடுகின்றார்கள். மேலதிக தவகல்களை அறிந்து கொள்ள الفتاوى الحديثية للحويني நூலைப் பார்வையிடவும்.

இமாம் ஃபாகிஹானி (ரஹ்) அவர்கள், أخبار مكة للفاكهاني என்ற நூலில் இது பற்றி விமர்சனம் செய்கின்ற போது أحدثه أهل العراق இது பிற்காலத்தில் ஈராக்கியர்கள் புதிதாக உருவாக்கியது எனக் குறிப்பிடுகின்றார்கள்.

இது பற்றி இமாம் மாலிக் (ரஹ்) அவர்களிடம் கேட்கப்பட்ட போது هذه بدعة இது பித்அத் எனும் புதுமையாகும் எனப் பதில் அளித்தார்கள் எனக் கூறுகின்றார்கள் இமாம் இப்னுல் ஹாஜ் (ரஹ்) அவர்கள்.

மேலதிகத் தகவல்களுக்காக, (பார்க்க: www.ahlalhadeeth.net அல்லது அறிஞர் அல்பானி அவர்களின் – ஸில்ஸிலத்துல் அஹாதீஸ் ழயீஃபா)

(04) எந்த தவாஃபை அடுத்து ஸஃய் இடம்பெறுமோ அதில் மாத்திரமே ரம்ல் என்ற அந்த வழிமுறை சுன்னத்தாகும் என்பதைக் கவனத்தில் கொள்ளவும்.

மற்றவர் உதவியுடன் தவா.:.ப் செய்யலாம்:

இஸ்லாமிய சட்டங்கள் நெகிழ்வும் எளிமையும் உள்ளதாக இருப்பது அதன் சிறப்பம்சங்களில் ஒன்றாக இருப்பது போன்று, ஒரு சட்டத்தில் அல்லது ஒரு வழிமுறையில் வேறுபட்ட அனுமதிகள் காணப்படுவதும் அதன் எளிமைத் தன்மைக்கும் ஒரு எடுத்துக்காட்டாகும்.

அந்த வகையில் காலால் நடந்து தவாஃப் செய்ய முடியாத நிலையிலுள்ள நோயாளிகள், வயோதிபர்கள், உடல் தொப்பையானவர்கள் ஒருவரின் தோள்மீதிருந்தவாறோ அல்லது மக்கா ஹரத்தினுள் பல்லக்குகளைச் சுமப்பவர்களின் உதவியுடனோ அல்லது நவீன வாகனங்கள் மீதிருந்தவாறோ தவாப் செய்யலாம் என்ற வழிமுறையும் ஒன்றாகும்.

நபிகள் நாயகம் (ﷺ) அவர்கள் ஒட்டகத்தின் மீதிருந்தவாறு தவாஃப் செய்துள்ளதை வைத்தும் அது மார்க்கத்தில் தடை செய்யப்படாத ஒன்று என்பதைப் புரிந்து கொள்ளலாம்.



28 புனித கஃபா தொடர்பாகக் கூறப்படும் கற்பனைக் கதைகள்

இறை இல்லமான கஃபாவைப் பற்றி நூற்றுக் கணக்கான ஆதாரபூர்வமான சான்றுகள் இடம் பெற்றிருந்தும் அவை பற்றி பேசுவதை விடுத்து பொய்யான, ஆதாரமற்ற செய்திகளை மௌலவிகள் பேசி மக்களை நம்ப வைத்து, ஹாஜிகள் மத்தியில் பேசப்படுகின்ற முக்கியமான சில செய்திகள் இங்கு தரப்படுகின்றன.

(1) க.ஃ.பாவைப் பார்த்தல்:

கஃபாவை பார்ப்பது இபாதத் என்ற கருத்தை சிலர் பேசினாலும் அது ஆதாரமற்ற செய்தியாகும்.

خبر النظر إلى الكعبة عبادة (أسنى المطالب في أحاديث مختلفة المراتب للإمام محمد بن درويش بن محمد الحوت البيروتي الشافعي (١ : ١٤٠)

"கஃபாவைப் பார்ப்பது வணக்கமாகும்" எனக் கூறப் படும் செய்தி இமாம்களான இப்னு அதிய், தஹபி ஆகியோரின் தீர்ப்பின் படி பலவீனமானதாகும்." (அஸ்னல் மதாலிப்)

பலவீனத்துக்கான காரணம்:

قال المؤلف : تفرد به همام ، عن ابن جريج ، ولم يروه عنه غير سليمان بن الربيع ، قال ابن حبان همام يسرق الحديث ويروي عن الثقات ما ليس من حديثهم ، فبطل الاحتجاج به ، قال الدارقطني : وسليمان بن الربيع ضعيف غيّر أسماء مشائخ ، وروى منهم مناكير . (العلل المتناهية :٣ : ٨٢٨)

அதன் அறிவிப்பாளர்களில் ஒருவரான ஹம்மாம் என்பவர் இப்னு ஜுரைஜ் அவர்களைத் தொட்டும் தனித்து அறிவிக்கின்றார். அவரிடம் இருந்து சுலைமான் பின் ரபீஃ என்பவரைத் தவிர வேறு ஒருவரும் அவருக்குத் துணையாக அறிவிக்கவில்லை.

இந்த ஹம்மாம் ஹதீஸ்களைத் திருடுபவர் என்றும், நம்பகமான அறிவிப்பாளர்களின் மூலம் அவர்கள் அறிவிக்காதவைகளைத் திருட்டுத்தனமாக அறிவிப்பவர் என்றும் இமாம் இப்னு ஹிப்பான் (ரஹ்) அவர்கள் குறிப்பிடுவ தாக இமாம் இப்னுல் ஜவ்ஸி (ரஹ்) அவர்கள் சுட்டிக் காட்டி, அவ்வாறான செய்திகளைக் கொண்டு ஆதாரம் எடுப்பது தவறாகும் எனக் குறிப்பிட்டுள்ளார்கள்.

(அல்இலலுல் முதனாஹிய்யா)

(2) க.:.பாவில் இருந்து பகிரப்படும் அருள்கள்:

கஃபாவில் 120 அருள்களை அல்லாஹ் இறக்கி பின்வரும் அடிப்படையில் அவற்றைப் பகிர்ந்தளிப்பதாக ஹஜ் காலங்களில் மக்கள் மத்தியில் கூறப்படும் செய்தியே அந்தச் செய்தி.

ينزل الله كل يوم عشرين ومائة رحمة ، ستون منها للطائفين ، وأربعون للعاكفين حول البيت ، وعشرون منها للناظرين إلى البيت . (الطبرانى عن ابن عباس) أخرجه الطبرانى (١١:١٢٤ ، رقم ١١٢٤٨) . وأخرجه أيضًا : الطبرانى فى الأوسط (٢٤٨/٦ ، رقم ٦٣١٤) ، قال الهيثمى (٣ :٢٩٢) : رواه الطبرانى فى الكبير والأوسط ، وفيه يوسف بن السفر وهو متروك . جامع الأحاديث - (٢٤ : ٢٦٠)

அல்லாஹ் 120 அருள்களை தினமும் இறக்குகிறான். அவற்றில் அறுபது தவாஃப் செய்வோருக்கும், நாற்பது கஃபாவில்

தங்கி இருப்போருக்கும், மீதி இருபது கஃபாவைப் பார்த்துக் கொண்டிருப்போருக்கும் என்ற செய்தியே அந்தச் செய்தி.

தபரானி அவ்ஸத், கபீர் மற்றும் மஜ்மஃ அல் ஹைஸமி போன்ற கிரந்தங்களில் இந்தச் செய்தி இடம் பெற்றுள்ளது. அந்த அனைத்து கிரந்தங்களிலும் இடம் பெறும் அறிவிப்பில் யூசுஃப் இப்னுஸ் ஸஃபர் என்பவர் இடம் பெறுகின்றார்.

அவர் ஹதீஸ் துறை அறிஞர்களால் கைவிடப்பட்டவர். எனவே, அறிஞர்களால் கைவிடப்பட்ட ஒருவரது அறிவிப்பை அங்கீகரிக்க முடியாது என ஷாஃபி மத்ஹப் சார்ந்த அறிஞரான இமாம் முஹம்மத் பின் இத்ரீஸ் பின் தர்வீஷ் அஷ்ஷாஃபிஈ அவர்கள் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்கள்.


حسنه المنذري ثم العراقي ، وهو سهو ، فقد قال الذهبي عن ابن عساكر : إن ابن السفر- أحد رواته- متروك وقال ابن الجوزي حديث لا يصح .

(أسنى المطالب في أحاديث مختلفة المراتب : ١ : ١٤٩)

“இமாம் முன்திரீ அவர்கள் அதனை (ஆதாரமாகக் கொள்ள முடியுமான) ஹஸன் தரத்தில் உள்ளது எனக் கூறியதைத் தொடர்ந்து இமாம் இராக்கி அவர்களும் அவரைப் பின் தொடர்ந்து சொன்னாலும் அது அவரின் மறதி, கவனயீனம் காரணமாகவே நிகழ்ந்துள்ளது. அதில் இடம் பெறும் அறிவிப்பாளர்களில் ஒருவரான இப்னுஸ் ஸஃபர் என்பவர் ஹதீஸ் துறை அறிஞர்களால் கைவிடப்பட்டவர் என்பதாக இப்னு அஸாகிர் அவர்களைத் தொட்டும் இமாம் தஹபி அவர்களை சுட்டிக் காட்டியுள்ளார்கள். அத்துடன் இமாம் இப்னுல் ஜவ்ஸி அவர்கள் இது ஆதாரமான செய்தி எனக் குறிப்பிட்டுள்ளார்கள். (பார்க்க: அஸ்னல் மதாலிப்)



29 கஃபாவின் பின்வரும் படத்தை அவதானிக்கவும்



மேலே தரப்பட்டுள்ள படத்தில் காணப்படும் வளைவு (ஹிஜ்ர்) புனித கஃபாவின் ஒரு பகுதியாகும். எனவே, தவாஃப் செய்கின்ற ஒருவர் அதன் வெளிப்பகுதியாகவே தவாஃப் செய்ய வேணடும். அதனுள் தவாஃப் செய்வது தடை செய்யப் பட்டதாகும்.

அவ்வாறே ஹிஜ்ர் வளைவினுள் பர்ழான தொழுகை-களை நிறைவேற்றுவதும் தடை செய்யப்பட்டுள்ளது. எனினும், சுன்னத்தான தொழுகைகளை ஒருவர் தொழுதுகொள்ள ஹதீஸ்களில் அனுமதியுள்ளது. ஜாஹிலிய்யாக் காலத்தில் குறைஷியர் கஃபாவை புணர்நிர்மானம் செய்தபோது மக்காவாசிகள் தூய வழியில் தேடிய பொருளாதார பற்றாக் குறைவினால் அதன் பணியை தொடர முடியாத நிலை ஏற்பட்டது. அதன் காரணமாக கட்டடப் பணி இடைநிறுத்தப்-பட்டது. நபியவர்களின் காலத்தில் புதிய முஸ்லிம்களின் மனநிலையைக் கருத்திற்கொண்டு அதனை பூர்த்தி செய்யாமல் நபியவர்களும் விட்டுவைத்தார்கள். அந்நிலை-யிலே இன்றுவரை காணப்படுகின்றது.

இஸ்மாயீல் நபி (عليه السلام) அவர்கள் அந்த வட்டத்தினுள் அடங்கப்பட்டுள்ளார்கள் என்ற கற்பனைக் கதையால் முஸ்லிம் உலகில் ‘ஹிஜ்ர் இஸ்மாயீல்’ என இஸ்மாயீல் நபியின் பெயரோடு இணைத்துப் பரவியது. ஹதீஸ்களில் ‘ஹிஜ்ர்’ என்ற சொற்பிரயோகமே இடம் பெற்றுள்ளது.

தவாஃப் தொடர்பான குறிப்புகள்:

1) தவாஃபின் எண்ணிக்கையில் ஆறா? அல்லது ஏழா? என்ற சந்தேகம் ஏற்பட்டால் தொழுகையின் ரக்அத்துக்கள் போன்று குறைவான அளவை (ஆறு என) முடிவு செய்து, மீதியைப் பூர்த்தி செய்தல்.

(2) “ஹஜருல் அஸ்வத்” கல்லை கையினால் தொட்டு, நேரடியாக முத்தமிட முடியுமானால் முத்தமிடல். அல்லது வலது கையினால் தொட்டு கையை முத்தமிடுதல்.

(3) அல்லது ஒரு தடியினால் தொட்டு பின் அந்தத் தடியை முத்தமிடுதல். முடியாத போது கையினால் சைகை செய்தல், சைகை செய்த கையை முத்தமிடக் கூடாது.

4) ஒவ்வொரு சுற்றிலும் “ஹஜருல் அஸ்வதிற்கு” நேராக நின்று “அல்லாஹு அக்பர்” எனக் கூறுதல். ஆனால், தவாஃப் முடிந்ததும் கூற வேண்டியதில்லை. ஸஃய், கல்லெறிதல் அமலிலும் இவ்வாறே! இறுதியில் எதுவும் ஓதத் தேவையில்லை.

5) “ஹிஜ்ர்” (கட்டப்படாத வளைவு) கஃபாவின் ஒரு பகுதியாகும். எனவே, “ஹிஜ்ர்”க்கு வெளியால் கஃபாவை முழுமையாக சுற்றுவது அவசியமாகும்.

6) ஹஜருல் அஸ்வதிற்கு நேராக இருக்கும் (ருக்னுல் யமானி) வலது மூலையை தொடுவது சுன்னத்தாகும். ஆனால், தொட்ட கையை முத்தமிடுவதோ அல்லது அதைத் தொட முடியாத போது சைகை செய்வதோ மார்க்கமல்ல.

7) தவாஃபில் ஓதப்படும் “ரப்பனா ஆத்தினா...” துஆவைத் தவிர ஒவ்வொரு தவாஃபிற்குமென பிரத்தியேகமாகக் கூற வேண்டிய குறிப்பிட்ட எந்த திக்ரு வகைகளையும் இறைத்தூதரின் வழிமுறையில் காண முடியவில்லை.

8) தவாஃபின் போது அந்நிய பெண்கள் படுவதால் உழு முறிவதில்லை. அதற்காக ஒருவர் ஹனஃபி மத்ஹபிற்கு மாற வேண்டிய அவசியமும் இல்லை.

(9) பெண்கள் படுவதால் வுழு முறியும் என நபி (ﷺ) அவர்கள் கூறவுமில்லை. அவர்களின் காலத்தில் இவ்வாறான தொரு மத்ஹப் இருந்து, நபித்தோழர்கள் அதற்கு மாறியதும் கிடையாது.

(10) தாவாஃபில் இழ்திபாஃ (தோள் துறக்கும்) முறை கஃபாவை அடைந்து, ஆரம்பமாக செய்யப்படும் (தவாஃபுல் குதூம்) தவாஃபிற்கு மாத்திரம் உரித்தானதாகும். எனவே அந்த வழிமுறை தவஃபுல் இஃபாழா ஹஜ்ஜின் கடமையான தவாஃபிற்கு அவசியமானது கிடையாது.

11) கஃபாவின் கட்டடத்தையோ அதன் மீது போர்த்தப்-பட்டுள்ள புடவையையோ வணக்கமாகவும், பரகத் வேண்டியும் தொட்டுப்பார்த்தல் கூடாது என்பதை பின்வரும் நிகழ்ச்சியின் மூலம் அறிந்து கொள்ளலாம்.

عن ابن عباس : أنه طاف مع معاوية بالبيت ، فجعل معاوية يستلم الأركان كلها ، فقال له ابن عباس : لم تستلم هذين الركنين ولم يكن رسول الله صلى الله عليه وسلم يستلمهما ؟ فقال معاوية : ليس شيء من البيت مهجوراً ، فقال ابن عباس {لقد كان لكم في رسول الله أسوة حسنة} فقال معاوية صدقت. (أخرجه أحمد في مسنده)

முஆவியா (﵁) அவர்களுடன் இப்னு அப்பாஸ் (﵁) அவர்கள் ஒரு முறை தவாஃப் செய்தார்கள். அப்போது முஆவியா (﵁) அவர்கள் கஃபாவின் எல்லா மூலைகளையும் தொட்டார்கள். இதனை அவதானித்த இப்னு அப்பாஸ் (﵁) அவர்கள் (மேலதிகமாக) இவ்விரண்டு மூலைகளையும் ஏன் தொட்டீர் என வினவினார்கள். அதற்கு அல்லாஹ்வின் இல்லத்தில் எதுவும் வெறுக்கப்பட்டதல்லவே என முஆவியா (﵁) அவர்கள் கூற, உடனே இப்னு அப்பாஸ் (﵁) அவர்கள் “உங்களுக்கு உங்களின் தூதரிடம் அழகிய முன்மாதிரி இருக்கிறது” என்ற திருமறை வசனத்தை ஓதிக்காட்டினார்கள். உடனே (தனது நிலைப்பாட்டை திருத்திக் கொண்ட) முஆவியா (﵁) அவர்கள், “நீர் உண்மை உரைத்தீர்” எனக் கூறினார்கள்.

(நூல்: முஸ்னத் அஹ்மத்)

ஒரு முஸ்லிமிடம் இது போன்ற தவறுகள் நிகழ்ந்தாலும் ஆதாரத்தின் அடிப்படையில் சுட்டிக்காட்டப்பட்டால் அவர் நபித்தோழர்களைப் போன்று தவறை ஏற்றுக் கொள்கின்ற பக்குவத்தைத் தன்னுள் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

30



பெண்கள் படுவதால் வுழூ முறியுமா?

பெண்கள் வுழூ செய்த பின் அவர்களை அவர்களின் கணவன்மார்களோ அல்லது பிற அந்நிய ஆண்களோ அறிந்தோ அறியாமலோ படுவதால் ஷாஃபி மத்ஹபில் இருப்பதாகக் கூறுவோர் தமது உழு முறிந்திவிடுவதாக நம்பி, மீண்டும் வுழு செய்வதைப் பார்க்கின்றோம்.

இவர்களின் நம்பிக்கைப் பிரகாரம் வுழூச் செய்து விட்டால் பெண்களிடம் கணவன் தீண்டத்தகாதவராகி, ஒருவர் மற்றவரை விட்டும் தூர ஒதுங்கிக் கொள்வதைப் பார்க்கின்றோம்.

“நபி (ﷺ) அவர்கள் தமது மனைவியரில் சிலரை முத்தமிட்டு, பின்னர் தொழுகைக்கு சென்றுள்ளார்கள் என அன்னை ஆயிஷா (رضي الله عنها) அவர்கள் கூறிய போது நீங்கள்தானே! அவர் என நபித்தோழர்கள் கேட்ட போது சிரித்தார்கள்.”

(நூல்: திர்மிதி, இப்னுமாஜா)

அதற்காக வுழூச் செய்த பின் மனைவியை முத்தமிடு வது சுன்னத் என விளங்கிவிடக் கூடாது. இப்படி ஒன்று நடந்தால் அதற்கான மார்க்க சட்டம் என்ன? என்பதைத் தெரிந்து கொள்ளவே இந்த நடைமுறை என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

குறிக்கீடு:

அல்குர்ஆன் வுழூ மற்றும் தயமம் பற்றிக் குறிப்பிடும் போது "பெண்களை நீங்கள் தொட்டு தண்ணீரையும் பெற்றுக் கொள்ளவில்லையானால் தூய்மையான மண்ணை நாடுங்கள்" (அந்நிஸா: 43, அல்மாயிதா: 06) எனக் குறிப்பிட்டுள்ளதே! பெண்கள் படுவதால் வுழூ முறியும் எனக் கூறவில்லையா? அதன் விளக்கம் என்ன?

பதில்:

மேற்படி வசனத்தை காட்டி ஒருவர் பெண்ணைத் தொட்டால் ஒன்று அவர் தயமம் செய்ய வேண்டும், அல்லது உழு செய்ய வேண்டும்; என ஒரு வாதம் முன்வைக்கப் படுகின்றது. இது வுழூவுடன் பெண்களைத் தொடுவதால் வுழூ முறியும் என வாதிடுவோரின் வாதங்களில் ஒன்றாகப் பார்க்கின்றோம்.

அந்த வசனத்தில் لَامَسْتُمُ النِّسَاءَ "**லா மஸ்து முன்னிஸாஅ**" என்ற வார்த்தைப் பிரயோகம் இடம் பெற்றுள்ளது. "லாமஸ" என்ற சொல்லுக்கு ஷாஃபி மத்ஹப் மௌலவிகள் தான் வெறுமெனே தொட்டால் என்ற பொருள் கூறுகின்றனர்.

ஆனால், இந்த இடத்தில் அவ்வாறு பொருள் கொள்ள அந்த வசனம் இடம் தரவில்லை. "மனைவியரை தீண்டினால்" "மனைவியருடன் உடலுறவு கொண்டால்" என்ற பொருளே இங்கு பல வழிகளில் பொருத்தமானதாகும். இதை பின்வரும் அடிப்படைகளைக் கவனத்தில் கொண்டு சரியான கருத்தாகவும் கொள்ளலாம்.

"நபி (ﷺ) அவர்கள் தனது மனைவியர் சிலரை முத்தமிட்டு வுழூச் செய்யாது தொழுதமை." (நூல்: திர்மிதி)

அன்னை ஆயிஷா (ﷺ) அவர்கள் நபி (ﷺ) அவர்களுக்குக் குறுக்காக உறங்கிக் கொண்டிருக்க, சுஜூத் செய்த நபி (ﷺ) அவர்கள், தமது காலால் அன்னை அவர்களை குத்தி விட்டு, தொழுகையைத் தொடர்ந்தமை. (நூல்: புகாரி)

இரவில் நபி (ﷺ) அவர்களைக் காணாத போது, அவர்களைத் துலாவிப் பார்த்த அன்னை ஆயிஷா (ﷺ) அவர்களின் கை, நபி (ﷺ) அவர்களின் இருபாதங்களிலும் பட்டிருந்தும், நபி (ﷺ) அவர்கள் தனது தொழுகையை தொடர்ந்தமை. (நூல்: முஸ்லிம்)

இவ்வாறு பல நிகழ்வுகள் நடந்தும், நபியவர்கள் வுழூச் செய்யவில்லை என்றால், வசனத்தின் சரியான பொருளாகும்.

அது மாத்திரமின்றி, நமக்கு முன்னர் இப்னு அப்பாஸ் (ﷺ) போன்ற நபித்தோழர்களும் இக்கருத்தையே உறுதி செய்துள்ளனர்.

ஆண், பெண் மாறிமாறிப்படுவதால் வுழு முறிவதாக அதிகம் அலட்டிக்கொள்வோர் ஏற்றுக் கொண்ட “ஹனஃபி மத்ஹப்” இமாம்கள் நாம் முன்வைக்கும் வாதங்களையே முன்வைக்கின்றனர் என்பதைக் கவனத்தில் கொள்ளவும்.

மேற்படி வசனத்திற்கு இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்களின் மத்ஹபு சார்ந்தோரால் பெண்களைத் தொடுதல் என விளக்கம் தரப்பட்டாலும் சரியான ஆதாரபூர்வமான இறைத்தூதர் வழிமுறையையே தனது வழிமுறை என இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்கள் கூறியிருப்பதால் இதில் நாம் அதிகம் அலட்டிக் கொள்ள வேண்டிய அவசியமில்லை.



31 தவாஃப் முடிந்ததும்



"தவாஃப்" முடிந்ததும் தவாஃபிற்காகத் திறந்திருந்த வலது தோளை மூடிக் கொள்வதுடன், மகாமு இப்ராஹீமிற்குப் பின்னால் இரண்டு ரகஅத்துக்கள் தொழுதல்.

அதில் முதலாவது ரகஅத்தில் "பாத்திஹா" அத்தியாயத்தை ஓதி முடித்த பின்னர், "அல்-காஃபிரூன்" அத்தியாயத்தை ஓதுவதும், இரண்டாவது ரகஅத்தில் "பாத்திஹா" அத்தியாயத்தை ஓதிய பின் "அல்இக்லாஸ்" அத்தியாயத்தை ஓதுவதும் நபிவழியாகும். (முஸ்லிம்)

சன நெருக்கடி காரணமாக மகாமு இப்ராஹீமிற்கு பின்னால் தொழ முடியாது போனால் ஹரத்தில் விரும்பிய இடத்தில் தொழலாம். மார்க்கம் இலகுவானதே.

என்ற விதியின் அடிப்படையில் ஹரத்தின் எந்த இடத்திலும் தொழுது கொள்ளலாம்.

நபி (ﷺ) அவர்கள் மகாமு இப்ராஹீமில் தொழுகை முடிந்ததும் ஹஜருல் அஸ்வதை மீண்டும் தொட்டு முத்தமிடுவார்கள் என்ற செய்திகளைப் பார்க்கின்றோம். ஒருவருக்கு அவ்வாறு செய்ய சந்தர்ப்பம் கிடைத்தால் அதை அவர் தாராளமாகச் செய்து கொள்ளலாம். அதற்காக தவாஃப் செய்வோரை துன்புறுத்துதல் கூடாது.

ஸம்ஸம் நீர் அருந்துதல்:

இறைநேசத் தூதர் இப்ராஹீம் நபி (عليه السلام) அவர்கள் தனது மகன் இஸ்மாயீல் அவர்களோடு சேர்ந்து புனித கஃபாவைக் கட்டிய போது நின்று கட்டிய இடத்தின் கல்லை அடையாளப் படுத்தி மகாமு இப்ராஹீம்; இப்ராஹீம் (عليه السلام) அவர்கள் நின்ற இடம் என்ற பொருளில் அல்லாஹ் அதனை அத்தாட்சிப்படுத்தி அழைக்கின்றான்.

அந்த மகாமு இப்ராஹீமுக்குப் பின்னால் இரண்டு ரகஅத்துக்கள் தொழுது முடிந்ததும் நபி (ﷺ) அவர்கள் ஸம் ஸம் நீர் அருந்தும் வழக்கமுடையவர்களாக இருந்தார்கள் என்ற ஆதாரபூர்வமான செய்தியைப் பார்க்கின்றோம்.

தவாஃப் செய்வோரின் வசதியைக் கவனத்தில் கொண்டு “ஸம்ஸம்” கிணற்றிற்குச் செல்லும் வழி தற்போது மூடப்பட்டுள்ளது.

அதே நேரம், அது அமையப் பெற்றுள்ள பகுதியில் ஸம்ஸம் நீர்க் குழாய்கள் பொருத்தப்பட்டு தாராளமாக நீர் அருந்துவதற்கான வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன. எனவே, அவற்றில் இருந்து வயிறு நிரம்ப மனம் விரும்பியவாறு ஸம்ஸம் நீர் பருகிக் கொள்ளலாம்.

ஸ.்.பா, மர்வாவிற்கு இடையில் தொங்கோட்டம் ஓடுதல்:

மகாமு இப்ராஹீமுக்குப் பின்னால் இரண்டு ரகஅத்துக்கள் தொழுது முடித்த பின்னர் “ஸ(F)பா” மலை மீதேறி “அல்லாஹு அக்பர்” “அல்ஹம்து லில்லாஹ்” என மூன்று தடவைகள் கூறி, அல்லாஹ்வை ஒருமைப்படுத்தி, துதித்த பின்னர், பின்வரும் அல்குர்ஆன் வசனத்தையும் திக்ரையும் ஓதி முடித்து, கஃபாவை முன்னோக்கியவாறு தான் விரும்பும் பிரார்த்தனைகளைச் செய்தல். இவ்வாறு மூன்று தடவைகள் செய்தல்.

அதாவது மூன்று தடவைகள் திக்ரும், இரு தடவைகள் பிரார்த்தனையும் செய்தல். முன்னர் சுட்டிக்காட்டியது போன்று ஸஃயின் முடிவில் பிரார்த்தனை செய்ய வேண்டியதில்லை.



ஸ.்.பாவில் ஓதவேண்டிய அல்குர்ஆன் வசனம்:

إِنَّ الصَّفَا وَالْمَرْوَةَ مِنْ شَعَآئِرِ اللّٰهِ ۚ فَمَنْ حَجَّ الْبَيْتَ أَوِ اعْتَمَرَ فَلَا جُنَاحَ عَلَيْهِ أَنْ يَطَّوَّفَ بِهِمَا ۚ

وَمَنْ تَطَوَّعَ خَيْرًا ۙ فَإِنَّ اللّٰهَ شَاكِرٌ عَلِيمٌ ﴿١٥٨﴾ (البقرة : ١٥٨)

உச்சரிப்பு: இன்னஸ்ஸ(F)பா வல்மர்வ(TH)த மின் ஷஆயிரில்லாஹ். (F)பமன் ஹஜ்ஜல் (B)பை(TH)த, அவிஃதமற (F)பலா ஜுனாஹ அலைஹி அய்யத்தவ்வ(F)ப (B)பிஹிமா, (F)பமன் ததவ்வஅ ஹைரன் (F)பஇன்னல்லாஹ ஷாகிருன் அலீம். (2:158)

பொருள்: “நிச்சயமாக ஸ(F)பாவும் மர்வாவும் அல்லாஹ்வின் அடையாளச் சின்னங்களில் உள்ளவையாகும். எவர் இந்த மசூதியை (கஃபாவை) “ஹஜ்” அல்லது “உம்ரா” செய்கிறாரோ அவர் அவை இரண்டிற்கும் இடையில் வலம் வருவது குற்றமில்லை. எவர் உபரியாக நன்மை செய்கிறாரோ (அவருக்கு) நிச்சயமாக அல்லாஹ் நன்றி பாராட்டுபவன். யாவற்றையும் நன்கு அறிந்தவன்.” (அல்பகரா: 158)

குறிப்பு: ஜாஹிலிய்யாக் காலத்தில் ஸஃபா மலையில் இஸாஃப் என்ற பெயரிலும் மர்வா மலையில் நாயிலா என்ற பெயரிலும் குரைஷியர் மூலமாக இரு சிலைகள் வைக்கப்பட்டு வணங்கப்பட்டன. பின்னர், அவை நீக்கப்பட்டு அங்கு ஸஃய் செய்யுமாறு கட்டளை வந்தபோது அவற்றை வணங்குவதற்கு நிகராகி விடுமோ என நபித் தோழர்கள் அச்சப்பட்டதனால் அங்கு தவாஃப் செய்வது பாவமில்லை, தவறில்லை என குர்ஆன் வழிகாட்டியது.

திக்ர்:

لاَإِلَهَ إِلاَّ اللهُ وَحْدَهُ لاَ شَرِيكَ لَهُ ، لَهُ الْمُلْكُ ، وَلَهُ الْحَمْدُ، وَهُوَ عَلَىٰ كُلِّ شَيْءٍ قَدِيرٌ ، أَنْجَزَ وَعْدَهُ ، وَنَصَرَ عَبْدَهُ ، وَهَزَمَ الْأَحْزَابَ وَحْدَهُ . (متفق عليه)

லாயிலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லாஷரீகலஹு, லஹுல் முல்க் வலஹுல் ஹம்து, வஹுவ அலா குல்லி ஷையின் கதீர், அன்ஜ (Z)ஸ வஃதஹு, வநஸர அ(B)ப்தஹு, வஹஸ(Z)மல் அஹ் (F) ஸா(B)ப வஹ்தஹ் . (நூல்: புகாரி, முஸ்லிம்)

பொருள்:

“வணங்கி வழிபடத் தகுதியானவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் இல்லை. அவன் தனித்தவன். அவனுக்கு எந்த இணையும் இல்லை. ஆட்சியும் புகழும் அவனுக்கே உரியன. அவன் அனைத்து வஸ்துக்கள் மீதும் பேராற்றல் மிக்கவன்.

அவன் தனது வாக்கை நிறைவேற்றினான். அவனது அடியாருக்கு (முஹம்மத் நபிக்கு) உதவி செய்தான். (நமது) எதிரிகளை தனித்தவனாக தோற்கடித்தான்.”

மர்வாவை நோக்கி

பின் மர்வாவை நோக்கி “ஸஃய்” தொங்கோட்டம் ஓட ஆரம்பித்தல். மர்வாவை நோக்கி செல்லும் போது இரண்டு “பச்சை ப(B)ல்ப்” வெளிச்சத்திற்கும் இடையில் சற்று வேகமாக ஓடுதல். பின் நடந்து செல்லுதல். இவ்வாறு ஸஃபாவில் ஆரம்பித்து மர்வாவை அடைவது ஒரு ஓட்டமாகும்.

மர்வாவை வந்தடைந்ததும்

மர்வாவை வந்தடைந்ததும் ஸ(F)பாவில் ஓதிய அல்குர்ஆன் வசனத்தையும் திக்ரையும் ஓதி ஸஃபாவில் பிரார்த்தித்தது போன்று கிப்லாவை முன்னோக்கியவாறு பிரார்த்தனை செய்துவிட்டு, “ஸ(F)பா”வை நோக்கி ஓடுதல். இவ்வாறு ஸ(F)பாவை வந்தடைந்தால் இரண்டு ஓட்டமாகும்.

இவ்வாறு ஏழு ஓட்டங்கள் ஓட வேண்டும். ஏழாவது ஓட்டம் மர்வாவில் முடிந்ததும் “திக்ர்” செய்யாது பின்வரும் கடமையை நிறைவு செய்யத் தயாராகுதல்.

முடியை முழுமையாக மழித்தல் அல்லது குறைத்தல்:

உம்ராவின் நான்காவது கடமையாக இச்செயற்பாடு இருக்கின்றது. உம்ராவின் சகல கடமைகளையும் அல்லாஹ்வின் தூதரின் வழிகாட்டலுக்கு அமைவாக நிறைவேற்றும் பலர் முடியை மழிப்பதில் அல்லது கத்தரிப்பதில் தமது மனோ இச்சையை முற்படுத்துவதை அவதானிக்க முடிகின்றது.

குறிப்பு:-
அரபியில் தலையை முழுமையாக மழிப்பதற்கு "ஹல்க்" என்றும், தலையின் சகல பாகங்களில் இருந்தும் நன்றாக குறைப்பதற்கு "தக்ஸீர்" அல்லது "கஸ்ர்" என்றும் கூறப்படும்.

அதனால் இதில் முடியை மழித்தல் அல்லது குறைத்தல் என்ற இரு நிலைகளே இருக்கின்றன. நான்கு முடிகளை வெட்டுதல் என்ற மூன்றாவது புதியதொரு நிலை கிடையாது என்பதைக் கவனத்தில் கொள்ளவும்.

தமத்துஃ முறையில் ஹஜ் செய்வோர் துல்ஹஜ் பிறை பத்தில் தமது தலையை முழுமையாக மழித்துக் கொள்-வதற்காக உம்ராவின் போது தமது முடிகளை மழிக்காது முழுமையாகக் குறைத்துக் கொள்வதில் தப்பில்லை.

பெண்கள் முடி கத்தரிப்பதற்கான அளவு:

பெண்கள் தமது கொண்டையின் நுனியில் இருந்து விரற்கிடை (விரல் நுனி) அளவு கத்தரித்துக் கொள்ள வேண்டும். இத்தோடு உம்ராவின் கடமைகள் நிறைவு பெறுகின்றன.



32 உம்ராவின் கடமைகள் பற்றிய சுருக்கம்

(1) நிய்யத்துடன் கடமையில் உட்பிரவேசித்தல்.

(2) கஃபாவை ஏழு முறை வலம் வருதல்.

(3) ஸஃபா", "மர்வா"வுக்கிடையில் ஏழு தடவைகள் ஸஃய் செய்தல்.

(குறிப்பு):

(1) எல்லையில் இருந்து இஹ்ராம் அணிதல்.

(2) முடியை மழித்தல் அல்லது முழுமையாகக் குறைத்தல் என்ற இரு அம்சங்கள் உம்ராவின் (வாஜிப் எனப்படும்) கட்டாயக் கடமைகளில் சேர்க்கப்படாமல் உம்ராவின் கடமைக்கு நிகரான வாஜிபுகளில் சாதாரண கடமைகளில் சேர்க்கப்படுகின்ற காரணத்தினால் அவற்றை தவற விடுவோர் பலிப்பிராணி கொடுப்பதன் மூலம் அந்தக் கிரிகைகளைச் சரி செய்து கொள்ளலாம் என ஃபிக்ஹ் துறை சார் அறிஞர்கள் தீர்ப்புக் கூறி இருக்கின்றனர்.

இருப்பினும், இறைத்தூதர் அவர்கள் ருகுன், வாஜிப் என இவைகளைப் பாகுபடுத்திப் பார்க்காது முழுமையாக நிறை வேற்றிய காரணத்தினால் நாமும் அவ்வாறு நிறைவேற்ற வேண்டும் என்பதே நமது நிலைப்பாடாகும்.



33 ‘தமத்துஃ’ முறையில் ஹஜ் செய்பவர் கவனத்திற்கு

மேற்படி நான்கு கடமைகளும் “தமத்துஃ” முறையில் ஹஜ் செய்பவர் முழுமைப்படுத்திய பின்னரே அவர் தனது இஹ்ராத்தைக் களைய வேண்டும்.

அதன் பின்னர், துல்ஹஜ் பிறை எட்டு அதிகாலை ஹஜ்ஜுக்காக இஹ்ராம் அணியும் வரை அவர் சாதாரண நிலையில் இருப்பவர் போன்றவராகின்றார். அவர் விரும்பினால் குடும்ப உறவும் அவருக்கு ஹலாலானதே! இது இப்போது தேவைதானா? என்ற கேள்வியை விட மார்க்கத் தெளிவே இங்கு முக்கியமானதாகும். இது போன்ற மனித உணர்வுடன் தொடர்புபட்டதைக் கூட நமது மார்க்கம் எப்படி அணுகியிருந்தது என்பதைப் புரிந்து கொள்ள சிறந்த நடைமுறைப் பதிவாகும். இது பற்றி பின்வரும் நபிமொழிகள் மூலம் தெளிவு பெறலாம்.

... قَدِمَ النَّبِيُّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ وَأَصْحَابُهُ صَبِيحَةَ رَابِعَةٍ مُهِلِّينَ بِالْحَجِّ ، فَأَمَرَهُمْ أَنْ يَجْعَلُوهَا عُمْرَةً ، فَتَعَاظَمَ ذَلِكَ عِنْدَهُمْ، فَقَالُوا يَا رَسُولَ اللهِ أَيُّ الْحِلِّ قَالَ حِلٌّ كُلُّهُ (متفق عليه) وفي رواية: ..... فَلَمَّا قَدِمْنَا أَمَرَنَا النَّبِيُّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ أَنْ نَحِلَّ وَقَالَ : "أَحِلُّوا وَأَصِيبُوا مِنْ النِّسَاءِ" (متفق عليه)

நபி (ﷺ) அவர்களும், அவர்களின் தோழர்களும் ஹஜ்ஜுக்காக துல்ஹஜ் பிறை நான்கில் வந்த போது தனது தோழர்கள், கிரான் முறைப்படி அணிந்து வந்த இஹ்ராத்தின் முறையை தமத்துவுக்கான உம்ராவாக மாற்றி விட்டு சாதாரண நிலைக்கு வந்து மனைவியரையும் அனுபவிக்கலாம் எனக் கூறியது நபித்தோழர்களுக்கு மிகப் பாரதூரமான ஒன்றாகத் தென்பட்டது. அதனால் அல்லாஹ்வின் தூதரே! (இதன் பின்னர்) எதெல்லாம் ஹலால் எனக் கேட்கவே நபி (ﷺ) அவர்கள் அனைத்தும் ஹலால் எனக் கூறினார்கள். (நூல்: புகாரி-1564, முஸ்லிம்-3068) அதாவது, இஹ்ராத்திற்கு முன்னுள்ள நிலை போன்ற நிலைக்கு ஹாஜி வந்துள்ளார் என்பது இதன் விளக்கமாகும்.

முஸ்லிமின் மற்றொரு அறிவிப்பில்:-

حَتَّى إِذَا قَدِمْنَا طُفْنَا بِالْكَعْبَةِ وَالصَّفَا وَالْمَرْوَةِ فَأَمَرَنَا رَسُولُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ أَنْ يَحِلَّ مِنَّا مَنْ لَمْ يَكُنْ مَعَهُ هَدْيٌ ، قَالَ : فَقُلْنَا حِلُّ مَاذَا؟ قَالَ : الْحِلُّ كُلُّهُ ، فَوَاقَعْنَا النِّسَاءَ ، وَتَطَيَّبْنَا بِالطِّيبِ ، وَلَبِسْنَا ثِيَابَنَا ، وَلَيْسَ بَيْنَنَا وَبَيْنَ عَرَفَةَ إِلَّا أَرْبَعُ لَيَالٍ ثُمَّ أَهْلَلْنَا يَوْمَ التَّرْوِيَةِ . (أخرجه مسلم : ٢١٢٧)

“புனித கஃபாவை நாம் வந்தடைந்து தவாஃபையும் முடித்து, ஸஃபா மர்வாவிற்கு இடையில் ஸஃய்யையும் முடித்ததும் எம்மில் யாரிடம் பலிப் பிராணி இல்லையோ அவர் ஹலாலாகிக் கொள்ளட்டும் (சாதாரண நிலைக்கு வரட்டும்) எனக் கூறினார்கள். அப்போது எப்படியான ஹலால் என நாம் கேட்டோம். அனைத்தும் ஹலால் என்றார்கள். நாம் எமது மனைவியரோடு குடும்ப உறவில் ஈடுபட்டோம். நறுமணங்கள் பூசினோம். எமக்கும் அரஃபா தினத்திற்கும் இடையில் நான்கு நாட்களே மீதமிருந்தன. தர்வியா (துல்ஹஜ் எட்டாம் நாள்)

அன்று மீண்டும் ஹஜ்ஜுக்கான தல்பியாக் கூறி மினாவை நோக்கி மீண்டும் புறப்பட்டோம்" என நபித்தோழர்கள் குறிப்பிடுகின்றனர். (முஸ்லிம்)

மற்றொரு அறிவிப்பில்; (அல்லாஹ்வின்) அந்த இல்லத்தை தவாஃப் செய்து, ஸஃபா, மர்வாவிற்கு இடையில் தவாஃப் (ஸஃய்) செய்யும் படியும், பலிப்பிராணியைத் தன்னுடன் கொண்டு வராதவர்கள் தலை முடிகளைக் குறைத்துக் கொள்ளுமாறும் தனது தோழர்களுக்கு கட்டளை யிட்டார்கள். எவரது மனைவி தன்னுடன் வந்திருக்கின்றாரோ அவர் அவருக்கு ஆகுமாகும். அதே போன்று வாசனை தடவிக் கொள்ளுதல், (தைத்த) மாற்று ஆடைகளை அணிதல் ஆகியவையும் (ஹஜ்ஜுக்காக இஹ்ராம் அணியும் வரை) ஆகுமானதே எனக் கூறியதாக நபி (ﷺ) அவர்களின் ஹஜ்ஜின் விபரம் பற்றி விபரிக்கும் இப்னு அப்பாஸ் (رضي الله عنه) அவர்கள் குறிப்பிடுகிறார்கள்." (நூல்: முஸ்லிம்)

தமத்துஃ முறையில் உம்ரா முடிந்ததும் ஒருவர் தனது மனைவியோடு குடும்ப உறவில் ஈடுபடுவது இறைத்தூதர் அனுமதித்த காரியமாகும் என்பதைச் சுட்டிக்காட்டவும், இதற்குள் இவருக்கு ஒரு குடும்ப உறவு தேவைதானா எனக் கேட்கின்ற அறிவிலிகளுக்கும் மார்க்கம் இது பற்றியும் இந்த நேரத்திலும் பேசியுள்ளது என்பதைத் தெளிவுபடுத்தவுமே இது பற்றி இங்கு ஞாபகப்படுத்தப்படுகின்றது.

குறிப்புக்கள்:


(1) கிரான், அல்லது இஃப்ராத் செய்வோர் தமது ஹஜ் கடமை முடியும் வரை மனைவியரோடு உடல் உறவில் ஈடுபடுவது தடையாகும்.

மேற்படி அனுமதியானது தமத்துஃ முறையில் ஹஜ் செய்வோருக்குரியதாகும். கிரான் அல்லது இஃப்ராத் முறையில் "ஹஜ்" செய்வோர் ஸஃய் செய்து முடித்ததும் தமது இஹ்ராத்தை

களையாது, தலையையும் மழிக்காது, மனைவியருடன் சல்லாபமும் செய்யாது துல்ஹஜ் பிறை பத்தில் முடியைக் களைந்து, பின்னர் தவாஃபுல் இஃபாழாவையும் முடித்த பின்பே அவர்கள் மேற்சொன்ன அம்சங்கள் செய்ய அனுமதிக்கப்படுவர்.

(2) உம்ராவின் கடமைகளில் ஏதாவது ஒரு கடமை விடுபட்டால் உம்ரா செல்லுபடியற்றதாகும். ஆனால், எல்லையில் இருந்து இஹ்ராம் அணிவது, முடியை மழிப்பது விட்டாலே தவிர. அதற்காக "ஹத்ய்" எனப்படும் பலிப்பிராணி கொடுப்பதால் உம்ரா செல்லுபடியாகும்.

சிந்திக்க!



இஸ்மாயீல் (عليه السلام) அவர்களின் அன்புத் தாய் அன்னை ஹாஜர் (رضي الله عنها) அவர்கள் 5000 ஆண்டுகளுக்கு முன்னால் தனது பால்குடிப் பருவக் குழந்தை இஸ்மாயீலுக்காக தண்ணீர் தேடி ஓடியதை ஹஜ் மற்றும் உம்றாவில் தொங்கோட்டம் ஓடுதல் என்ற ஈமானிய வணக்கமாக அல்லாஹ் கடமையாக்கியதன் மூலம் அந்தத் தாயின் ஈமானிய உணர்வு நம்மிடம் நிலைக்கவும் ஞாபகப் படுத்தவும் ஏற்படுத்தினான் போலும்! அதன் இறுதியில் ஜிப்ரீல் (عليه السلام) அவர்களின் இறக்கையினால் நிலத்தில் அடிக்க பீறிட்டுப் பாய்ந்த 'ஸம் ஸம்' நீரின் உலக அற்புதத்தை *"அல்லாஹ் எம்மைக் கைவிட மாட்டான்"* என்ற அவரது ஈமானிய வார்த்தையின் பலனாக மறைத்து வைத்தான் என்பதே உண்மை!



34 இஹ்ராம், தவாஃப், ஸஃய் ஆகிய கடமைகளில் இடம் பெறும் சுன்னத்துக்கள்

(1) உயர்ந்த குரலில் தனித்தனியே தல்பியாக் கூறுதல்.

(2) ஹஜருல் அஸ்வதை முத்தமிடுதல்.

(3) தவாஃபின் ஏழு சுற்றுக்களிலும் வலது தோள்பட்டை திறந்திருத்தல்.

(4) உம்ராவுக்கான தவாஃப் மற்றும் தவாஃபுல் குதூமில் முதல் மூன்று சுற்றிலும் “ரம்ல்” ஓடுதல்.

(5) ஹஜருல் அஸ்வதிற்கும், றுக்னுல் யமானிக்கும் இடையில் ரப்பனா ஆத்தினா துஆ ஓதுதல்.

(6) மகாமு இப்ராஹீமிற்கு பின்னால் இரண்டு ரகஅத்துக்கள் சுன்னத் தொழுதல் . அதில் அல் கஃபிரூன், அல் இக்லாஸ் அத்தியாயங்களை ஓதுதல்.

(7) ஸம்ஸம் நீர் அருந்தி விட்டு ஸஃய் செய்ய முன்னர் மீண்டும் ஹஜருல் அஸ்வதைத் தொடுதல் .

(8) “ஸஃபா” மர்வாவில் ஓத வேண்டிய குர்ஆன் வசனத்தையும் திக்ரையும் ஓதுதல்.

(9) ஸஃயின் போது இரு பச்சை வெளிச்சங்களுக்கும் இடையில் சற்று வேகமாக ஓடுதல்.

(10) ஸஃய் சுற்றுக்களில் ஸஃபா, மர்வாவில் நின்றவாறு கிப்லாவை முன்னோக்கி பிரார்த்தனை செய்தல். முடிந்ததும் மர்வாவில் எதுவும் செய்ய வேண்டியதில்லை.

குறிப்பு:

ஒருவர் உம்ராவின் சுன்னத்துக்களை விடுவதால் அவரது உம்ரா செல்லுபடியானதாகும். ஆனால் அதிகப் படியான நன்மையில் பாரிய குறைவு ஏற்படும். இறைத்தூதர் நேசத்திலும் பலவீனத்தைக் காட்டும்.

இஹ்ராம் அணிந்த நிலையில் தலை முடியை சிரைக்கும் நிலை ஏற்பட்டால்?:

ஒருவர் இஹ்ராம் அணிந்த நிலையில் பேன், பொடு போன்றவற்றின் தொல்லையால் தலை முடியை சிரைக்க வேண்டிய நிர்பப்பந்தத்திற்குள்ளானால் அவர் தலையை மழித்துக் கொண்டு பின்வரும் வழிமுறையைக் கடைப்பிடிக்க வேண்டும்.

நான் ஹுதைபியாவில் இஹ்ராத்துடன் நின்று கொண்டிருந்தேன். எனது தலையில் இருந்து எனது முகம் வழியாக பேன்கள் சொரிந்து கொண்டிருந்தன.

“உங்களில் எவர் நோயாளியாக அல்லது அவரது தலையில் (நோய்த்) தொல்லை உடையவராக இருக்கின்றாரோ அவர், நோன்பு பிடித்தல், தர்மம் செய்தல், ஒரு ஆட்டை அறுத்து பங்கிடுதல் ஆகிய (மூன்று) வழிமுறைகள் (ஒன்றைக் கொண்டு) நிறைவேற்ற வேண்டும். (அல்பகரா:196)

என்ற வசனம் தன்பேரில் இறங்கியதாகக் குறிப்பிடும் கஃப் பின் உஜ்ரா (رضي الله عنه) அவர்கள், அல்லாஹ்வின் தூதர் தன்னை அழைத்து, “மூன்று நாள் நோன்பு நோற்றுக் கொள் அல்லது ஆறு ஏழைகளுக்கு உணவளி அல்லது ஒரு ஆட்டைப்பலியிடு என்று கூறியதாகக் கூறுகிறார்கள். (நூல்: புகாரி, முஸ்லிம்)

இதன் மூலம் இஹ்ராம் அணிந்த ஒருவர் கடமை முடிவதற்கு முன்னால் தக்க காரணத்துடன் தனது தலை முடியை மழித்துக் கொண்டு குறிப்பிட்ட சில பரிகாரங்களைச் செய்ய மார்க்கம் அனுமதி வழங்கியிருக்கின்றது என்பதை அறிய முடிகின்றது.



35 இரண்டு உம்ராக்கள் தொடர்பான விளக்கம்

நபி (ﷺ) அவர்களும், அவர்களின் தோழர்களும் ஒரு பயணத்தில் ஓர் உம்ராவே செய்துள்ளனர். அவர்களோ, அவர்களின் தோழர்களோ தன்யீம் என்ற இடத்திலுள்ள “மஸ்ஜித் ஆயிஷா” சென்று இரண்டாவது உம்ராவிற்காக இஹ்ராம் அணிந்து வரவில்லை. அப்படியானால் “மஸ்ஜித் ஆயிஷா” விற்கும் இரண்டாவது உம்ராவிற்கும் இடையில் உள்ள உறவுதான் என்ன ? என்ற கேள்வி உங்களிடம் எழலாம்.

பதில்:

அன்னை ஆயிஷா (رضي الله عنها) அவர்கள் நபி (ﷺ) அவர்களுடன் ஹஜ்ஜுக்காகச் சென்றிருந்தார்கள். மக்காவை வந்தடைந்ததும் “ஸரிஃப்” எனும் இடத்தில் (தற்போதைய நவாரிய்யாவில்) அவர்களுக்கு மாதவிடாய் ஏற்பட்டது. அழுதவர்களாக நபி (ﷺ) அவர்களிடம் வந்து முறையிட்டார்கள்.

....فَإِنَّ ذٰلِكِ شَيْءٌ كَتَبَهُ اللهُ عَلَى بَنَاتِ آدَمَ فَافْعَلِي مَا يَفْعَلُ الْحَاجُّ غَيْرَ أَنْ لَا تَطُوفِي بِالْبَيْتِ حَتَّى تَطْهُرِي (أخرجه البخاري)

“இது ஆதம் நபியின் பெண்மக்களுக்கு அல்லாஹ் விதித்தவைதானே! (அதற்காக அழுகை வேண்டுமா? எனக் கேட்டு விட்டு) “ஹாஜிகள் செய்யும் சகலதையும் நீயும் செய்து கொள். ஆனால் புனித கஃபா ஆலயத்தை மாத்திரம் வலம் வராதே” என்று கூறினார்கள். (புகாரி)

உதிரப்போக்கு நின்றதும் குளித்து தூய்மையாகிய அன்னை ஆயிஷா (ﵢ) அவர்கள் தனது தூய்மை பற்றி நபி (ﷺ) அவர்களிடம் கூறினார்கள். விடுபட்ட தவாஃபையும், ஸஃயையும் பூர்த்தி செய்யுமாறு கூறி, அவர்களது சகோதரரான அப்துர்ரஹ்மான் அவர்களோடு தன்யீமுக்கு (இப்போதைய ஆயிஷா மஸ்ஜித் இருக்கும் இடத்திற்கு) அனுப்பி, அதிலிருந்து புறப்பட்டு வருமாறு கூறினார்கள். (முஸ்லிம்) இதிலிருந்து நாம் தெரிந்து கொள்ள வேண்டிய பல அம்சங்கள் இருக்கின்றன.

1) இஹ்ராம் அணிந்த பின் மாதவிடாய் ஏற்படும் பெண்கள் கஃபாவை வலம் வருவது ஹராமாகும். அவர்களின் உதிரப்போக்கு தடைப்பட்டதும் குளித்து தூய்மையாகி அன்னை ஆயிஷா (ﵢ) அவர்களைப் போன்று விடுபட்ட தமது “தவாஃப்” மற்றும் “ஸஃய்” கடமைகளை ஆயிஷா மஸ்ஜிதிலிருந்து இஹ்ராம் அணிந்து வருவதன் மூலம் பூர்த்தி செய்து கொள்ள முடியும்.

2) மகப்பேறு, உதிரப்போக்கு, மாதவிடாய் போன்ற உதிர உபாதைகள் இஸ்லாமிய மார்க்க சட்டவாக்கத்தில் ஒன்றாகச் சேர்க்கப்படும்.

3) அன்னை ஆயிஷா (ﵢ) அவர்களுடன் பாதுகாப்பிற்காகச் சென்ற அவர்களது சகோதரர் அப்துர்ரஹ்மான் (﵁) அவர்கள் இரண்டாவது உம்ராச் செய்தார்களா? என்றால் இல்லை. எனவே, அது இரண்டாவது உம்றாவை நேரடியாக மறுத்துறைக்கும் ஆதாரமாகும்.

4) மக்கா வெற்றியின் போது அங்கு பதினெட்டு நாட்களுக்கு மேல் தங்கி இருந்த நபி (ﷺ) அவர்களோ, அவர்களின் தோழர்களோ இரண்டாவது உம்ராவிற்காக ஆயிஷா மஸ்ஜிதில் இருந்தோ வேறு இடங்களில் இருந்தோ “இஹ்ராம்” அணிந்து வரவில்லை.

5) மட்டுமின்றி, அப்படி ஒரு மஸ்ஜித் நபி (ﷺ) அவர்களின் காலத்திலோ, அவர்களின் தோழர்களின் காலத்திலோ இருக்கவில்லை. இந்நிலையில் அதில் இருந்து பல உம்ராக்களுக்காக எவ்வாறு இஹ்ராம் அணிந்திருப்பார்கள்? என சிந்திக்க வேண்டும்.

6) “ஹஜ்” “உம்ரா” வணக்கம் பற்றிக் குறிப்பிட்ட நபிகள் நாயகம் (ﷺ) அவர்கள் لتأخذوا عني مناسككم (مسلم) “என்னில் இருந்து உங்கள் ஹஜ், உம்ராக் கடமைகளை எடுத்துக் கொள்ளுங்கள்” எனக் கூறினார்கள். (நூல்: முஸ்லிம்)

7) எனவே, வணக்க வழிபாடுகளில் அவர்கள் எதைச் செய்தார்களோ அதைச் செய்ய வேண்டும். எதைச் செய்யவில்லையோ அதைச் செய்யக் கூடாது. அந்த அடிப்படையில் ஒரு பயணத்தில் பல உம்ரா முறை அவர்களின் வழிமுறைக்கு உடன்பட்டதாக நம்மால் உறுதியாகக் கூற முடியாதுள்ளது.

8) சிலர் اَلْعُمْرَةُ إِلَى الْعُمْرَةِ كَفَّارَةٌ لِمَا بَيْنَهُمَا (أخرجه البخاري)

ஒரு உம்ரா மற்றொரு உம்ரா வரையான இடைப்பட்ட காலப் பகுதியில் செய்யப்படும் பாவங்களுக்கு பரிகாரமாகும் (புகாரி) என்ற ஹதீஸை ஆதாரமாகக் காட்டி பல உம்ராக்கள் செய்வதை ஆகும் என வாதிட்டாலும் அந்த விளக்கம் இறைத்தூதரினதும் அவர்களின் தோழர்களினதும் உம்ரா தொடர்பான செயற்பாடுகளுக்கு பொருத்தமானதாகத் தெரியவில்லை. (அல்லாஹ்வே மிக அறிந்தவன்).

9) ஒருவர் விரும்பினால் உம்ராக் கடமை முடிந்ததும் நபிலான வணக்கங்கள் செய்வது போன்று பல தவாஃப்கள் செய்வதற்கு நபி (ﷺ) அவர்கள் அனுமதி வழங்கியிருக்கின்றார்கள். (நூல்: திர்மதி, நஸயி). அந்த அடிப்படையில் அவர் நபிலான பல தவாஃப்கள் செய்து கொள்ளலாம். அதற்காக இஹ்ராம் அணிய வேண்டும் என்ற நிபந்தனைகள் எதுவும் இல்லை.



يوم التروية '**யவ்முத்தர்வியா**' என்றழைக்கப்படுகின்ற துல் ஹஜ் எட்டாவது நாள் காலை ஹாஜிகள் மினாவிற்கு புறப்படுவர். தமத்துஃ முறையில் உம்ரா செய்து இஹ்ராத்தை களைந்தோர் மீண்டும் ஹஜ்ஜுக்காக தாம் இருக்கும் இடங்களில் இருந்தவாறே اَللّٰهُمَّ لَبَّيْكَ حَجًّا "அல்லாஹும்ம லெப்பைக்க ஹஜ்ஜன்" எனக் கூறி இஹ்ராம் அணிந்து தத்தமது இடங்களில் இருந்து புறப்பட்டு மினாவை வந்தடைவர்.

அங்கு சென்றடைந்து ஐவேளை தொழுகைகளில் சுருக்க முடியுமான ளுஹர், அஸர், இஷா ஆகிய தொழுகை களை இரண்டு ரக்அத்துக்களாக சுருக்கியும், சுபஹ், மஹ்ரிப் ஆகிய தொழுகைகளை சுருக்காமலும் அதற்குரிய நேரங்களில் தொழுவர். மினாவில் தங்கும் மூன்று நாட்களிலும் இவ்வழிமுறையையே கடைப்பிடிப்பர்.

இஹ்ராத்துடன் காணப்பட்ட 'கிரான்' மற்றும் 'இஃப்ராத்' முறையில் உள்ளோர் தமது இஹ்ராத்துடனேயே மினாவை வந்தடைந்து மேற்கூறப்பட்டவாறு நடந்து கொள்வர்.



37 துல் ஹஜ் ஒன்பதாம் நாள்

இத்தினமே “அரஃபா” தினம் என அழைக்கப் படுகின்றது. மினாவில் இருக்கும் ஹாஜிகள் ‘துல் ஹஜ்’ ஒன்பதாம் நாள் காலை அரஃபாவை நோக்கி “தல்பியா” அல்லது தஹ்லீல் (லாயிலாஹ இல்லல்லாஹ்) கூறி புறப்படுவர்.

عَنْ مُحَمَّدِ بْنِ أَبِي بَكْرٍ الثَّقَفِيِّ أَنَّهُ سَأَلَ أَنَسَ بْنَ مَالِكٍ رَضِيَ اللهُ عَنْهُ وَهُمَا غَادِيَانِ مِنْ مِنًى إِلَى عَرَفَةَ كَيْفَ كُنْتُمْ تَصْنَعُونَ فِي هَذَا الْيَوْمِ مَعَ رَسُولِ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ ؟ فَقَالَ : كَانَ يُهِلُّ الْمُهِلُّ مِنَّا ، فَلَا يُنْكَرُ عَلَيْهِ ، وَيُكَبِّرُ الْمُكَبِّرُ مِنَّا فَلَا يُنْكَرُ عَلَيْهِ (أخرجه مسلم)

முஹம்மத் பின் அபூபக்கர் (ரஹ்) கூறுகின்றார்கள், நான் அனஸ் பின் மாலிக் அவர்களோடு மினாவில் இருந்து திரும்பி வந்துகொண்டிருந்த போது இந்நாளில் நபிகள் நாயகத்துடன் நீங்கள் எப்படி நடந்து கொள்வீர்கள் என்று கேட்டார்கள், அதற்கு அவர்கள், எம்மில் தஹ்லீல் (லாயிலாஹ இல்லல்லாஹ்) கூறுபவர் கூறுவார், தக்பீர் (அல்லாஹு அக்பர்) கூறுபவரும் கூறுவார் அவர்மீது அல்லாஹ்வின் தூதரால் மறுதலிக்கப்படாது எனக் கூறினார்கள். (முஸ்லிம்)

மேற்படி செய்தியின் மூலம் இறைத்துாதரின் ஒப்புதலோடு நிறைவேற்றப்பட்ட முறைகள் மூலம் ஒருவர் தனது ஹஜ், உம்றா வணக்கத்தை நிறைவேற்றலாம் என்பது உணர்த்தப்படுகின்றது.





(அர.:.பா மைதானத்தில் பள்ளியின்
ஒரு பகுதி அமைந்துள்ள இடம்)

அரஃபாவிற்கு வெளியில் “நமிரா” எனும் இடத்தில் முடியுமானால் சூரியன் உச்சியில் இருந்து சாயும் வரை தங்கி விட்டு அதன்பின்னர், அரஃபா மைதானத்தில் பிரவேசித்தல். ஒருவர் மக்காவில் அல்லது ஊரில் இருந்தவாறு நேரடியாக ஒன்பதாம் நாள் அரபாவிற்கு வருவதிலும் தப்பில்லை. இறைத் தூதர் மற்றும் பின்வந்த காலங்கள் போல் அல்லாது சன நெரிசலைத் தவிர்க்கும் நோக்கில் மேற்படி நேர முறையில்

சற்று மாற்றம் செய்யப்பட்டு தற்போது முன்கூட்டியே ஹாஜிகள் அரஃபாவுக்கு அழைத்துச் செல்லப்படுவர்.

அரஃபா மஸ்ஜித் :

மஸ்ஜித் "நமிரா" என்றழைக்கப்படும் இந்த மஸ்ஜித் மஸ்ஜித் இப்ராஹீம் அல்கலீல், மஸ்ஜித் அரஃபாத், மஸ்ஜித் உரனா போன்ற பெயர்களில் ஆரம்பத்தில் அழைக்கப் பட்டாலும் தற்போது மஸ்ஜித் அரஃபா அல்லது மஸ்ஜித் நமிரா என்றே அழைக்கப்படுகின்றது.

ஜாஹிலிய்யாவிலும் இஸ்லாத்திலும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அரஃபா மைதானத்தின் முன் நெற்றியில் இது அமைந்திருப்பது இதன் சிறப்பம்சமாகும்.

ஹிஜ்ரி இரண்டாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் அப்பாஸியர் ஆட்சியின் தொடக்கத்தில் இந்தப் பள்ளி முதலாவதாகக் கட்டப்பட்டது. பின்னர் அதை அடுத்து வந்த மம்லூக்கிய ஆட்சியாளரான சைபுத்தீன் கதஸ் அவர்களின் ஆட்சியில் இரு முறை அழகிய கட்டடக்கலையோடு அது வடிவமைக்கப்பட்டது. அதன் பின்னர் துருக்கிய உஸ்மானியர் ஆட்சி காலத்தில் விஸ்தரிப்பு செய்யப்பட்டது.

மக்காவின் பள்ளத்தாக்குகளில் ஒரு பள்ளத்தாக்காக அறியப்படுகின்ற "உரனா" என்ற பள்ளத்தாக்கில் இந்த மஸ்ஜித் அமையப் பெற்றிருக்கிற அதன் பெரும் பகுதி மக்கா ஹரம் எல்லைக்குள் வருவதால் அந்த ஓடை சார்ந்துள்ள பள்ளியின் பகுதியை அரஃபாவாக நினைத்து ஹாஜிகள் பகல் காலங்களில் அங்கு தங்குவதை இறைத் தூதர் தடை செய்தார்கள்.

இந்த பள்ளி அமைந்துள்ள இடத்தில்தான் இறைத் தூதர் அவர்கள் ளுஹர் மற்றும் அஸர் ஆகிய இரு

தொழுகைகளையும் சேர்த்து, சுருக்கி, அஸரை ழுஹரோடு முற்படுத்தியும் தொழுதார்கள். அங்குதான் தனது ‘ஹஜ்ஜதுல் வதா’ எனப்படும் பேருரையையும் நிகழ்த்தியிருந்தார்கள்.

ஹாஜிகள் இன்றும் அவ்வாறே நடந்து கொள்ள வேண்டும்.

ஒரு ஹாஜி இந்த அரஃபா எல்லைக்குள் எங்கும் தங்கலாம். இறைத்தூதர் தங்கிய இடத்தில்தான் தங்க வேண்டும் என்பதில்லை.

وقفت هاهنا وعرفة كلها موقف (أخرجه مسلم)

“நான் இங்கு தரித்துள்ளேன். அரஃபா முழுவதும் தரிப்பதற்குரிய இடமாகும்” என நபிகள் நாயகம் (ﷺ) அவர்கள் கூறினார்கள். (முஸ்லிம்).

இந்த ஹதீஸின் அடிப்படையில் அரஃபா மலைமீதேறி நிற்பது சுன்னத் என வாதிடுவதும் விதண்டாவாதம் செய்வதும் மார்க்க விவகாரத்தில் எல்லை மீறுவதாகும்.

சவுதி அரசின் விஸ்தரிப்பு:

சவுதி அரேபியாவின் மன்னர்களில் ஒருவரான மன்னர் ஃபஹ்த் (ரஹ்) அவர்களின் ஆட்சியில் இந்தப்பள்ளி பாரிய அளவு விஸ்தரிப்பு செய்யப்பட்டது.

சதுர வடிவமான அமைப்பில் அமைந்துள்ள இந்த மஸ்ஜித் கிழக்கு மேற்காக இதன் தூர அளவு 340 மீட்டர்கள் என்றும் வடக்கு தெற்காக 240 மீட்டர்கள் தூர அளவாக அமைக்கப்பட்ட இந்த மஸ்ஜிதின் மொத்த சுற்றளவு ஒரு இலட்சத்தி பத்தாயிரம் சதுர மீட்டர்கள் என மதிப்பிடப் பட்டுள்ளதுடன், அதன் நுழைவாயிலில் எட்டாயிரம் சதுர மீட்டர்கள் அளவான தூரம் நிழல் குடைகளும் அமைக்கப் பட்டுள்ளதாக அதன் விஸ்தரிப்பு பற்றிய குறிப்பில் வாசிக்க கிடைத்தது.

64 பிரதான நுழைவாயில்களையும் ஆறு உயர்ந்த மினாராக்களையும் கொண்டு அமைக்கப்பட்டுள்ள இந்த மஸ்ஜிதின் முகப்பின் மேல் ஹஜ் நேரடி ஒலிபரப்பு நிலையமும் அமைக்கப்பட்டுள்ளது.

ஒரே நேரத்தில் மூன்று இலட்சத்தி ஐம்பதாயிரம் முதல் நான்கு இலட்சம் பேர் வரை தொழலாம் எனக் குறிப்பிடப் பட்டுள்ளது.

https://ar.m.wikipedia.org/wiki/

அர.ஃ.பா முற்ற வெளியில்:

அரஃபா பள்ளி விஸ்தரிக்கட்டுள்ளதால் அதன் பெரும் பகுதி அரஃபா எல்லையில் இருந்து சற்று வெளியாகக் காணப் படுகின்றது. அரஃபா எல்லை எது என்பது அங்கு அறிவுறுத்தப் பட்டுள்ளது என்பதைக் கவனத்தில் கொள்ளவும்.

நபி ﷺ அவர்கள் அரஃபா எல்லைக்குள் இருக்கின்ற நமிராவில் பிரவேசித்த பின்னர் மக்களுக்கு நீண்டதொரு உரை நிகழ்த்தினார்கள்.

அதன் பின் ளுஹருக்கான அதானைக் கூறி, பின்னர் இகாமத்தும் கூறி லுஹர் தொழுகையை இரண்டாகவும் பின்னர் இகாமத் கூறி, அஸர் தொழுகையை இரண்டாகவும் சேர்த்தும், சுருக்கியும், முற்படுத்தியும் தொழுதார்கள். பின்னர் தனது ஒட்டகையில் அமர்ந்தவாறு சூரியன் மறையும் வரை அல்லாஹ்வை இறைஞ்சிப் பிரார்த்தித்தார்கள்.

நமது மௌலவிகள் கூட்டு துஆ செய்து கொடுப்பது போன்று அல்லாஹ்வின் தூதர் அரஃபாவில் ஆயிரக் கணக்கில் திரண்டிருந்த தனது தோழர்களைக் கூட்டுப் பிரார்த்தனைக்காக அழைக்கவுமில்லை; பிரார்த்திக்கவுமில்லை.

கூட்டுப்பிரார்த்தனைக்கு பொருத்தமான தினம் ஒன்று இருக்குமானால் அது அரஃபா தினமாகத்தான் இருக்க முடியும். அந்த தினத்திலேயே கூட்டுப் பிரார்த்தனை செய்யவில்லை யானால் நாமும் அவ்வாறே நடந்து கொள்ள வேண்டும்.

மனோ இச்சை, பரம்பரைவாதம், சுன்னாவில் நாட்டமின்மை போன்ற காரணங்களால் ஹாஜிகளுக்கு துஆச் செய்யத் தெரியாது என்ற பயனில்லாத, அர்த்தமற்ற காரணங்கள், சாக்குப் போக்குகள் கூறும் மௌலவிகள் இந்த விஷயத்திலும் இறைத்தூதர் வழி நடக்க வேண்டுமே என்று கொஞ்சம் கூட அக்கறை காட்டுவதில்லை.

ஹாஜிகளும் தமக்கு எதை எப்படிக் கேட்க வேண்டும் எனத் தெரியாது போன்ற சாக்குப் போக்குகளைக் கூறி இந்த நாளின் சிறப்பைத் தவறிவிடுகின்றனர்.

அதை விடுத்து, அரஃபாத் திடலில் தமக்காகவும், தமது மனைவி மக்களுக்காகவும், நாட்டின் நலனுக்காகவும், முஸ்லிம் சமூகத்தின் விடிவுக்காகவும், நிம்மதியான மண்ணறை வாழ்வுக்காகவும் எந்தப் பிரார்த்தனையிலும் அல்லாஹ்வைப் புகழ்ந்து இறைத் தூதர் பெயரில் ஸலவாத் கூறிப் பிரார்த்திப்பதைப் போன்று இங்கு செய்கின்ற பிரார்த்தனையிலும் கூறிப் பிரார்த்திக்கப் பழகிக் கொள்ள வேண்டும்.



38

பகல் பொழுதில் அரஃபா தவறிவிட்டால்

அரஃபாத்திடலில் பகல் வேளையில் தரிப்பதற்கு தடங்கல் ஏதும் ஏற்பட்டோர், இரவின் ஒரு பகுதியில் அதில் தரித்தாலும் ஹஜ் கடமை நிறைவேறப் போதுமானதாகும்.

عَنْ عُرْوَةَ بْنِ مُضَرِّسِ بْنِ أَوْسِ بْنِ حَارِثَةَ بْنِ لَامٍ الطَّائِيِّ رَضِيَ اللهُ عَنْهُ قَالَ : أَتَيْتُ رَسُولَ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ بِالْمُزْدَلِفَةِ حِينَ خَرَجَ إِلَى الصَّلَاةِ ، فَقُلْتُ : يَا رَسُولَ اللهِ ، إِنِّي جِئْتُ مِنْ جَبَلَيْ طَيِّءٍ ، أَكْلَلْتُ رَاحِلَتِي وَأَتْعَبْتُ نَفْسِي ، واللهِ مَا تَرَكْتُ مِنْ حَبْلٍ إِلَّا وَقَفْتُ عَلَيْهِ ، فَهَلْ لِي مِنْ حَجٍّ؟ فَقَالَ رَسُولُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ : "مَنْ شَهِدَ صَلَاتَنَا هَذِهِ ، وَوَقَفَ مَعَنَا حَتَّى نَدْفَعَ ، وَقَدْ وَقَفَ بِعَرَفَةَ قَبْلَ ذَلِكَ لَيْلًا أَوْ نَهَارًا ، فَقَدْ أَتَمَّ حَجَّهُ وَقَضَى تَفَثَهُ.

(أخرجه الترمذي)

நபி (ﷺ) அவர்கள் முஸ்தலிபாவில் தொழுகைக்கு ஆயத்தமானபோது அல்லாஹ்வின் தூதரே! நானும் களைத்து, எனது ஒட்டகத்தையும் களைப்படையச் செய்து, "தை"யின் இருமலைகள் ஊடாக மாத்திரமின்றி மற்ற எந்த மலையையும் விட்டுவைக்காது எல்லா இடத்திலும் நின்று வந்தேன் எனது "ஹஜ்" செல்லுபடியாகுமா? என உர்வா பின் முளர்ரிஸ் (رضي الله عنه) அவர்கள் கேட்டார்கள் "எவர் எம்முடன் முஸ்தலிபாவிற்கு வந்து,

நமது இத்தொழுகையில் நம்மோடு பங்கேற்று, இதற்கு முன்னர் இரவிலோ அல்லது பகலிலோ அரஃபாவில் சொற்ப நேரம் தங்கி விட்டு வந்திருப்பாரானால் அவரது "ஹஜ்" செல்லுபடியாகும், அவரது கடமையும் நிறைவேறும். என பதிலளித்தார்கள். (திர்மிதி). இதன் உள்ளடக்கத்தின் மூலம் இதைத் தெளிவாக அறிந்து கொள்ளலாம்.

அரஃபாவுக்குள் பகல் வேளையில் பிரவேசிப்போர் சூரியன் மறையும் வரை அங்கிருந்து வெளியேறக் கூடாது.

அங்கு சில மணி நேரம் தரிப்பதால் அவருடைய ஹஜ் கடமை நிறைவேறிவிடும் என்றிருந்தாலும் பகல் வேளையில் அரஃபாவில் தரிப்பதற்கு சந்தர்ப்ப சூழல் காரணமாக ஒருவருக்கு முடியாத போது, அவர் இரவில் சில மணி நேரம் தரிப்பதன் மூலம் அவரது 'ஹஜ்'ஜின் தலையாயக் கடமை நிறைவேறிவிடும். இது இஸ்லாமிய சட்டத்தில் காணப்படும் நெகிழ்வுத் தன்மைக்கு இதுவும் ஓர் உதாரணமாகும்.

அரஃபா தினமும், அதில் தரிப்பதும் ஒரு ஹாஜியின் சுவாசக் குழாயும் இருதயமும் போன்றதாகும்.

'ஹஜ்' என்றாலே அரஃபாதான் என இறைத்தூதர் (ﷺ) அவர்கள் பிரயோகித்த வார்த்தையே மேற்படி நபித்தோழரின் அரஃபா மைதானத் திடலுக்கான தரிப்பும், தேடலுக்குமான பிரதான காரணங்களாகும்.

மேற்படி ஹதீஸ் பகல் வேளையில் அரஃபாவைத் தவற விடுவோருக்கான தெளிவான தீர்ப்பாகவும் இடம் பெறுவதை இங்கு அவதானிக்க முடியும்!



39 துல் ஹஜ் ஒன்பதாம் நாள் சூரிய அஸ்தமனத்தின் பின்

துல் ஹஜ் ஒன்பதாம் நாள் சூரிய அஸ்தமனத்தின் பின் அரஃபாவில் இருந்து முஸ்தலிபாவை நோக்கி செல்ல வேண்டும். அங்கு மஃரிப் தொழுகையை மூன்று ரகஅத்தாக வும், இஷாவைச் சுருக்கி இரண்டு ரகஅத்தாகவும் பிற்படுத்தி ஒரு அதான் இரண்டு இகாமத் அடிப்படையில் தொழ வேண்டும். பின்பு உறங்கிவிட வேண்டும். நபி (ﷺ) அவர்கள் இவ்வாறே செய்துள்ளார்கள். (புகாரி, முஸ்லிம்)

...فَإِذَآ أَفَضۡتُم مِّنۡ عَرَفَٰتٖ فَٱذۡكُرُواْ ٱللَّهَ عِندَ ٱلۡمَشۡعَرِ ٱلۡحَرَامِۖ وَٱذۡكُرُوهُ كَمَا هَدَىٰكُمۡ
وَإِن كُنتُم مِّن قَبۡلِهِۦ لَمِنَ ٱلضَّآلِّينَ ١٩٨ (البقرة : ١٩٨)

“நீங்கள் அரஃபாவில் இருந்து சென்றால் மஷ்அறுல் ஹராமில் (முஸ்தலிபாவில்) வைத்து அல்லாஹ்வை நினைவு கூறுங்கள். அவன் உங்களுக்கு நேர்வழிகாட்டியமைக்காகவும் அவனை நினைவுகூறுங்கள். நீங்கள் இதற்கு முன்னர் வழி தவறியவர்களாக இருந்தீர்கள். (அல்பகரா: 198)

என அல்லாஹ் குறிப்பிடுவதற்கு அமைவாக அவனை நாம் நினைவு கூற வேண்டும். இது தமது வாழ்வியல் மாற்றம் பற்றி மன நிறைவாக நினைவு கூர்வதையே குறிக்கும்.

நபி (ﷺ) அவர்கள் முஸ்தலிஃபாவை நோக்கி வரும் மக்களிடம்,

يَآأَيُّهَا النَّاسُ السَّكِينَةَ السَّكِينَةَ

மக்களே! அமைதி அமைதி எனக் கூறுவார்கள். (முஸ்லிம்) முஸ்தலிஃபாவை வந்தடைந்ததும் மஃரிப் மற்றும் இஷாத் தொழுகைகளை பிற்படுத்தியும் சுருக்கியும் தொழுவார்கள், அவ்விரண்டிற்கும் இடையில் சுன்னத்துக்கள் எதுவும் தொழாமல் ஃபஜ்ர் உதயமாகும் வரை நன்றாக உறங்கி விடுவார்கள். ஃபஜ்ர் நேரம் தெளிவாக உதயமானதும் ஃபஜ்ரைத் தொழுவார்கள் பின்னர், மஷ்அறுல் ஹராம் (தற்போது மஸ்ஜித் கலீல்) இருக்கும் இடத்திற்கு தனது கஸ்வா ஒட்டகத்தில் ஏறி வருவார்கள். அங்கு வந்தடைந்ததும்,

...فَاسْتَقْبَلَ الْقِبْلَةَ فَدَعَاهُ وَكَبَّرَهُ وَهَلَّلَهُ وَوَحَّدَهُ فَلَمْ يَزَلْ وَاقِفًا حَتَّى أَسْفَرَ جِدًّا فَدَفَعَ قَبْلَ أَنْ تَطْلُعَ الشَّمْسُ (أخرجه مسلم)

“கிப்லாவை முன்னோக்கியவர்களாக அல்லாஹ்விடம் துஆக் கேட்பார்கள், அல்லாஹு அக்பர் எனக் கூறி அவனைப் பெருமைப்படுத்துவார்கள். லாஇலாஹ இல்லல்லாஹ் கூறி அவனை உயர்வுபடுத்தி, துதிப்பார்கள்.” ஃபஜ்ரின் இருள் தெளிவாக நீங்கும் வரை இவ்வாறு நின்றவர்களாக திக்ரில் ஈடுபடுவார்கள். (நூல்: முஸ்லிம்)

ஒருவர் மஷ்அருல் ஹராமில் மட்டுமல்லாது முஸ்தலிஃபாவின் எந்த இடத்திலும் தங்கிக் கொள்ளலாம்.

وَوَقَفْتُ هَاهُنَا وَجَمْعٌ كُلُّهَا مَوْقِفٌ (أخرجه مسلم)

“நான் இங்கு தரித்துள்ளேன். ஜம்வு (மக்கள் கூடும்) முஸ்தலிஃபா அனைத்தும் தங்க முடியுமான இடமாகும் என நபி (ﷺ) அவர்கள் கூறுவார்கள்.” (முஸ்லிம்)



40 இயலாத பெண்கள் குறிப்பிட்ட நேரத்திற்கு முன்னதாகவே கல்லெறியச் செல்லலாம்

நோயாளிகளான பெண்கள், பலவீனமானோர், உடல் ஆரோக்கியம் குறைந்தோர் துல் ஹஜ் பத்தாவது நாள் ஃபஜ்ர் நன்றாக உதயமாகும் வரை முஸ்தலிபாவில் தங்கி இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. அவர்கள் இரவின் பெரும்பகுதி கழிந்த பின் கல்லெறிவதற்காக மினாவிற்கு செல்வதற்கான சலுகை அளிக்கப்பட்டுள்ளதை பின்வரும் நிகழ்ச்சியின் மூலம் உறுதி செய்யலாம்.

“அன்னை ஸவ்தா (رضي الله عنها) அவர்கள் முஸ்தலிபாவில் தங்கிய இரவு மக்கள் நெருக்கடிக்கு முன்னதாகவே போவதற்கு நபி (ﷺ) அவர்களிடம் அனுமதி கோரினார்கள். அவர்கள் கொழுத்த பெண்ணாக இருந்தார்கள். அவர்களுக்கு அனுமதி வழங்கினார்கள். காலை உதயமாகும் வரை எம்மை தடுத்துவைத்திருந்தார்கள். அவர்களுடனேயே நாமும் (மினா நோக்கி) புறப்பட்டோம். எனக் குறிப்பிடும் அன்னை ஆயிஷா (ரழி) அவர்கள் ஸவ்தா அவர்கள் உத்தரவு கேட்டது போன்று நானும் கேட்டு நேரகாலத்துடன் செல்வதானது வேறு ஒரு மகிழ்ச்சியான செய்தி கிடைப்பதைவிட எனக்கு அந்த அனுமதி மிக விருப்பமானதாகும் எனக் கூறுகின்றார்கள்.” (நூல்: புகாரி)

அன்னை அஸ்மா (﵂) அவர்களின் அடிமை கூறுகின்றார்: அன்னை அஸ்மா(﵂) அவர்கள் முஸ்தலிஃபாவில் தங்கிய இரவு எழுந்து தொழுவார்கள், பின்னர் தனது அடிமையிடம் மகனே! நிலவு மறைந்துவிட்டதா? எனக் கேட்பார்கள். அவர் இல்லை என்றதும் மீண்டும் தொழுவார்கள், பின்னர் மகனே! நிலவு மறைந்துவிட்டதா? எனக் கேட்பார்கள். அவர் ஆம் என்றதும் புறப்படுங்கள் எனக் கூறுவார்கள். நாம் புறப்பட்டு, (பெரிய) ஜம்ரா வரை வந்தடைவோம். அங்கு வந்து சேர்ந்ததும் அவர்கள் கல் எறிவார்கள். பின்னர் திரும்பி பஃஜ்ரை அவர்கள் தங்கி இருக்கும் இடத்தில் தொழுவார்கள். அந்நேரம் அதிகாலைப் பொழுது உதயத்தின் முன் (நேரகாலத்தோடு அல்லவா) செய்து முடித்துள்ளோம் என்றேன். அப்போது அவர்கள்,

يَا بُنَيَّ إِنَّ رَسُولَ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ أَذِنَ لِلظُّعُنِ

மகனே! நபி "அவர்கள் ஒட்டகத்தில் பயணம் செய்யும் பெண்களுக்கு அனுமதி வழங்கியுள்ளார்கள்" என்று கூறுவார்கள். (நூல்: புகாரி)

இறைத்தூதரின் காலப் பெண்கள் கூட சலுகை அளிக்கப்பட்ட மார்க்க விவகாரங்கள் பற்றி மிகத் தெளிவாக அறிந்து வைத்திருந்ததன் விளைவாகவே அவற்றைத் தமது வாழ்வில் நடைமுறைப்படுத்தினர் என்பது மேற்படி நிகழ்வின் மூலம் நாம் படிக்கின்ற மற்றொரு பாடமாகும்.

ஆகவே, நாமும் இஸ்லாமிய சட்டங்களில் காணப்படும் சலுகைகள் பற்றி அறிவதால் நமது வாழ்விலும் அவற்றை நடைமுறைப்படுத்துவதனூடாக பல கடமைகள் தவறாது பாதுகாக்க அது உதவும் என்பதில் சந்தேகமில்லை!

குறிப்பு: ஜம்ராக்களில் எறிவதற்கான கற்களை முஸ்தலிபாவிலோ அல்லது மினாவிலோ எடுத்துக்கொள்வதில் தவறில்லை.



41 பெருநாள் தினத்தில் நோன்பு நோற்பது தடையாகும்

துல் ஹஜ் பத்தாம் நாள் பெருநாள் தினமாகும். அதில் நோன்பு நோற்பது தடை செய்யப்பட்டுள்ளது. இருப்பினும் ஹஜ் கடமைகளின் போது தவறுகள் ஏற்பட்டமைக்கான பரிகார நோன்பை அய்யாமுத்தஷ்ரீக் நாட்களின் நோற்பதற்கு விதி விலக்கலாக அனுமதிக்கும் சில அறிவிப்புகள் காணப் படுகின்றன.

عَنْ عُقْبَةَ بْنِ عَامِرٍ رَضِيَ اللهُ عَنْهُ أَنَّ رَسُولَ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ: إِنَّ يَوْمَ عَرَفَةَ وَيَوْمَ النَّحْرِ وَأَيَّامَ التَّشْرِيقِ عِيدُنَا أَهْلَ الْإِسْلَامِ ، وَهِيَ أَيَّامُ أَكْلٍ وَشُرْبٍ (أخرجه النسائي في سننه:باب النهي عن صوم عرفة)

அரஃபா தினமும், அறுத்துப்பலியிடும் நாளும், (துல் ஹஜ் பத்தாம் நாளும்), அய்யாமுத்தக்ஷ்ரீகுடைய நாளும் இஸ்லாமிய மக்களாகிய நமது பெருநாள் தினமாகும். அவை உண்டு, பருகும் தினங்களாகும் என்று நபிகள் நாயகம் (ﷺ) கூறினார்கள். (நூல்: சுனன் நஸயி).

வருடத்தில் இரண்டு பெருநாட்களில் முஸ்லிம்கள் உழ்ஹிய்யா மூலம் மகிழ்ச்சியடையும் இந்தத் தினத்தில் மகிழ்ச்சிக்கே முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது.



42 துல் ஹஜ் பத்தாம் நாள் செய்யப்படும் அமல்கள்

‘துல்ஹஜ்” பத்தாம் நாள் ஹஜ்ஜுடன் தொடர்புடைய பல அமல்களை செய்ய வேண்டி இருப்பதால் பொறுமையும் சகிப்புத்தன்மையும் அதிகம் தேவைப்படுகின்றது. அதில் ஹஜ்ஜுடன் தொடர்பான பல அமல்கள் இடம் பெறுவதனா லேயே அந்த தினத்தை **“யவ்முல் ஹஜ்ஜில் அக்பர்”** மாபெரும் ஹஜ் தினம் என்று அழைக்கப்படுகின்றது. அதில் பின்வரும் காரியங்களை செய்ய வேண்டும்.

(1) கல்லெறிதல்: (மக்காவிற்கு சமீபமாக இருக்கும்) **“ஜம்ரதுல்குப்ரா”** என்ற பெரிய ஜம்ராவிற்கு மட்டும் கல்லெறிதல்.

- இதற்காக முஸ்தலிபாவில் தங்கி இருப்போர் ஃபஜ்ர் தொழுகையின் பின் ஜம்ரத்துல் அகபா (குப்ரா) விற்கு கல்லெறியும் வரை தல்பியாவைக் கூறியவர்களாக மினாவை நோக்கி வருதல்.

- ஜம்ராவை அடைந்ததும் மக்காவை இடது பக்கமாகவும் மினாவை வலது பக்கமாகவும் ஆக்கி ஒவ்வொரு கல்லை வீசும் போதும் **“அல்லாஹு அக்பர்”** எனக் கூறி ஏழு கற்களை மாத்திரம் எறிய வேண்டும். அதிகாலை முதல் நள்ளிரவு வரை கல் எறியலாம்.

عَنْ جَابِرٍ رَضِيَ اللهُ عَنْهُ قَالَ رَأَيْتُ رَسُولَ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ رَمَى جَمْرَةَ الْعَقَبَةِ ضُحًى وَأَمَّا بَعْدَ ذَلِكَ فَبَعْدَ زَوَالِ الشَّمْسِ

(أخرجه ابن ماجه في سننه:باب رمي الجمار أيام التشريق)

"அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள், (பெருநாள் அன்று) அதிகாலை நேரம் ஜம்ரத்துல் அக்பாவிற்குக் கல்லெறிந்ததை நான் பார்த்தேன், அதற்குப் பின், சூரியன் உச்சியில் இருந்து சாய்ந்த பின்பு (எறிந்தார்கள்) என ஜாபிர் (رضي الله عنه) அவர்கள் கூறுகின்றார்கள்." (இப்னுமாஜா)

(2) முடியை மழித்தல் அல்லது முழுமையாகக் குறைத்தல்:

உம்ராக் கடமை பற்றிய விபரத்தில் இது பற்றி தெளிவாகத் தரப்பட்டுள்ளது.

(3) தவாஃபுல் இஃபாழா செய்தல்:

அதாவது "கிரான்", அல்லது "இஃப்ராத்" முறையில் ஹஜ் செய்தோர் பிறை பத்தில் ஜம்ராவுக்குக் கல்லெறிந்ததும் இஹ்ராம் அணிந்த நிலையில் ஏழு முறை தவாஃப் மாத்திரம் செய்தல். இதற்கு **"தவாஃபுஸ் ஸியாரா"** என்றும் கூறப்படும்.

தமத்துஃ முறையில் ஹஜ் செய்தோர் அதே இஹ்ராத்துடன் கஃபாவை ஏழு முறை தவாஃப் செய்து, "ஸஃய்யும் செய்தல். இதற்கே "தவாஃபுஸ் ஸியாரா" அல்லது "தவாஃபுல் இபாழா" எனக் கூறப்படும்.

தவாஃபுல் இஃபாழா மற்றும் ஸஃய் ஆகிய இரண்டும் ஹஜ் கடமைகளில் உள்ளதாக இருப்பதால் "தவாஃபுல் இஃபாழா" மற்றும் ஸஃய் செய்யாதிருப்பின் மனைவியருடன் உடலுறவு கொள்வதைத் தவிர இஹ்ராத்துடன் தடை செய்யப்பட்டவை அனைத்தும் அனுமதிக்கப்படும். தவாஃபுல் இபாழா முடிந்தால் அனைத்தும் அனுமதிக்கப்படும்.

பின்பு வணக்கத்திலும், இறை நினைவிலும், பிரார்த்தனையிலும் தம்மை ஈடுபடுத்திக் கொள்ளல்.

فَإِذَا قَضَيْتُم مَّنَاسِكَكُمْ فَاذْكُرُوا اللَّهَ كَذِكْرِكُمْ آبَاءَكُمْ أَوْ أَشَدَّ ذِكْرًا ۗ فَمِنَ النَّاسِ مَن يَقُولُ رَبَّنَا آتِنَا فِي الدُّنْيَا وَمَا لَهُ فِي الْآخِرَةِ مِنْ خَلَاقٍ ﴿٢٠٠﴾ وَمِنْهُم مَّن يَقُولُ رَبَّنَا آتِنَا فِي الدُّنْيَا حَسَنَةً وَفِي الْآخِرَةِ حَسَنَةً وَقِنَا عَذَابَ النَّارِ ﴿٢٠١﴾ أُولَٰئِكَ لَهُمْ نَصِيبٌ مِّمَّا كَسَبُوا ۚ وَاللَّهُ سَرِيعُ الْحِسَابِ ﴿٢٠٢﴾ [البقرة : ٢٠٠ - ٢٠٢]

“உங்கள் ஹஜ்ஜின் கிரியைகளை நீங்கள் முடித்ததும், (இதற்கு முன்னர்) உங்கள் தந்தையரை (குலப் பெருமை பாராட்டி) நீங்கள் நினைவு கூர்ந்ததைப் போல் - இன்னும் அழுத்தமாக - அதிகமாக அல்லாஹ்வை நினைவு கூர்ந்து திக்ரு செய்யுங்கள், “எங்கள் இரட்சகனே! இவ்வுலகிலேயே (எல்லாவற்றையும்) எங்களுக்குத் தந்துவிடு” என்று கூறும் சிலரும் மனிதர்களில் உள்ளனர். இத்தகையோருக்கு மறுமையில் யாதொரு நற்பாக்கியமும் இல்லை. இன்னும், எங்கள் இரட்சகனே! எங்களுக்கு இவ்வுலகிலும், மறுமையிலும் நற்பாக்கியங்களைத் தந்தருள்வாயாக, இன்னும் நரக நெருப்பின் வேதனையிலிருந்தும் எம்மைக் காத்தருள்வாயாக! எனக் கேட்போரும் அவர்களில் உள்ளனர். இவ்வாறு, (இம்மை, மறுமையின் நற்பேறுகளைக் கேட்கின்ற) அவர்களுக்குத்தான் அவர்கள் சம்பாதித்தவற்றின் நற்பாக்கியங்கள் உண்டு. தவிர, அல்லாஹ் கணக்குக் கேட்பதில் மிகத் தீவிரமானவன்.”

(அல்பகரா: 200-202)

وَاذْكُرُوا اللَّهَ فِي أَيَّامٍ مَّعْدُودَاتٍ ۚ فَمَن تَعَجَّلَ فِي يَوْمَيْنِ فَلَا إِثْمَ عَلَيْهِ وَمَن تَأَخَّرَ فَلَا إِثْمَ عَلَيْهِ ۚ لِمَنِ اتَّقَىٰ ۗ وَاتَّقُوا اللَّهَ وَاعْلَمُوا أَنَّكُمْ إِلَيْهِ تُحْشَرُونَ ﴿٢٠٣﴾

(البقرة : ٢٠٣)

“கணக்கிடப்பட்ட (மினாவுடைய) நாட்களில் அல்லாஹ்வை நீங்கள் நினைவு கூறுங்கள். அவசரமாகச் செல்ல விரும்புபவர் இரண்டு நாட்களில் (கல்லெறிதலை) முடித்துக் கொண்டு விரைவது அவர்மீது குற்றமில்லை. (இறுதி வரை) (அல்லாஹ்வை) அஞ்சுபவர் தாமதிப்பதும் அவர்மீது குற்ற மில்லை. அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளுங்கள்! மேலும், நிச்சயமாக நீங்கள் அவனிடமே ஒன்று திரட்டப்படுவீர்கள் என்பதையும் அறிந்து கொள்ளுங்கள்.” (அல் பகரா: 203)

ٱلَّذِينَ ءَامَنُوا۟ وَتَطْمَئِنُّ قُلُوبُهُم بِذِكْرِ ٱللَّهِ ۗ أَلَا بِذِكْرِ ٱللَّهِ تَطْمَئِنُّ ٱلْقُلُوبُ ﴿٢٨﴾
(الرعد : ٢٨)

“நம்பிக்கை கொண்டோரின் உள்ளங்கள் அல்லாஹ்வை நினைவு கூர்வதன் மூலமே அமைதி பெறுகின்றன. அறிந்து கொள்ளுங்கள்! அல்லாஹ்வை நினைவு கூர்வதன் மூலம்தான் உள்ளங்கள் அமைதி பெறுகின்றன.” (அர்ரஃத்: 28)

“‘அய்யாமுத் தஷ்ரீக்’ நாட்கள் உண்டு, பருகி அல்லாஹ்வை நினைவு கூறும் நாட்களாகும்.” (முஸ்லிம், அஹ்மத்) என்ற நபிமொழி ஒரு ஹாஜி அறுக்கின்ற தனது பலிப்பிராணியைத் தாராளமாக உண்ண அனுமதித்துள்ள மார்க்கம்; அவர் இறை நினைவில் தொடர்வதுபற்றி வலியுறுத்தி இருப்பதை இங்கு கவனிக்க வேண்டும்.

(4) பலிப் பிராணியை அறுத்தல்:

இது ஹஜ்ஜுப் பெருநாள் தினத்தில் நாட்டில் நிறை வேற்றப்படும் உழ்ஹிய்யாக் கிரியையில் இருந்து வேறுபட்ட கடமையாகும். ஹஜ் கடமையை தமத்துஃ முறையில் செய்தோர், அல்லது அதில் தடுக்கப்பட்ட ஒன்றை செய்தோர் இப்பலிப்பிராணியை மக்காவில் அல்லது மினாவில் கட்டாயம் கொடுத்தாக வேண்டும். நாட்டில் கொடுப்பது அல்ல. ஆனால், உழ்ஹிய்யா அவ்வாறு கட்டாயமானதன்று.

...وَلَا تَحۡلِقُواْ رُءُوسَكُمۡ حَتَّىٰ يَبۡلُغَ ٱلۡهَدۡيُ مَحِلَّهُۥۚ ... (البقرة : ١٩٦)

"பலிப்பிராணி அதன் (கால) எல்லையை அடைகின்ற வரையில் உங்கள் தலை(முடி)களை சிரைக்க வேண்டாம்."
(அல்பகரா: 196)

...فَمَن تَمَتَّعَ بِٱلۡعُمۡرَةِ إِلَى ٱلۡحَجِّ فَمَا ٱسۡتَيۡسَرَ مِنَ ٱلۡهَدۡيِۚ... (البقرة : ١٩٦)

யார் ஒருவர் தமத்துஃ முறையில் ஹஜ்ஜுக்காக (நிய்யத் செய்து) சென்றாரோ அவர், தனக்கு எது இலகுவாக இருக்கின்றதோ அதனை (ஆடு, மாடு, ஒட்டகைகளை) (ஹதீ எனப்படும்) பலிப் பிராணியாகக் கொடுக்கவும்.
(அல்பகரா: 196)

ஹஜ் வழிகாட்டிகள் ஹாஜிகளுக்கான செலவுப் பணத்தை மீதப்படுத்துவதற்காக இந்தக் குர்பானியை நேர காலத்துடன் நிறைவேற்றும் படி ஹாஜிகளை வற்புறுத்து வதாகக் கேள்விப்படுகின்றோம். இதை விடுத்து ஹாஜிகள் தமது கடமையை உரிய நேரத்தில் நிறைவேற்றுவதில் உறுதியாக இருக்க வேண்டும்.

பலிப்பிராணி கொடுக்க வசதியற்றோர் ஹஜ்ஜில் மூன்று நோன்புகளும், நாடு திரும்பிய பின்னர் ஏழு நோன்புகளும் (மொத்தம் பத்து நோன்புகள்) நோற்க வேண்டும் என்பது அல்குர்ஆனின் தீர்ப்பாகும்.

குறிப்பு:-

இத்தினத்தில் மேற் கூறப்பட்ட அம்சங்களில் எதையேனும் ஒருவர் முற்படுத்தி அல்லது பிற்படுத்திச் செய்வதில் குற்றமில்லை. இவற்றை ஒருவர் முழுமையாக நிறை வேற்றினால் உடலுறவு உட்பட இஹ்ராத்தின் நிலையில் தடுக்கப் பட்டிருந்த அனைத்துத் தடைகளும் நீங்கி அவற்றைச் செய்வதற்கு (ஹலால்) அனுமதிக்கப்படுகின்றார்.

உழ்ஹிய்யா என்பது ஹஜ் செய்வோரும், செய்யா தோரும் தத்தமது நாடுகளில் ஹஜ் பெருநாள் தொழுகை முடிந்ததும் கொடுக்குமாறு வலியுறுத்திக் கூறப்பட்ட வழிமுறையாகும்.

வசதியுள்ள முஸ்லிம்கள் உயரிய இந்த வழி-முறையைக் கடைப்பிடிப்பது கடமையாகும். கடன் பெற்று அந்தக் கடனைப் பின்னர் நிறைவேற்றலாம் என்ற நிலையில் இருப்போரும் அதனை நிறைவேற்றலாம்.

ஒட்டகத்திலும் மாட்டிலும் ஏழுபேர் கூட்டுச் சேரலாம், ஒரு ஆட்டை ஒருவர் மாத்திரமே கொடுக்கலாம். இதில் ஹஜ் செய்வோருக்கும் வெளி நாடுகளில் வசிப்போருக்கும் ஒரே சட்டமே!

பின்வரும் ஹதீஸ் இதனை உறுதி செய்கின்றது.

عَن جابر رضي الله عنه قالَ: «نحرنا مَعَ رَسُول الله – ﷺ – بِالحُدَيْبِية البَدنَة عَن سَبْعَة والبَقَرَة عَن سَبْعَة». أخرجه مُسلم وأصْحاب «السّنَن» الأرْبَعَة.

இறைத் தூதர் முஹம்மது நபி (ﷺ) அவர்களோடு ஹுதைபியாவில் நாம் ஒட்டகத்தில் ஏழு பேரும், மாட்டில் ஏழு பேரும் கூட்டுச் சேர்பவர்களாக இருந்தோம் என ஜாபிர் பின் அப்தில்லாஹ் (ரழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்.
(நூல்கள் : முஸ்லிம் மற்றும் நான்கு சுனன் கிரந்தங்கள்)

நபி (ﷺ) அவர்களின் காலத்தில் துல்ஹஜ் பிறை பத்திலும், அதைத் தொடர்ந்தும் இக்கடமை நிறைவேற்றப் பட்டுள்ள காரணத்தால் அதற்கு முன்னர் நிறைவேற்றுவது கூடாது.

ஹஜ் கடமைகளுக்கிடையில் உள்ள பிரதான வேறுபாடுகள்

கடமைகள் பற்றிய விபரம்	**‘முதமத்தி.:.’** என்பவர் ‘தமத்துஃ’ முறையில் உம்ராவை முடித்து பின் ஹஜ்ஜை செய்பவர்.	**‘காரின்’** என்பவர் ஹஜ்ஜையும் உம்ராவையும் சேர்த்துச் செய்பவர்.	**‘மு.:.ப்ரித்’** என்பவர் ஹஜ்ஜை மாத்திரம் செய்பவர்.
கடமையான தவா; பின் எண்ணிக்கை 02	இரண்டில் ஒன்று உம்ராவுக்கானது. மற்றையது ஹஜ்ஜிக்கான தவாஃபுல் இஃபாழாவாகும்.	தவாஃபுல் இஃபாழா மாத்திரம் செய்வார்.	தவாஃபுல் இஃபாழா மாத்திரம் செய்வது கடமை.
கடமையான ஸ; யின் எண்ணிக்கை 02	இரண்டில் ஒன்று உம்றாவுக்கும், மற்றையது ஹஜ்ஜின் இஃபாழாவுக்கானது.	ஒரு ஸஃய் கடமையாகும் அதனை தவாஃபுல் குதூம் உடனோ அல்லது இஃபாழாவுடனோ செய்யலாம்.	ஒரு ஸஃய் கடமையாகும் அதனை தவாஃபுல் குதூம் உடனோ அல்லது இஃபாழாவுடனோ செய்யலாம்.
ஹத்ய்	கட்டாயமானது.	கட்டாயமானது.	கடமையில்லை.



43 குர்பானி, ஹத்ய், ஃபித்யா

மேற்படி சொற்பிரயோகங்கள் ஹஜ் வணக்கத்தோடும், ஹஜ் பெருநாள் உழ்ஹிய்யாவோடும் தொடர்புபடுத்திப் பேசப் படும் குர்பானி வகை சார்ந்த சொற்பிரயோகங்களாகும்.

மக்கா ஹரம் பள்ளியைச் சுற்றி வாழ்கின்ற ஏழை எளிய மக்களின் பசியைப் போக்கும் நோக்கில் ஆடு, மாடு, ஒட்டகம், ஆகிய கால்நடைகளை அல்லாஹ்விடம் நன்மையை எதிர்பார்த்தும் அவனது நெருக்கத்தை வேண்டியும் ஹரம் எல்லைக்குள் அறுத்துப் பலியிடப்படும் பலி முறையை இது குறிக்கின்றது.

தமத்துஃ அடிப்படையில் ஹஜ் கடமையை நிறை வேற்றும் ஒருவர் மீதும் அதில் பேண வேண்டிய வாஜிபுகளை விட்ட தவறின் அடிப்படையிலும் அதனை ஒருவர் வழங்க வேண்டும் என்பது ஷரீஆவின் சட்டமாகும்.

இது ஆடு, மாடு, ஒட்டகம் என்பவற்றிலிருந்து வழங்கப் படும். அதிலிருந்து அவரும் உண்ணுவதோடு, புனித ஹரம் பள்ளியைச் சூழ வாழ்கின்ற ஏழைகளுக்கும் விநியோகிக்க வேண்டும். இதனை நமது மக்கள் 'ஃபித்யா', 'குர்பானி' என அழைத்தாலும் 'ஹத்ய்' என அழைப்பதே பொருத்தமாகும்.
(பார்க்க: அல்மாயிதா: 95, அல் பகரா: 196)

இது ‘ஹத்ய் வாஜிப்’, ‘ஹத்ய் ததவ்வுஃ’ என இரு வகைப்படும்.

‘**ஹத்ய் வாஜிப்**’ என்பது, ஒருவர் தமத்துஃ அல்லது கிரான் அடிப்படையில் ஹஜ் செய்தாலோ அல்லது தனது உம்றாவில் கடமையான சாதாரண வாஜிபுகளில் எதையாவது ஒன்றை விட்டு விடுவதினாலோ, அல்லது வாஜிபான ஒன்றை விட நிர்ப்பந்திக்கப்பட்டாலோ அதற்காகக் கொடுக்கப்படும் பலிப் பிராணி ஆகும். இது மக்காவிலும், அதைச் சூழவுள்ள பகுதிகளிலும் விநியோகிக்க வேண்டும் என்பது முன்னர் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

‘**ஹத்ய் ததவ்வு.:**’ என்பது, மக்காவில் தான் விரும்பும் பலிப் பிராணியை அல்லாஹ்வுக்காக அறுத்து தானும் உண்ணு-வதோடு, அங்குள்ள ஏழைகளுக்கும் விநியோகிப்ப தாகும். இதனை எங்கும் அறுத்துப் பலியிடலாம். மக்காவில் கொடுப்-பதால் அதிகமான நன்மைகளைப் பெறலாம்.

ஹஜ்ஜில் ஒருவர் நோன்பு, ஸதகா, குர்பான் போன்ற பரிகார முறைகளால் தனது தவறுகளிலிருந்து விலகி விடுபடுவதற்காக மேற்படி வழிமுறைகள் தரப்பட்டுள்ளன.

குர்பானி என்பது கால்நடைகளை ஹஜ் பெருநாள் தொழுகையோடு கொடுப்பதை முஸ்லிம் மக்கள் வழக்காக்கிக் கொண்டதையும், ஹஜ்ஜில் அறுக்கப்படும் பலிப்பிராணிகளை யும் பொதுவாகக் குறிக்கும்.

ஹலாலாக்கப்பட்ட எந்த குர்பானி மாமிசங்களையும் நாமும் உண்ணவும், ஏழைகளுக்கு வழங்கவும் மார்க்கம் வலியுறுத்தியதாகும். இதில் முஸ்லிம் அல்லாத அண்டை அயலவர்களுக்கும் மனமுவந்து கொடுத்து மகிழ்வதில் மார்க்கம் தாராள அனுமதியை வழங்கியுள்ளதைக் கவனத்திற் கொள்ள வேண்டும். (பார்க்க – அல்குர்ஆன் 22:28)

ஃபித்யாவின் வகைகள்:

ஃபித்யாவின் அடிப்படையில் இஹ்ராமில் தடுக்கப்-பட்டவை நான்கு வகைப்படும்.

(1) திருமண ஒப்பந்தம் செய்தல்.

அதற்கு ஃபித்யா அவசியம் இல்லை. ஆனால் அந்த செயல் இஹ்ராத்தின் போது ஹராமாக்கப்பட்டுள்ளது.

(2) கண்டிக்கப்பட்ட செயலைச் செய்தமைக்கு கடுமையாக்கப்பட்ட ஃபித்யா.

அதாவது கல்லெறிதல், தலையை மழித்தல், தவாபோடு ஸஃய் செய்தல் ஆகிய மூன்று கடமைகளில் இரண்டைச் செய்வதால் அவருக்கு மனைவியோடு உடலுறவு கொள்வதைத் தவிர மற்ற அனைத்தும் ஹலாலாகும். இது முதலாவது தஹல்லுல் எனக் கூறப்படும்.

இவர் மூன்றில் இரு கடமைகளைச் செய்வதற்கு முன்னால் மனைவியோடு குடும்ப உறவில் ஈடுபடுவது கடுமையான குற்றமாகும். அதற்கான ஃபித்யாவாக ஒரு ஒட்டகம் கடமையாகும்.

(3) ஒரு மிருகத்தை வேட்டையாடியமைக்கானது.

அதற்காக அது போன்ற மதிப்புள்ள ஒட்டகம், ஆடு, மாடு ஏதாவது ஒன்று அல்லது அதற்கு ஈடானது ஃபித்யாவாக விதிக்கப்பட்டுள்ளது.

(4) தொல்லை தரும் பேன், பொடுவுக்காக தலை முடியை மழித்தமைக்கானது.

இதன் ஃபித்யாவாக மூன்று நாட்கள் நோன்பு நோற்பது அல்லது ஆறு ஏழைகளுக்கு உணவளிப்பது அல்லது ஒரு ஆட்டை அறுத்து பலியிடுவது ஆகிய மூன்றில் ஏதாவது ஒன்றைச் செய்தல்.

அதே வேளை இஹ்ராம் அணியாமல் மீகாத் எல்லையைக் கடப்பதால் ஒரு ஆட்டை ஃபித்யாவாக வழங்க வேண்டும்.



தொழுகையை நிறைவேற்றல் :—

ஹாஜி ஒருவர் மினாவில் தங்குகின்ற காலங்கள் ஐவேளை தொழுகைகளில் சுருக்க முடியுமான லுஹர், அஸர், இஷா ஆகிய தொழுகைகளை சுருக்கியும், சுபஹ், மஹ்ரிப் ஆகிய தொழுகைகளை சுருக்காமல் உரிய நேரத்தில் தொழுதல்.

கல்லெறிதல்: சூரியன் உச்சியில் இருந்து சாய்ந்த பின் முதலாவதாக **"ஜம்ரதுஸ் ஸுஃரா"** விற்கும், இரண்டாவதாக **"ஜம்ரதுல் உஸ்தா"** விற்கும் மூன்றாவதாக **"ஜம்ரதுல் குப்ரா"** விற்கும் தலா ஏழு கல் விகிதம் மொத்தம் இருபத்தி ஒரு சுண்டிவிடும், கொண்டக் கடலை அளவான கற்களைக் கொண்டு எறிய வேண்டும். அதாவது மினாவுக்கு நெருக்கமாக உள்ள ஜம்ராவிலிருந்து ஆரம்பித்தல்.

எறியும் முறை:

- **"அல்லாஹு அக்பர்"** எனக் கூறி ஒன்றன் பின் ஒன்றாக எறிதல்.
- மினாவிலிருந்து போகும் போது முதலாவது இருக்கும் "ஜம்ரத்துஸ் ஸுஃரா" விற்கு கல் எறிந்ததும் ஜம்ராவை தனக்கு இடது பக்கமாகவும் மினாவை வலதுபக்கமும் ஆக்கி இரு கைகளையும் உயர்த்தி, கிப்லாவை முன்னோக்கியவாறு நீண்ட நேரம் பிரார்த்தித்தல்.

- "ஜம்ரத்துல் உஸ்தா" விற்குக் கல்லெறிந்ததும் அதை விட்டும் சற்று இடது பக்கமாக நகர்ந்து, ஜம்ராவை வலதாகவும் மினாவை இடதாகவும் ஆக்கி இரு கைகளையும் உயர்த்தியவாறு கிப்லாவை முன்னோக்கி நின்றவாறு மீண்டும் நீண்ட நேரம் பிரார்த்தித்தல்.

பின்வரும் படங்களை சற்று அவதானியுங்கள்,



பழைய ஜம்ராத்தின் அமைப்பு



புதிய ஜம்ராத்தின் அமைப்பு

குறிப்பு :

மக்காவிற்கு நெருக்கமாக இருக்கும் "ஜம்ரத்துல் குப்ரா" விற்கு கல் எறிந்ததும் திக்ர், பிரார்த்தனை எதுவும் இன்றி திரும்பி விடுதல்.

இங்கு நல்லதுதானே என நினைத்து திக்ர், துஆக்கள் செய்வது நபிவழிக்கு நேர் முரணான வழியாகும்.

இக்கடமையினை துல்ஹஜ் 11,12, ஆகிய இரண்டு நாட்களில் கட்டாயம் நிறைவேற்ற வேண்டும். 13ம் நாளன்று விரும்பினால் கல்லெறிந்தோ, எறியாமலோ நாடோ, வீடோ திரும்பலாம் என்பதை பின்வரும் அல்குர்ஆன் வசனத்தின் மூலம் அறியலாம்.

...فَمَنْ تَعَجَّلَ فِيْ يَوْمَيْنِ فَلَآ اِثْمَ عَلَيْهِ ۚ وَمَنْ تَاَخَّرَ فَلَآ اِثْمَ عَلَيْهِ ۙ لِمَنِ اتَّقٰى ؕ....
(البقرة : ٢٠٣)

யார் குறித்த தினங்களுக்குள் (முடித்து) அவசரமாகச் செல்கிறாரோ அவர்மீதும் குற்றமில்லை. (மேலதிக) இறையச்சமுடையவர் இருதினங்கள் (கழிந்த பின்பு) தாமதித்தாலும் அவர்மீதும் குற்றமில்லை. (அல்பகரா : 203)



45

அய்யாமுத் தஷ்ரீக் நாட்களில் நோன்பு நோற்கலாமா?

துல் ஹஜ் பிறை 11, 12, 13 ஆகிய நாட்கள் 'அய்யாமுத் தஷ்ரீக்' எனக் கூறப்படும். இவற்றை மினாவுடைய நாட்கள் என்றும் கூறப்படும். இந்த நாட்களில் நோன்பு நோற்பது பற்றி பொதுவாக தடை செய்யப்பட்டுள்ளது.

عَنْ نُبَيْشَةَ الْهُذَلِيِّ رَضِيَ اللهُ عَنْهُ قَالَ قَالَ رَسُولُ الله صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ أَيَّامُ التَّشْرِيقِ أَيَّامُ أَكْلٍ وَشُرْبٍ (أخرجه مسلم)

"அய்யாமுத் தஷ்ரீக் உடைய நாட்களானது உண்டு, பருகி (மகிழும்) நாட்களாகும் என நபிகள் நாயகம் (ﷺ) அவர்கள் கூறியுள்ளார்கள்." (நூல்: முஸ்லிம்)

இருப்பினும், "ஹத்ய்" எனப்படும் பலிப்பிராணி கொடுக்க வேண்டியவர்கள் அதற்கான வசதிகளைப் பெறாத போது மேற்படி நாட்களில் நோன்பு நோற்க சலுகை அளிக்கப் பட்டுள்ளது.

بَاب صِيَامِ أَيَّامِ التَّشْرِيقِ وَقَالَ لِي مُحَمَّدُ بْنُ الْمُثَنَّى حَدَّثَنَا يَحْيَى عَنْ هِشَامٍ قَالَ أَخْبَرَنِي أَبِي كَانَتْ عَائِشَةُ رَضِيَ اللهُ عَنْهَا تَصُومُ أَيَّامَ التَّشْرِيقِ بِمِنًى وَكَانَ أَبُوهَا يَصُومُهَا (أخرجه البخاري)

"அன்னை ஆயிஷா (رضي الله عنها) அவர்கள் அய்யாமுத் தஷ்ரீக் நாட்களில் மினாவில் நோன்பு நோற்பவர்களாக இருந்தார்கள்,

அவரது தந்தை (அபூபக்கர்) அவர்களும் அவற்றில் நோன்பு நோற்பார்கள்." (நூல்: புகாரி)

عَنْ ابْنِ عُمَرَ رَضِيَ اللهُ عَنْهُما قَالَ : لَمْ يُرَخَّصْ فِي أَيَّامِ التَّشْرِيقِ أَنْ يُصَمْنَ إِلَّا لِمَنْ لَمْ يَجِدْ الْهَدْيَ (أخرجه البخاري)

"ஹத்ய்" எனப்படும் பலிப்பிராணி கொண்டு வராதவர்களுக்கே அன்றி மற்றவர்களுக்கு அய்யாமுத் தஷ்ரீக் நாட்களில் நோன்பு நோற்பதற்கு சலுகை அளிக்கப்படவில்லை என இப்னு உமர் (ﭬ) அவர்கள் அறிவிக்கின்றார்கள்." (நூல்: புகாரி)

عَنْ ابْنِ عُمَرَ رَضِيَ اللهُ عَنْهُمَا قَالَ : الصِّيَامُ لِمَنْ تَمَتَّعَ بِالْعُمْرَةِ إِلَى الْحَجِّ إِلَى يَوْمِ عَرَفَةَ فَإِنْ لَمْ يَجِدْ هَدْيًا وَلَمْ يَصُمْ صَامَ أَيَّامَ مِنًى (أخرجه البخاري)

தமத்துஃ முறையில் ஹஜ் செய்பவர் அரஃபா தினம் வரை நோன்பு நோற்பார். அவர், ஹத்ய் (பலிப்பிராணியை) பெற்றுக் கொள்ளாமலும், நோன்பு நோற்காமலும் இருப்பாராயின் அவர் மினாவுடைய நாட்களில் நோற்றுக் கொள்வார் என இப்னு உமர் (ﭬ) அவர்கள் குறிப்பிடுகின்றார்கள். (நூல்: புகாரி)

அதாவது இந்த நாட்களில் நோன்பு நோற்பது கூடாது என்ற தடை பாரதூரமற்ற தடை என்பதுடன் மேற்படி நாட்களில் நோன்பு நோற்பது இவ்வாறானதொரு நிலையில் சலுகை–யளிக்கப்பட்டுள்ளது என்பது இதன் பொருளாகும்.



துல் ஹஜ் 12 ஆம் நாள் கல்லெறிந்து முடிந்ததும் சூரியன் மறைவதற்கு முன்னால் மினாவிலிருந்து ஹாஜிகள் வெளியேறிவிட வேண்டும். இது தவறும் பட்சத்தில் மினாவில் தங்கி மறுநாள் பகல் கல்லெறிந்த பின்பே வெளியேற வேண்டும் என்பது சட்டமாகும்.

وَحَدَّثَنِي عَنْ مَالِك عَنْ نَافِعٍ أَنَّ عَبْدَ اللهِ بْنَ عُمَرَ كَانَ يَقُولُ مَنْ غَرَبَتْ لَهُ الشَّمْسُ مِنْ أَوْسَطِ أَيَّامِ التَّشْرِيقِ وَهُوَ بِمِنًى فَلَا يَنْفِرَنَّ حَتَّى يَرْمِيَ الْجِمَارَ مِنْ الْغَدِ (أخرجه مالك فى الموطأ)

“யார் ஒருவர் மினாவில் தங்கி இருக்கும் வேளை சூரியன் மறைந்து விடுகின்றதோ அவர் மறுநாள் கல்லெறிகின்ற வரை அங்கிருந்து செல்ல வேண்டாம் என அப்துல்லாஹ் பின் உமர் (ரழி) அவர்கள் குறிப்பிடுகின்றார்கள்.”
(முவத்தா மாலிக்).

மேற்படி தீர்ப்பின் பிரகாரம் ஹாஜிகள் நடந்து கொள்ளல் வேண்டும்.

தவா.்.புல் வதா:

“ஹஜ்” கடமை முடிந்து தமது நாடுகளுக்கு அல்லது பிரதேசங்களுக்கு திரும்புவோர் “தவாபுல் வதாஃ” என்ற இறுதித் தவாஃப் செய்வது கடமையாகும்.

ஹஜ் செய்யும் பெண்களுக்கு மாதவிடாய் போன்ற உபாதைகள் ஏற்படுவது இயல்பானதாக இருந்தாலும், அது ஹஜ்ஜின் சில கிரிகைகள் செய்வதற்கு தடையாக அமையும் என்பதை முன்னர் சுட்டிக்காட்டி இருந்தோம். அவ்வாறு ஏற்படும் பெண்கள் 'தவாஃபுல் வதா' செய்யாமலிருக்க மார்க்க சட்டம் தளர்த்தப்பட்டுள்ளது.

أمر الناس أن يكون آخر عهدهم بالبيت إلا أنه خفف عن المرأة الحائض .

(أخرجه البخاري)

இவ்வாலயத்துடன் மக்களின் இறுதி உடன்படிக்கை (துவாபுல் வதாவினால்) அமையப் பெறல் வேண்டும். என்றாலும் மாதவிடாய் ஏற்பட்ட பெண்களுக்கு அதை (செய்யாது) விடுவதில் சலுகை அளிக்கப்பட்டு தளர்த்தப்பட்டுள்ளது என நபிகள் நாயகம் (ﷺ) அவர்கள் கூறியதாக இப்னு அப்பாஸ் (رضي الله عنه) அவர்கள் அறிவிக்கின்றார்கள். (நூல்: புகாரி)

அன்னை ஆயிஷா (رضي الله عنها) அவர்கள் கூறுகிறார்கள். ஸபிய்யா (رضي الله عنها) அவர்களுக்கு மாதவிடாய் ஏற்பட்டது பற்றி நபி (ﷺ) அவர்களிடம் நான் எடுத்துக் கூறினேன். அவள் எம்மை (குறித்த நேரத்தில் பயணம் செய்ய விடாது) தடுத்துவிடுவாரோ? என நபி (ﷺ) அவர்கள் கேட்டார்கள். அதற்கு "ஸபிய்யா அவர்கள் ஏற்கனவே "தவாஃபுல் இஃபாழா"வை முடித்து விட்டார்கள்" என நபி (ﷺ) அவர்களிடம் கூறப்பட்டது. "அப்படியானால் பிரச்சினை இல்லை". எனக் கூறினார்கள்.
(நூல்: புகாரி)

எனவே, ஹஜ் கடமையை நிறைவு செய்து விட்டு நாடு திரும்புவோர் அல்லாஹ்வின் ஆலயத்தை ஏழு தடவை சுற்றி வர வேண்டும். எனினும் தவாபுல் வதா செய்யவிருக்கும் ஒரு பெண்ணுக்கு மாதவிடாய் ஏற்பட்டால் அவர் அத்தவாஃபை செய்யாது நாடு திரும்பலாம்.

ஆனால், "தவாபுல் இபாழா" எனப்படும் ஹஜ்ஜின் மிகப் பெரும் கடமைகளில் ஒன்றான தவாஃபை செய்வதற்கு முன்னர் ஏற்படுமாயின் அவள் தூய்மை ஏற்படும் வரை அதற்காகக் காத்திருந்து அந்தக் கடமையை முடிக்க வேண்டும்.

நிர்ப்பந்தம் எனக் கூறி மாதவிடாயுடன் தவாஃப் செய்யக் கூடாது அல்லவா! அவ்வாறே தவாஃபுல் இபாழா செய்யாமல் நாடு திரும்புவதால் அவரது ஹஜ் பாழாகிவிடும் என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.



சரித்திர முக்கியத்துவம்வாய்ந்த
குபா மஸ்ஜித் - மதீனா



47 தாயிஃப் நகரும் அதற்கான பயணமும்

தாயிஃப் தற்போதைய சவூதி அரேபியாவின் முக்கிய நகர்களில் ஒன்றாகும். மக்காவில் இருந்து கிட்டத்தட்ட 125 கி.மீ. தொலைவில் இந்நகரம் அமைந்துள்ளது.

கர்னுல் மனாஸில் – அஸ்ஸைலுல் கபீர் எனும் பெயரில் உள்ள மீகாத் எல்லையின் அமைவிடமும் தாயிஃப் ஆகும். அதிக நீரேந்து பகுதியாக இந்நகரம் விளங்குவதால் அதற்கு பாரிய வெள்ள அனர்த்த நகரம் என்ற பொருளில் அஸ்ஸைலுல் கபீர் என்ற பெயர் வந்திருக்கலாம். தண்ணீர் சுற்றிச் சுழன்று ஓடைகள், கால்வாய்கள், கணவாய்கள் வழியாக வழிந்தோடுவதாலும் தாயிஃப் <u>(சுற்றிச்/ சுழலக் கூடியது)</u> என அழைக்கப்படுவதாக சில புவியியல் ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

இந்நகரம் ஜாஹிலிய்யா காலத்தில் மக்காவிற்கு அடுத்த நிலையில் மதிக்கப்பட்ட இரண்டாவது நகரமாகும். இந்தக் குர்ஆன் இரு பெரும் நகரங்களில் உள்ள யாராவது மதிப்புமிக்க ஒரு மனிதர்மீது இறக்கியருளப்பட்டிருக்க வேண்டாமா? என அவர்கள் கூறினர். (அத்தியாயம்: அஸ்ஸுக்ருஃப்: 31) என வரும் இறை மறை வசனத்தில் ஒன்று மக்கா மற்றையது தாயிஃப் என அறிஞர்கள் விளக்கமளிக்கின்றனர்.

அங்குதான் ஹவாஸின், பனூ ஸகீஃப், பனூ ஸஃத் மற்றும் பனூஅம்று, பனுமாலிக் போன்ற கோத்திரங்கள்

வாழ்ந்து வந்தனர். ஹிஜ்ரி எட்டில் நடை பெற்ற ஹுனைன் போர் இங்குதான் நடை பெற்றது. நபி (ﷺ) அவர்கள் சிறு பருவத்தில் இந்த நகரில் வாழ்ந்து வந்த அன்னை ஹலீமத்துஸ் ஸஃதிய்யா என்ற பெண்ணிடம் பால் குடித்துள்ளார்கள்.

இஸ்லாமிய பிரச்சாரத்தின் நிமித்தமாக நபி (ﷺ) அவர்கள் தனது வளர்ப்பு மகன் ஸைத் பின் ஹாரிதாவுடன் மீண்டும் அங்கு சென்றிருக்கின்றார்கள். ஸகீஃப் கோத்திரத்தின் லாத்து மற்றும் உஸ்ஸா உள்ளிட்ட சிலைகள் இங்குதான் வணங்கப்பட்டு வந்தன.

சிலைகளை வணங்கிய மக்களைத் தடுத்து அல்லாஹ்வை வணங்கிட அழைப்பு விடுக்கவே அல்லாஹ் வின் தூதர் அவர்கள் அங்கு சென்றிருந்தார்கள். தாயிஃப் நகரின் பிரச்சாரம் ஆரம்பமாக வெற்றியளிக்க வில்லை. மாற்றமாக அங்கு வாழ்ந்த இணைவைப்பாளர்களால் நபி (ﷺ) அவர்கள் இரத்தம் பீறிட்டுப் பாய்ந்து ஓடுமளவு கடுமையாக தாக்கப்பட்டார்கள்.

நபி (ﷺ) அவர்களின் மீது விழும் கற்களைத் தடுக்கும் அரணாக ஸைத் பின் ஹாரிஸா (رضي الله عنه) அவர்கள் தனது கை, உடல், தலை போன்ற உறுப்புக்களை கேடயமாக மாற்றி செயற்பட்டது பற்றி நம்மில் எத்தனை பேர் அறிவோம்?

நபி (ﷺ) அவர்கள் சோகத்துடன் அங்கிருந்து வெளியேறி "கர்னுஸ் ஸஆலிப்" என்ற இடத்தை வந்தடைந்தார்கள். தாயிஃப் மக்களை முழுமையாக ஒழித்துக்கட்ட உங்கள் உத்தரவு மட்டுமே எமக்கு தேவை என மலைகளுக்குப் பொறுப்பான வானவர் வேண்டிய போது :

فَقَالَ النَّبِيُّ صلى الله عليه وسلم بَلْ أَرْجُو أَنْ يُخْرِجَ اللهُ مِنْ أَصْلاَبِهِمْ مَنْ يَعْبُدُ اللهَ وَحْدَهُ لاَ يُشْرِكُ بِهِ شَيْئًا. (أخرجه البخاري)

“வேண்டாம், அல்லாஹ்வை ஒருமைப்படுத்தி, அவனுக்கு எந்த ஒன்றையும் இணையாக்காதவர்களை அவர்களின் எதிர்கால சந்ததிகளில் இருந்தாவது நான் எதிர்பார்க்கின்றேன் (மன்னிப்போம் அவர்களை)” என மன்னித்தார்கள் அண்ணல் நபி (ﷺ) அவர்கள். (நூல் புகாரி)

உஹுத் போரில் இறைத்தூதர் (ﷺ) அவர்கள் நையப் புடைக்கப்பட்டார்கள். அவர்களின் முன் பல் உடைந்து முகத்தில் பாய்ந்த அம்புக் காயத்தினால் இரத்தம் பீறிட்டுப் பாய்ந்தது. அல்லாஹ்வின் தூதரே! உஹுதுப் போர் துக்க நிகழ்வை விட நீங்கள் உங்கள் வாழ்க்கையில் துன்பங்களை அனுபவித்தீர்களா? என அன்னை ஆயிஷா (ரழி) அவர்கள் கேட்ட போது, ஆம் எனக் கூறி தாயிஃப் நகரத்தில் தனக்கு இழைக்கப்பட்ட கொடுமையை விபரித்தார்கள். (நூல்: புகாரி)

இது தாயிஃபில் அவர்கள் கடுமையாகத் துன்புறுத்தப் பட்டதை உணர்த்துகின்றது.

வணங்கி வழிபடத் தகுதியானவன் அல்லாஹ் ஒருவனைத் தவிர வேறு யாரும் இல்லை என உணர்த்தும் பொருளை மக்கா, தாயிஃப் காஃபிர்கள் விளங்கியதால்தான் தாம் வணங்கி வரும் வத்து, சுவா, யகூத், யவூக், நஸ்ர் போன்ற நூஹ் நபி கால நல்லடியார்கள் தமது இறை இடைத் தரகர்களாக முடியாது என்பதை முஹம்மத் (ﷺ) கூற வருவதை விளங்கி எதிர்த்தார்கள். நமது மக்கள் ஸாலிஹான மக்களை சமாதிகளில் இடைத் தரகர்களாக்கிக் கொண்டு கலிமாவையும் மொழிந்து விபரமற்ற மறைவான இணை வைப்பாளர்களாக வாழ்கின்றனர்.



48 தாயிஃப் செல்வது அனுமதியே அன்றி நபிவழி கிடையாது

ஹஜ் செய்பவர்கள் வியாபாரம் செய்வது அனுமதிக்கப் பட்டது போன்று சவுதியின் புற நகர்களுக்கு சென்றுவருவது அனுமதிக்கப்பட்டதாகும். அது நபி வழி கிடையாது.

இருப்பினும் ஹஜ் மற்றும் உம்ரா கடமைகள் முடித்து, மீண்டும் ஒரு உம்ரா செய்தல், வரலாற்று இடங்களைப் பார்வையிடல் போன்ற காரணங்களின் பெயரில் ஹாஜிகளை அவர்களது செலவில் தாஃயிஃப் நகரம் நோக்கி அழைத்துச் செல்கின்ற புதியதொரு நடைமுறை ஹஜ் மற்றும் உம்ரா முகவர்களிடம் பரவி வருவதை அவதானிக்க முடிகின்றது.

இந்த நடைமுறை இறைத்தூதரின் வழிமுறையுடன் எவ்வளவு தூரம் உடன்பாடானது அல்லது முரண்பாடானது என்பது பற்றிய தெளிவு ஹஜ், உம்ராச் செய்வோர் பெற்றிருப்பது அவசியமானதாகும்.

ஏனெனில், நபித்தோழர்களோ, அவர்களின் வழி வந்த தாபியீன்களோ இவ்வாறு வெளிப் பயணம் சென்று மீண்டும் ஒரு புதிய உம்ராவைச் செய்தனர் என்பதை நாம் தேடிப் பார்த்தவரை ஆதாரமாகக் கொள்ள முடியுமான சான்றுகள் எதுவும் கிடைக்கவில்லை .

அதனைக் கவனத்தில் கொண்டே இது பற்றி எழுதுகின்றோமே தவிர இரண்டாவது உம்ராவைத் தடுக்க வேண்டும் என்ற நோக்கில் அல்ல என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

இந்தப்பயணத்தில் மௌலவி சகோதரர்கள் தாராளமாக பொய்யுரைக்கின்றனர். அவற்றில் சில கீழே பட்டியலிடப்படுகின்றன.

1. நபி (ﷺ) அவர்கள் தாயிஃபில் இஸ்லாமிய பிரச்சாரம் செய்தபோது அவர்கள் மீது உருட்டிவிடத் திட்டமிடப்பட்ட ராட்சத கற்பாறையானது குறித்த இடத்தை விட்டும் நகராது இருந்ததாகக் கூறப்படும் கப்ஸா,

2. பிலால் (رضي الله عنه) அவர்கள் பாங்கு ஒலித்த இடமாக அடையாளப்படுத்தப்படும் பொய்யான அற்புத இடம்.

3. நபி (ﷺ) அவர்கள் மீது ஒரு பெண் குப்பை கொட்டிய இடமாக அடையாளப்படுத்தப்படும் மற்றொரு இடம்.

4. நபி (ﷺ) அவர்கள் தாயிஃபில் இஸ்லாமிய பிரச்சாரம் செய்ததன் பின்னணியில் மக்களால் துன்புறுத்தப்பட்ட போது (உண்மை. ஆனால்) அத்தாஸ் என்ற மனிதர் புகலிடம் கொடுத்தாகக் புனையப்பட்ட செய்தியும், காண்பிக்கப் படும் தோட்டமும் பழைய வீடும்.

5. இக்ரிமா (رضي الله عنه) அவர்கள் தொடர்பாகவும் அவர்கள் புகலிடம் கோரி ஒளிந்து கொண்டதாகவும் கூறப்படும் மற்றொரு கப்ஸாவும் அணைக்கட்டும் என இப்படிப் பல ஆதாரமற்ற செய்திகள்.

குறிப்புகள்:

1. தாயிஃபில் நபித்தோழர் அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் (இப்னு அப்பாஸ் (ﷺ) அவர்கள் பேரில் நிர்மாணிக்கப்பட்ட பள்ளிவாயில், மற்றும் அவர்கள் பேரில் இயங்கி வரும் நூலகமும் அவர்கள் தனது இறுதி காலத்தில் மக்காவில் இருந்து இடம் பெயர்ந்து அங்கு வாழ்ந்து மரணித்தார்கள் என்பதை உறுதி செய்யும் வரலாற்றுச் சான்றாகவும் அவர்களின் அறிவையும் ஸஹாபாக்களின் பண்பையும் கண்ணியப்படுத்தும் நோக்கில் உருவாக்கப்பட்டதாகும். அவர்கள் அடங்கப்பட்டுள்ள குறித்த இடம் மக்கள் பார்வையை விட்டும் மறைக்கப்பட்டுள்ளது.

2. நபி (ﷺ) அவர்கள் தனது வாழ்நாளில் நான்கே நான்கு தடவைகள் மாத்திரம் உம்ராக்கள் செய்துள்ளதாகவே ஹதீஸ்களில் காண முடிகின்றது. அதிகப்படியான உம்ராக்கள் செய்ய வேண்டும் என்ற வழிமுறை இருந்திருப்பின் இறைத் தூதர் அவர்களே இது பற்றிக் காட்டித் தந்திருப்பார்கள். (அல்லாஹ்வே மிக அறிந்தவன்)

எனவே, பல உம்ராக்கள் செய்வதை விடுத்து அதிகமான தவாஃப்கள் செய்து நமது ஹஜ் மற்றும் உம்ரா கடமைகளை நபிவழியில் நிறைவேற்றிட முயற்சிப்போமாக.

இருப்பினும் பொதுவான சில ஆதாரங்களை முன் நிறுத்தி சில அறிஞர்கள் ஒரு பயணத்தில் பல உம்ராக்கள் செய்வதை ஆகுமானதாகக் காண்பதை நாம் இரண்டாம் நிலைக் கருத்தாகவும் ஒரு பயணத்தில் பல தவாஃப்கள், ஒரு உம்ரா என்பதை வலியுறுத்தும் முன்னோர்களான அறிஞர்களின் கூற்றையும் சரிகாண்கிறோம். ஹஜ், மற்றும் உம்ரா கடமைகள் முடிந்ததும் இரண்டாவது உம்ரா செய்யும் வழிமுறை நாம் தேடிப்படித்தவரை நபிவழியில் வந்ததாக நாம் அறிய முடியவில்லை. (அல்லாஹ்வே மிக அறிந்தவன்)



49 இரண்டாவது உம்றா பற்றி இமாம் இப்னுல்கையிம் (ரஹ்) அவர்கள்

இஸ்லாமிய உலகில் மிகப்பெரும் சிந்தனையாளராக அறியப்பட்ட இமாம் இப்னுல் கைய்யிம் (ரஹ்) அவர்கள் இரண்டாம் உம்ரா பற்றி முன்வைக்கின்ற பின்வரும் கருத்தை அவதானிக்கக் கடமைப்பட்டுள்ளோம்.

وَلَمْ يَكُنْ فِي عُمَرِهِ عُمْرَةٌ وَاحِدَةٌ خَارِجًا مِنْ مَكّةَ كَمَا يَفْعَلُ كَثِيرٌ مِنْ النّاسِ الْيَوْمَ وَإِنّمَا كَانَتْ عُمَرُهُ كُلّهَا دَاخِلًا إلَى مَكّةَ ، وَقَدْ أَقَامَ بَعْدَ الْوَحْيِ بِمَكّةَ ثَلَاثَ عَشْرَةَ سَنَةً لَمْ يُنْقَلْ عَنْهُ أَنّهُ اعْتَمَرَ خَارِجًا مِنْ مَكّةَ فِي تِلْكَ الْمُدّةِ أَصْلًا . فَالْعُمْرَةُ الّتِي فَعَلَهَا رَسُولُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ وَشَرَعَهَا ، هِيَ عُمْرَةُ الدّاخِلِ إلَى مَكّةَ ، لَا عُمْرَةُ مَنْ كَانَ بِهَا فَيَخْرُجُ إلَى الْحِلّ لِيَعْتَمِرَ وَلَمْ يَفْعَلْ هَذَا عَلَى عَهْدِهِ أَحَدٌ قَطّ إلّا عَائِشَةُ وَحْدَهَا بَيْنَ سَائِرِ مَنْ كَانَ مَعَهُ ، لِأَنّهَا كَانَتْ قَدْ أَهَلّتْ بِالْعُمْرَةِ فَحَاضَتْ فَأَمَرَهَا

(الإمام ابن القيم: زاد المعاد في هدي خير العباد)

நபிகள் நாயகம் (ﷺ) அவர்களின் உம்ராக்களில் ஒரு உம்ராவேனும் மக்காவிற்கு வெளியில் சென்று (மீண்டும் திரும்பி வந்து) மக்கள் இப்போது செய்வது போன்று (ஆயிஷா மஸ்ஜிதில் இருந்து) நிறைவேற்றியதற்கான ஆதாரங்கள் எதுவும் இல்லை. அவர்களின் உம்ராக்கள் அனைத்தும்

மக்காவிற்குள் நுழைகின்ற போது நிறைவேற்றப்பட்டதாகவே உள்ளன. மக்காவில் பதின்மூன்று ஆண்டுகள் வாழ்ந்தும் அங்கிருந்து வெளியில் சென்று ஒரு உம்ராவேனும் அவர்கள் செய்திருக்க வில்லை. நபி (ﷺ) அவர்கள் செய்ததும், மார்க்கமாக்கியதும் மக்காவிற்குள் பிரவேசிக்கின்ற போது நடைமுறையில் உள்ள உம்ராவாகும். மாற்றமாக அங்கிருந்து வெளியேறி மீண்டும் ஒரு உம்ரா செய்யும் வழிமுறை அல்ல. அத்துடன் இவ்வாறு நபி (ﷺ) அவர்களின் காலத்தில் அன்னை ஆயிஷா (رضي الله عنها) அவர்களைத் தவிர வேறு யாரும் மக்காவை விட்டு வெளியேறி மீண்டும் ஒரு உம்ரா செய்யவில்லை. அன்னை ஆயிஷா (رضي الله عنها) அவர்கள் தனக்கு மாதவிடாய் ஏற்பட்டதன் காரணமாகவே அவ்வாறு செய்தார்கள்."

(இப்னுல் கையிம் ஸாதுல் மஆத்)

இக்கூற்றினை சுன்னாவிற்கும், சத்தியத்திற்கும் நெருக்கமான ஒரு கூற்றாகவே பார்க்கவேண்டி உள்ளது. எனவே இது பற்றி ஆழமாக சிந்தித்த பின்னர் உங்களின் இரண்டாவது உம்ரா பற்றிய முடிவிற்கு வாருங்கள். அல்லாஹ் அனைவரையும் பொருந்திக் கொள்வானாக!

குறிப்பு: துருக்கியர்கள் சவுதி அரேபியாவை ஆட்சி செய்த காலப் பகுதியில் இஸ்லாத்திற்கு உடன்பாடான மற்றும் முரண்பாடான பல விடயங்களை அரங்கேற்றி இருந்தனர். அவற்றில் மார்க்கம் எச்சரிக்கை செய்த கப்று வணக்கம் மற்றும் பித்அத்துக்கள் நன்மையின் பெயரால் அரங்கேற்றப்பட்டன.

போர்கள் நடைபெற்ற இடங்களில் நினைவுக்காக பல பள்ளிகள் கட்டுதல், கற்பனைக் கதைகள் உள்ளடங்கிய இடங்களில் சமாதி அமைத்தல் போன்ற பல அநாச்சாரங்களை அரங்கேற்றுதல் என்பன கப்று வணக்கத்தை ஆதரித்த உஸ்மானியர்களாலேயே இறைத் தூதரின் பூமியில் நடந்தேறின.



50 ஸியாரத் பற்றிய விளக்கம்

'ஸியாரத்துல் மகாபிர்" "மண்ணறைகளை தரிசித்தல்" என்பது நபிமொழிகளில் வலியுறுத்திக் கூறப்படும் உயர்ந்த வணக்கமாகும். சில போது அதனைத் தவறாகப் புரிந்து நடப்பதால் ஒருவரின் நன்மைகள் இல்லாது போவது மாத்திரமின்றி, அவரால் அங்கு செய்யப்படுகின்ற இணை வைப்புக்கள் சார்ந்த செயல்கள் காரணமாக அவரது அமல்களும் அழிந்து விடும்.

இணைவைப்பு மற்றும் பித்ஆ, முகஸ்துதிகள் கலக்கின்ற எந்த வணக்கமும் அல்லாஹ்வால் அங்கீரிக்கப் படுவதில்லை. எனவே, அந்த வணக்கம் தொடர்பாக சரியான தெளிவு நம்மிடம் காணப்படல் வேண்டும்.

ஸியாரத் என்பதன் பொருள்:

அரபு மொழியில் "ஸியாரத்" என்ற சொல் சந்தித்தல், தரிசித்தல் போன்ற பொருளில் மொழி மாற்றம் செய்யப் படுகிறது.

இஸ்லாமியக் கண்ணோட்டத்தில்: முஸ்லிம்களின் மண்ணறைகளை சந்தித்து நபிகள் நாயகம் (ﷺ) அவர்கள் கற்றுத் தந்த பிரார்த்தனையை மண்ணறைவாசிகளுக்காகக் கூறுவது ஸியாரத் என அழைக்கப்படுகின்றது.

ஒருவர் நாட்டில் உள்ள முஸ்லிம்களின் பொது அடக்கஸ்தலங்களுக்குச் சென்று அங்கு அடங்கப்பட்டவர்களுக்காக நபிமொழிகளில் வந்திருக்கும் ஸலாத்தைக் கூறி, அவர்களின் சுபீட்சமான மறுமை வாழ்விற்காக பிரார்த்திப்பது போன்று உலகெங்கும் காணப்படும் முஸ்லிம்களின் எந்த மண்ணறைகளுக்குச் சென்றாலும் அதனைக் கடைப்பிடிக்க வேண்டும். அதற்கென குறித்த தினம், நேரம் என்பது மார்க்கத்தில் வரையறை செய்யப்பட்டதாக நாம் அறிந்தவரை கிடையாது.

ஸியாரத் பற்றிய தவறான அணுகுமுறை:

ஸியாரத் என்ற பெயரில் சமாதிகளை வழிபடும் பலரே மக்கா, மதீனா சென்றால் மாத்திரம் ஸியாரத் பற்றி அதிகம் அலட்டிக் கொள்கின்றனர்.

மற்றும் சிலர் பெருநாள் தினங்களில் மாத்திரம் மண்ணறைகளைச் சந்திப்பதை வழிமுறையாகக் கொள்கின்றனர்.

வேறு சிலர், வெள்ளிக் கிழமை ஜும்ஆத் தினத்தன்று ஸியாரத் செய்வது சிறப்பான காரியம் என ஆதாரமின்றி மக்களைத் தூண்டுகின்றனர்.

மற்றும் ஒரு சாரார் ஹஜ்ஜுக்காகச் செல்வோர் மதீனாவிற்குச் சென்று இறுதித் தூதரின் சங்கைமிக்க மண்ணறையை சந்தித்துவிட்டு வரவில்லையானால் அவரது ஹஜ் செல்லுபடியற்றது என நபியின் மீது பொய்யாக புனைந்துரைக்கப்பட்ட படு பொய்யான, சோடிக்கப்பட்ட ஹதீஸ்களைக் கூறி மக்களை ஏமாற்றவும் செய்கின்றனர்.

ஹஜ் செய்பவர் பாசமிகு நபியின் மண்ணறையை தரிசிப்பது தொடர்பாக வந்துள்ள பொய்யான ஹதீஸ்களை

அடிப்படையாகக் கொண்டு ஸியாரத் பற்றி ஊக்குவிப்பதைத் தவறு என்கிறோமே தவிர ஸியாரத்தை அல்ல என்பதை தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

மேலே சுட்டிக்காட்டப்பட்ட நடைமுறைகள் நபித்தோழர் களிடம் காணப்படாத, இஸ்லாமிய நடைமுறைக்கு முரணான தாகும் என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

ஆகவே, நாம் நாட்டுக்குத் திரும்பிச் சென்றாலும் மண்ணறைகளைச் சந்தித்து, மங்கிப்போன இந்த நபிவழியை உயிர்ப்பிக்க நாம் முயற்சி செய்ய வேண்டும்.

இந்த சுன்னாவை உயிர்ப்பிப்பதால் மரணித்த மக்களிடம் தேவைகளை முன்வைக்கும் இணை வைப்பிற்கு முற்றுப்புள்ளி வைப்பதுடன், சுன்னாவை அறிமுகம் செய்வதும் நமது கடமையாகும்.

உறவினர்களை ஸியாரத் செய்தல் என்ற வழிமுறை யின் கீழ் ஜும்ஆ நாளையும் பெருநாள் தினத்தையும் குறிப்பாக்கி ஸியாரத் செய்வதைத் தவிர்த்து இடையிடையே சென்று ஸியாரத்தை நிறைவேற்ற வேண்டும்.

ஸியாரத்தின் போது கூறவேண்டிய பிரார்த்தனை:

السَّلَامُ عَلَيْكُمْ دَارَ قَوْمٍ مُؤْمِنِينَ وَإِنَّا إِنْ شَاءَ اللهُ بِكُمْ لَاحِقُونَ

“அஸ்ஸலாமு அலைக்கும் (D)தார கௌமின் முஃமினீன். வஇன்னா இன்ஷா அல்லாஹு பிகும் லாஹிகூன்” (புகாரி)

பொருள்:

இறை நம்பிக்கையாளர் கூட்டமே உங்கள் மீது சாந்தி நிலவட்டுமாக! அல்லாஹ்வின் நாட்டப்படி நாமும் உங்களுடன் இணையக் கூடியவர்களே!

மற்றுமொரு துஆ.

اَلسَّلاَمُ عَلَيْكُمْ دَارَ قَوْمٍ مُؤْمِنِيْنَ وَأَتَاكُمْ مَا تُوْعَدُوْنَ. غَدًا مُؤَجَّلُوْنَ وَإِنَّا إِنْ شَاءَ اللهُ بِكُمْ لاَحِقُوْنَ (أخرجه مسلم)

“அஸ்ஸலாமு அலைக்கும் (D)தார கைமின் முஃமினீன். வஅதாகும் மாதூஅ(D)தூன். ங(D)தன் முஅஜ்ஜலூன். வஇன்னா இன்ஷா அல்லாஹு பிகும் லாஹிகூன்”

பொருள்: இறை நம்பிக்கையாளர் கூட்டமே உங்கள் மீது சாந்தி நிலவட்டுமாக! உங்களுக்கு விதிக்கப்பட்டது உங்களை வந்தடைந்து விட்டது. நாம் நாளைவரை விட்டுவைக்கப் பட்டிருக் கின்றோம். அல்லாஹ்வின் நாட்டப்படி நாமும் உங்களை வந்தடையக் கூடியவர்களே!

மற்றுமொரு துஆ.

السَّلَامُ عَلَى أَهْلِ الدِّيَارِ مِنْ الْمُؤْمِنِينَ وَالْمُسْلِمِينَ وَيَرْحَمُ اللهُ الْمُسْتَقْدِمِينَ مِنَّا وَالْمُسْتَأْخِرِينَ وَإِنَّا إِنْ شَاءَ اللهُ بِكُمْ لَلَاحِقُونَ (أخرجه مسلم)

“அஸ்ஸலாமு அஹ்லத்(D)தியாரி மினல் முஃமினீன் வல்முஸ்லிமீன் வயர்ஹமில்லாஹுல் முஸ்தக்(D)திமீன மின்னா, வல் முஸ்தஃஹிரீன். வஇன்னா இன்ஷா அல்லாஹு பிகும் லாஹிகூன்”

பொருள்: “நம்பிக்கையாளர்களான, முஸ்லிம்களான வீட்டுடையார் மீது (அல்லாஹ்வின்) சாந்தி நிலவட்டுமாக! எம்மில் முந்திச் சென்றோருக்கும், பின்னால் வருவோருக்கும் அல்லாஹ் அருள்பாலிப்பானாக! அல்லாஹ்வின் நாட்டப்படி நாமும் உங்களை வந்தடையக் கூடியவர்களே!”

மஸ்ஜிதுன் நபவிக்காகவே ஸியாரத்:

மதீனா செல்வோர் நபிகள் நாயகம் (ﷺ) அவர்களின் பள்ளியைத் தரிசிக்கும் நோக்கிலேயே பயணம் செய்ய வேண்டும். அவர்களின் கப்ரை மாத்திரம் தரிசிப்பதாக இருக்கக் கூடாது.

எனது இந்த பள்ளியில் (தொழப்படும்) ஒரு தொழுகையானது மஸ்ஜிதுல் ஹராம் பள்ளியைத் தவிர ஏனைய பள்ளிகளில் தொழப்படுகின்ற ஆயிரம் தொழுகை–களைவிட சிறந்தாகும். என நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். (புகாரி, முஸ்லிம், திர்மிதி, நஸயி, இப்னு மாஜா , பைஹகி)

“எனது இந்தப் பள்ளி, மஸ்ஜிதுல் ஹராம் (மக்கா) பள்ளிவாசல், மஸ்ஜிதுல் அக்ஸா ஆகிய மூன்று பள்ளி களுக்கே தவிர (உலகின்) வேறு எந்தப் பள்ளிகளுக்கும் நன்மை நாடிப் பயணம் செய்யக் கூடாது என நபிகள் நாயகம் (ﷺ) அவர்கள் கூறியுள்ளார்கள்.” (புகாரி. முஸ்லிம்).

எனவே நமது பயணத்தில் நபிகள் நாயகம் (ﷺ) அவர்களின் பள்ளியைத் தரிசிக்க செல்வதாக நிய்யத் செய்து, பின் ஸியாரத் செய்வதே சிறந்த வழிமுறையாகும்.

மஸ்ஜிதுன் நபவியை அடைந்ததும்...:

மஸ்ஜிதுன் நபவியை அடைந்ததும் பள்ளியில் பிரவேசிக்கும் ஒழுங்கைப் பேணிப் பிரவேசித்து “தஹிய்யதுல் மஸ்ஜித்” இரண்டு ரகஅத் தொழுதல். பின்னர் நபிகள் நாயகம் (ﷺ) அவர்களின் மண்ணறைக்கு வந்து,

اَلسَّلاَمُ عَلَيْكَ أَيُّهَا النَّبِيُّ وَرَحْمَةُ اللهِ وَبَرَكَاتُهُ

“அஸ்ஸலாமு அலைக்க அய்யுஹன் நபிய்யு வரஹ்மதுல்லாஹி, வபரகாத்துஹு”

பொருள்:

நபியே! உங்கள் மீது சாந்தியும், அல்லாஹ்வின் அருளும், பாக்கியங்களும் உண்டாகட்டுமாக!” எனத் தொழுகையில் கூறும் பிரார்த்தனையைக் கூறுதல். பின் அபூபக்கர் (ﷺ) அவர்களின் மண்ணறையை நோக்கி,

السلام عليك يا أبا بكر رضي الله عنك

“அஸ்ஸலாமு அலைக்க யா அபாபக்ர் ரழியல்லாஹு அன்க”

அபூபக்ர் (ﷺ) அவர்களே உங்கள் மீது சாந்தி உண்டாகட்டும்! அல்லாஹ் உங்களைப் பொருந்திக் கொள்வானாக! என்றும்,

பின் உமர் (ﷺ) அவர்களின் மண்ணறையை நோக்கி,

السلام عليك يا عمر رضي الله عنك

“அஸ்ஸலாமு அலைக்க யா உமர் ரலியல்லாஹு அன்க”

“உமர் (ﷺ) அவர்களே உங்கள் மீது சாந்தி உண்டாகட்டும் என்றும், வெளியேறுதல்; அல்லது கிப்லாவை முன்னோக்கியவாறு பிரார்த்தித்தல். நபி (ﷺ) அவர்களிடம் பிரார்த்திப்பது ஹராமாகும்.

நபித்தோழர்களைத் திட்டுவது பெரும் பாவமாகும்:

‘**ஷீஆக்கள்**’ என்ற ஒரு பிரிவினர் ஹஜ் காலங்களில் பல மார்க்க விரோத செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர். அவற்றில் நபித்தோழர்களை “மதம் மாறியோர்” ஆட்சியை அபகரித்த அபூபக்கர், உமர் போன்ற ஆதாரமற்ற பொய்களைத் தமது ஹாஜிகளுக்கு போதனை செய்வர்.

அவர்களுக்கு மாற்றமாக நாம் நமது இரண்டு கலீஃபாக்களின் மண்ணறைகளில் ஸலாம் உரைத்து அவர்களைப் பொருந்திக் கொள்ளும் வார்த்தைகள் மூலம் அவர்களை நாம் கண்ணியப்படுத்த வேண்டும்!



51 ஹஜ்ஜை முடித்து நாடு திரும்பும் போது

நபிகள் நாயகம் (ﷺ) அவர்கள் பெரும் படையுடனோ அல்லது சிறு குழுவுடனோ போர்க்களம் சென்று அல்லது பயணத்தை முடித்து அல்லது ஹஜ் அல்லது உம்ராக் கடமைகளை முடித்து வீடு திரும்பினால் பயணத்தில் ஓதும் துஆக்களோடு சேர்த்து,

لَا إِلٰهَ إِلَّا اللهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ لَهُ الْمُلْكُ وَلَهُ الْحَمْدُ وَهُوَ عَلَى كُلِّ شَيْءٍ قَدِيرٌ.

آيِبُونَ تَائِبُونَ عَابِدُونَ لِرَبِّنَا حَامِدُونَ صَدَقَ اللهُ وَعْدَهُ وَنَصَرَ عَبْدَهُ وَهَزَمَ الْأَحْزَابَ وَحْدَهُ.

லாயிலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லாஷரீகலஹு, லஹுல் முல்க் வலஹுல் ஹம்து, வஹுவ அலா குல்லி ஷையின் கதீர், ஆயிபூன, தாயி (B)பூன,ஆ(B) பிதூன லிரப் (B)பினா ஹாமிதூன். ஸதகல்லாஹு வஃதஹு, வநஸர அ(B) வஹஸ(Z) மல் அஹ்(Z)ஸா(B)ப வஹ்தஹ் எனக் கூறுவார்கள்.
(நூல்: புகாரி, முஸ்லிம்)

பொருள்:

வணக்கத்திற்கு தகுதியானவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் இல்லை. அவன் தனித்தவன். அவனுக்கு எந்த இணை, துணையும் இல்லை. ஆட்சியும் புகழும் அவனுக்கே உரியன. அவன் அனைத்து வஸ்துக்கள் மீதும் ஆற்றல் மிக்கவன். நாம் இறைவனின் பக்கம் மீளக் கூடியவர்கள்.

அவனிடம் பாவமன்னிப்பு வேண்டுபவர்கள். நமது இரட்சகனை வணங்கி, அவனைப் புகழ்கிறோம். அல்லாஹ் தனது வாக்கை உண்மைப்படுத்தினான். அவனது அடியாருக்கு உதவி யளித்தான். (நமது) எதிரிகளை தனித்தவனாக நின்றே தோற்கடித்தான்." (நூல்: புகாரி, முஸ்லிம்)

இறைத் தூதரின் பள்ளியில் தொழுவதன் சிறப்பு

عن أَبي هُرَيْرَة: أن رَسُول الله ﷺ قالَ: صَلاة فِي مَسْجِدي هَذا خير من ألف صَلاة فِيما سواهُ إلّا المَسْجِد الحَرام

(أخرجه البُخارِيّ ومُسلم والتِّرْمِذِيّ والنَّسائِيّ وابْن ماجة والبَيْهَقِيّ)

எனது இந்த பள்ளியில் (தொழப்படும்) ஒரு தொழுகையானது மஸ்ஜிதுல் ஹராம் பள்ளியைத் தவிர ஏனைய பள்ளிகளில் தொழப்படுகின்ற ஆயிரம் தொழுகை-களைவிட சிறந்தாகும். என நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(புகாரி, முஸ்லிம், திர்மிதி, நஸயி, இப்னு மாஜா , பைஹகி)



மஸ்ஜிதுன் நபவி



முடிவுரை

இஸ்லாம் பணத்தைக் கொடுத்து பயணம் செய்து நிறைவேற்றுமாறு பணிக்கின்ற மிகப்பெரும் கடமையாக ஹஜ் விளங்குகின்றது. ஒருவரின் ஹஜ் சுவனத்தைத் தேடித் தரவும், இறை அங்கீகாரத்தைப் பெறவும் அவரது தூய எண்ணமும் தூய பணமும், தூய வணக்கமும் காரணமாக அமைகின்றன.

எனவே, புனிதமான பிரதேசங்களில் நிறைவேற்றப் படுகின்ற புனிதமான இக்கடமை நிறைவேற பணம், எண்ணம், வணக்கம் என்பனவற்றை இஸ்லாமிய விதிகள் மற்றும் வழிகாட்டல்களின் படி அமைத்தல் அவசியமாகும். அப்போதுதான் அது அங்கீகரிக்கப்பட்ட வணக்கமாக மாறும். அல்லாஹ் நமது ஹஜ்ஜை அங்கீகரிக்கப்பட்ட ஹஜ்ஜாக ஆக்கி அருள் புரிவானாக!

ஹஜ், உம்றா வழிகாட்டி என்ற முதல் பதிப்பில் பல்வேறு மாற்றங்கள் செய்து 'நபி வழியில் ஹஜ்-உம்றா' என்ற பெயரில் வெளியிடப்படுகின்ற இந்நூலின் பணி பல சிரமங்களுக்கு மத்தியில் சிறப்பாக முடிய அருள்பாக்கியம் செய்த அல்லாஹ்வே அனைத்துப் புகழுக்கும் சொந்தக்காரன். இறுதி நபி முஹம்மத் (ﷺ) அவர்கள் மீதும் நம் மீதும் அல்லாஹ்வின் சாந்தியும் சமாதானமும் என்றென்றும் உண்டாகட்டுமாக! பிரார்த்தனையுடன்,

எம்.ஜே.எம். ரிஸ்வான் மதனி



உசாத் துணைகள்

المصادر والمراجع

١) القرآن الكريم

٢) البخاري ومسلم وأبوداود والنسائي وابن ماجه وغيرها من متون الكتب الحديثية

٣) زاد المعاد لابن القيم الجوزية رحمه الله

٤) فقه العبادات للإمام محمد بن صالح العثيمين رحمه الله

٥) صفة الحج والعمرة والزيارة للإمام عبد العزيز بن باز رحمه الله

٦) فتح الباري شرح صحيح البخاري للإمام ابن حجر العسقلاني رحمه الله

٧) شرح النووي على صحيح مسلم للإمام النووي رحمه الله

٨) الشرح الممتع على زاد المستقنع للإمام محمد بن صالح العثيمين رحمه الله

٩) سنن الدارمي للإمام الدارمي رحمه الله

١٠) عون المعبود شرح سنن أبي داود للإمام شمس الحق العظيم آبادي

١١) فتاوى نور على الدرب للإمام محمد بن صالح العثيمين رحمه الله

١٢) أسنى المطالب للإمام محمد بن درويش البيروتي الشافعي رحمه الله

١٣) العلل المتناهية للإمام ابن الجوزي رحمه الله

١٤) الموسوعة الميسرة في الإعجاز العلمي د / شحاتة صقر

١٥) شرح سنن النسائي للشيخ عبد العزيز الراجحي

١٦) موقع ملتقى أهل الحديث

١٧) العقود الدرية من مناقب شيخ الإسلام ابن تيمية رحمه الله

١٨) مجمع الزوائد ومنبع الفوائد للإمام نور الدين الهيثمي رحمه الله

١٩) سلسلتا الأحاديث الصحيحة والضعيفة للإمام الألباني رحمه الله

٢٠) المكتبة الشاملة -الإصدار الثالث

٢١) موقع ويكيبيديا


٢٢) ذم الكلام وأهله // تأليف أبي إسماعيل المعروف بـ أبي إسماعيل الهروي رحمه الله

٢٣) البدع والنهي عنها المؤلف// أبو عبد الله محمد بن وضاح بن بزيع المرواني رحمه الله

٢٤) كتاب التوحيد للشيخ صالح بن فوزان الفوزان أطال الله عمره

رَبَّنَا اغْفِرْ لِي وَلِوَالِدَيَّ وَلِلْمُؤْمِنِينَ يَوْمَ يَقُومُ الْحِسَابُ ﴿٤١﴾

எங்கள் இரட்சகனே! எனக்கும், எனது பெற்றோருக்கும் நம்பிக்கையாளர்களுக்கும் (உனது) விசாரணை நடைபெறும் நாளில் மன்னிப்பளிப்பாயாக! (14:41)



Graphic By: M.Z. Muhammed - Galle 0777 42 43 09 / 07 16 16 82 82